தினபூமி
thinaboomi.com

மதுரை, திங்கள், செப்டம்பர் 05, 2022 ▸சென்னை ▸மதுரை ▸திருச்சி ▸கோவை ▸நெல்லை ▸சேலம் ▸வேலூர் ▸பாண்டிச்சேரி


உலகம்


**பாராசூட் திறக்க தாமதம்: ஸ்கை டைவிங்கில் ஈடுபட்ட டிக்டாக் பெண் பிரபலம் பலி**



பக்கம் 2

இந்தியா

**மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத்சிங் இன்று மங்கோலியா பயணம்**



பக்கம் 3

விளையாட்டு

**இந்திய மகளிர் ஆக்கி அணி வெண்கலப்பதக்கம் வென்ற விதம் உத்வேகம் அளித்தது: நவ்ஜோத் கவுர்**



பக்கம் 7



● மதுரை அருள்மிகு மீனாட்சி அம்மன் திருக்கோவிலில் நடைபெற்று வரும் ஆவணி திருவிழாவின் 7-ம் நாளான நேற்று வளையல் விற்ற லீலையில் சொக்கநாத பெருமான் பக்தர்களுக்கு அருள்பாலித்தார்.

அரசு பள்ளிகளில் படித்து உயர்கல்வி பயிலும்

# மாணவிகளுக்கு மாதம் ரூ.1,000 வழங்கும் திட்டம்

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இன்று தொடங்கி வைக்கிறார்

சென்னை, செப். 05-

அரசு பள்ளிகளில் படித்து உயர்கல்வி பயிலும் மாணவிகளுக்கு மாதம் ரூ.1,000 வழங்கும் திட்டத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் இன்று (5-ம் தேதி) தொடங்கி வைக்கிறார்.

அரசு பள்ளிகளில் 6-ம் வகுப்பு முதல் பிளஸ்-2 வரை பயின்று கலை, அறிவியல் கல்லூரிகள், பொறியியல், மருத்துவம், சட்டம், வேளாண்மை, கால்நடை மருத்துவம், பாலிடெக்னிக் உள்ளிட்ட உயர்கல்வி பயிலும் மாணவிகளுக்கு மூவலூர் ராமாமிர்தம் அம்மையார் உயர்கல்வி உறுதியளிப்பு திட்டத்தின் கீழ் மாதம் ரூ.1,000 வழங்கப்படும் என முதல்வர் மு.க. ஸ்டாலின் அறிவித்திருந்தார்.

இந்த உதவித் தொகை நேரடியாக வங்கி கணக்கில் செலுத்தப்படும் என்றும் அரசுப் பள்ளிகளில் படித்து, உயர்கல்வி பயிலும் மாணவியருக்கு மாதந்தோறும் ரூ.1,000 உயர்கல்வி உறுதித் தொகை வழங்கும் திட்டத்தில் தகுதியான மாணவியரின் விவரங்களை இணையதளத்தில் உள்ளீடு செய்ய வேண்டும் என்று உயர்கல்வித்துறை உத்தரவிட்டிருந்தது. அதை தொடர்ந்து உதவித் தொகை பெறும் மாணவிகளின் எண்ணிக்கையை இறுதி செய்யும் பணி தீவிரமடைந்துள்ளது.

இந்த நிலையில், தமிழகத்தில் அரசுப் பள்ளிகளில் படித்து கல்லூரிகளில் பயிலும் மாணவியருக்கு மாதம் ரூ.1,000 வழங்கும் திட்டத்தை இன்று 5-ம் தேதி ஆசிரியர் தினத்தன்று, முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைக்கிறார். இந்த தொடக்க விழா மற்றும் மாதிரிப் பள்ளிகள், சீர்மிகு பள்ளிகள் தொடக்க விழாவில் டெல்லி முதல்வர் அர்விந்த் கெஜ்ரிவால் சிறப்பு விருந்தினராக பங்கேற்க உள்ளார்.

உயர்கல்வி உறுதி திட்டத்தில் மாதம் ரூ. 1000 பெற 90 ஆயிரம் மாணவிகள் தேர்வாகியுள்ளதாகவும், முதற்கட்டமாக சுமார் ஒரு லட்சம் மாணவியருக்கு மாதந்தோறும் ரூ.1,000 வழங்கப்பட உள்ளது எனவும் கூறப்படுகிறது.

நீடிக்கும் அரசியல் நெருக்கடி எதிரொலி:

# ஜார்க்கண்ட் சட்டசபையில் இன்று நம்பிக்கை வாக்கெடுப்பு

## ஹேமந்த் சோரன் அரசு தப்புமா?

ராஞ்சி, செப். 05-

ஜார்கண்ட் அரசியலில் நிலவும் உச்சகட்ட குழப்பங்களுக்கு மத்தியில் அம்மாநில சட்டசபையில் இன்று நம்பிக்கை வாக்கெடுப்பு நடைபெறுகிறது. இந்த நம்பிக்கை வாக்கெடுப்பில் ஹேமந்த் சோரன் வெற்றி பெறுவார் என நம்பப்படுகிறது.

ஜார்க்கண்ட் மாநிலத்தில் ஜார்க்கண்ட் முக்தி மோர்ச்சா, காங்கிரஸ் இணைந்து கூட்டணி ஆட்சி அமைத்துள்ளன. முதல்வராக இருக்கும் ஜார்க்கண்ட் முக்தி மோர்ச்சாவின் ஹேமந்த் சோரன், நிலக்கரி சுரங்க ஒதுக்கீட்டை தமது பெயரில் பெற்றிருந்தார். இது மக்கள் பிரதிநிதித்துவ சட்டத்துக்கு எதிரானது என தேர்தல் ஆணையத்திடம் பா.ஜ.க. புகார் கொடுத்தது. பா.ஜ.க.வின் இந்த புகாரை விசாரித்த தேர்தல் ஆணையம், மக்கள் பிரதிநிதித்துவ சட்டத்தை மீறிய ஹேமந்த் சோரனின் எம்.எல்.ஏ. பதவியை ரத்து செய்ய, மாநில கவர்னர் ரமேஷ் பாய்ஸ்க்கு பரிந்துரைத்தது. இதனால் ஜார்க்கண்ட் மாநில அரசியலில் பெரும் பரபரப்பு நிலவியது.

இந்த நிலையில் தேர்தல் ஆணையத்தின் பரிந்துரையை ஏற்று கவர்னர், ஜார்க்கண்ட் முதல்வர் ஹேமந்த் சோரனின் எம்.எல்.ஏ. பதவியை பறிக்கலாம் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் தற்போது வரை கவர்னர் எந்த முடிவும் அறிவிக்காமல் உள்ளார். அதை தொடர்ந்து ஜார்க்கண்ட் மாநில அரசியல் குழப்பத்தை பயன்படுத்தி கூட்டணி எம்.எல்.ஏ.க்களை பா.ஜ.க. விலைபேசி விடக்கூடும் என்பதால் தமது ஆதரவு எம்.எல்.ஏக்களை அழைத்துக் கொண்டு ஒவ்வொரு மாநிலமாக முதல்வர் ஹேமந்த் சோரன் வலம் வந்தார். அதை தொடர்ந்து தமது ஆதரவு எம்.எல்.ஏக்களுடன் சத்தீஸ்கர் மாநிலத்தில் ஹேமந்த் சோரன் முகாமிட்டிருந்தார். தற்போது இந்த எம்.எல்.ஏக்கள் ராஞ்சி திரும்பி விட்டனர்.

இதனிடையே ஜார்க்கண்ட் மாநில கவர்னர் ரமேஷ் பாய்ஸை ஆளும் கூட்டணி கட்சி எம்.எல்.ஏக்கள் சந்தித்து மனு ஒன்றை அளித்தனர். அதில், தேர்தல் ஆணையம் என்ன பரிந்துரை செய்துள்ளது? என்பது குறித்து விளக்கமளிக்க வேண்டும் என்று அவர்கள் வேண்டுகோள் விடுத்திருந்தனர். இந்த நிலையில் திடீரென கவர்னர் ரமேஷ் பாய்ஸ், டெல்லி சென்றார்.

இத்தகைய பரபரப்பான சூழ்நிலையில் ஹேமந்த் சோரன் அரசு மீது இன்று நம்பிக்கை வாக்கெடுப்பு நடைபெற உள்ளது. அதாவது தமது அரசுக்கு முழு பெரும்பான்மை உள்ளது என்பதை ஹேமந்த் சோரன் தாமாகவே முன்வந்து நிரூபிக்க உள்ளார். 81 எம்.எல்.ஏக்களை கொண்ட ஜார்க்கண்ட் சட்டசபையில், ஜார்க்கண்ட் முக்தி மோர்ச்சா 30, காங்கிரஸ் 18, ராஷ்டிரிய ஜனதா தளம்- 1, பா.ஜ.க. கூட்டணி- 28 என கட்சிகளின் பலம் உள்ளது.

இந்த நிலையில் நிலவியுள்ள இந்த நெருக்கடிக்கு தீர்வுகாணும் வகையில் சட்டசபையில் தனது அரசின் பெரும்பான்மையை நிரூபிக்க ஹேமந்த் சோரன் முடிவெடுத்துள்ளார். அதன்படி தானே முன்வந்து இன்று நம்பிக்கை தீர்மானம் கொண்டுவர திட்டமிட்டுள்ளார். இதற்காக இன்று சட்டப்பேரவை கூட்டம் நடைபெற உள்ளது. அப்போது நம்பிக்கை வாக்கெடுப்பில் ஹேமந்த் சோரன் வெற்றி பெறுவார் என நம்பப்படுகிறது.

அ.தி.மு.க. பொதுக்குழு வழக்கு:

# சுப்ரீம் கோர்ட்டில் எடப்பாடி கேவியட் மனுத்தாக்கல்

## தங்கள் தரப்பு வாதத்தையும் கேட்க கோரிக்கை

புதுடெல்லி, செப். 05-

அ.தி.மு.க. பொதுக்குழு தொடர்பாக சுப்ரீம் கோர்ட்டில் எடப்பாடி பழனிசாமி கேவியட் மனு தாக்கல் செய்துள்ளார்.

கடந்த ஜூலை 11-ம் தேதி எடப்பாடி பழனிசாமி தரப்பு நடத்திய அ.தி.மு.க. பொதுக்குழு கூட்டம் செல்லும் என்று சென்னை ஐகோர்ட்டின் இரு நீதிபதிகள் அடங்கிய அமர்வு தீர்ப்பளித்தது.

சென்னை ஐகோர்ட்டின் இந்த தீர்ப்பு ஓ பன்னீர் செல்வம் தரப்புக்கு பெரும் பின்னடைவாக அமைந்தது. இதையடுத்து, சென்னை ஐகோர்ட்டின் தீர்ப்பை எதிர்த்து சுப்ரீம் கோர்ட்டில் மேல் முறையீடு செய்யப் போவதாக ஓ. பன்னீர் செல்வம் அறிவித்து இருந்தார். சுப்ரீம் கோர்ட்டில் ஓ. பன்னீர் செல்வம் சார்பில் மேல் முறையீட்டு மனு தாக்கல் செய்ய இருப்பதாக கூறப்படுகிறது.

இந்த நிலையில், அ.தி.மு.க. பொதுக்குழு தொடர்பான வழக்கில் எடப்பாடி பழனிசாமி சுப்ரீம் கோர்ட்டில் கேவியட் மனு தாக்கல் செய்துள்ளார்.

அதில், பொதுக்குழு தொடர்பாக வழக்கு தொடர்ந்தால் தங்கள் தரப்பு வாதத்தை கேட்காமல் உத்தரவு பிறப்பிக்கக் கூடாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தென்னிந்திய மக்கள் பயன்பெறும் வகையில்

# சென்னையில் சுப்ரீம் கோர்ட் கிளையை அமைக்க வேண்டும்

## நீதியரசர்களிடம் முதல்வர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தல்

சென்னை, செப். 05-

நீதித்துறையின் உட்கட்டமைப்புகளை மேம்படுத்துவதில் தமிழக அரசு சிறப்புக் கவனம் செலுத்தி வருகிறது என்றும், சுப்ரீம்கோர்ட்டிற்கென ஒரு கிளை நீதிமன்றம் சென்னையில் அமைக்க வேண்டும் என்றும், ஐகோர்ட்டில் தமிழ் வழக்காடு மொழியாக அமைய வேண்டும் என்றும் முதல்வர் மு.க. ஸ்டாலின் பேசினார்.

சென்னை ஐகோர்ட் வளாகத்தில் நடைபெற்ற ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டிட அடிக்கல் நாட்டு விழாவில் முதல்வர் மு.க. ஸ்டாலின் கலந்து கொண்டு பேசியதாவது,

நீதியும், நேர்மையும் தமிழர்களின் வாழ்வியலில் இரண்டறக் கலந்துவிட்டவை. அதற்கான சான்றுகள் தமிழிலக்கியங்களில் கொட்டிக்கிடக்கின்றன. வள்ளுவரும், இளங்கோவடிகளும், புறநானூற்றுப் புலவர்கள் பலரும், நீதியின் மேண்மையைப் பற்றியும், செங்கோல் வழுவாமையின் சிறப்பினைப் பற்றியும், எப்போதும் உயர்த்திப் பிடித்துள்ளார்கள். அத்தகைய ஒரு திராவிட மரபுவழி வந்த நம் பண்பாட்டில் வளர்ந்த இந்த அரசு, அதே உயர்ந்த இடத்தில் நீதித்துறையை வைத்து, மதித்து அதற்கான தேவைகளை நிறைவேற்றி வருகிறது.

சென்னையில் ஏராளமான நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன. அவை அனைத்தையும் ஒரே இடத்தில் இருந்து செயல்பட வைக்க வேண்டும், அதுதான் சிறப்பானதாக இருக்கும். நீதித்துறையினர் நினைத்து அரசுக்குப் பரிந்துரை செய்ததும், உடனே அதனை நாங்கள் முழுமையாக ஏற்றுக் கொண்டு ஒப்புதலை வழங்கினோம். இதன் மூலமாக சென்னையில் இருக்கக்கூடிய நூற்றுக்கும் மேற்பட்ட நீதிமன்றங்கள் ஒரே இடத்தில் இருந்து செயல்படப் போகின்றன. இது பொதுமக்களுக்கு ஏற்பட்ட வசதி மட்டுமல்ல, வழக்கறிஞர்களுக்கும் இது மிகப்பெரிய வசதி தான். அலைச்சல் தவிர்த்து, அமைதியாகப் பணியாற்ற இது வழிவகுக்கும்.

நீதித்துறையின் உட்கட்டமைப்புகளை மேம்படுத்துவதில் தமிழக அரசு சிறப்புக் கவனம் செலுத்தி வருகிறது. உயிரிழந்த வழக்கறிஞர்களின் வாரிசுதாரர்களுக்கு சேமநல நிதியானது 7 லட்சம் ரூபாயில் இருந்து 10 லட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது என்று கடந்த ஏப்ரல் 23அன்று சென்னை ஐகோர்ட் வளாகத்தில் நடந்த விழாவில் இதற்கான முறையான அறிவிப்பை வெளியிட்டேன்.

நீதித்துறையின் உட்கட்டமைப்புத் தேவைகளுக்காக பல்வேறு நீதிமன்றங்கள் அமைக்கும் வகையில் 4.24 ஏக்கர் நிலத்தை நீதித்துறைக்கு அரசு வழங்கி ஆணையிட்டுள்ளது என்பதையும் குறிப்பிட்டேன். 9 அடுக்கு கட்டிடம் கட்ட 315 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்த அரசு பொறுப்பேற்ற மே மாதம் 2021 முதல், 3 கூடுதல் மாவட்ட நீதிமன்றங்கள், 12 சார்பு நீதிமன்றங்கள், 6 முதன்மை குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் மற்றும் 14 மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் உள்ளிட்ட 35 புதிய நீதிமன்றங்கள், 54 கோடியே 85 லட்சம் ரூபாய் செலவில் அமைக்க ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

கோயம்புத்தூர், காஞ்சிபுரம், திருவாரூர் மற்றும் திருப்பூர் மாவட்டங்களில் பட்டியல் இனத்தவருக்கு எதிரான குற்ற வழக்குகளை விசாரிக்க 4 சிறப்பு நீதிமன்றங்கள் அமைக்க அரசு ஆணை வெளியிட்டுள்ளது. புதியதாக நீதிமன்ற கட்டிடங்கள் கட்டுதல், குடியிருப்பு கட்டடங்கள் கட்டுதல், பழைய நீதிமன்ற கட்டிடங்களை பராமரித்தல் ஆகிய பணிகளுக்காக, தமிழக அரசு 2021-22 மற்றும் 2022-23 ஆகிய நிதியாண்டுகளில் மொத்தம் 268.97 கோடி ரூபாய் ஒப்பளிப்பு தந்திருக்கிறது. கீழமை நீதிமன்றங்களுக்கு பல்வேறு நிலையிலான 155 பணியாளர் பணியிடங்களை உருவாக்கி ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

சென்னை ஐகோர்ட், மதுரை கிளை நீதிமன்றம் மற்றும் கீழமை நீதிமன்றங்களுக்கு கணினி மற்றும் கணினி தொடர்பான கட்டமைப்புகளை உருவாக்குவதற்கு மொத்தம் ரூபாய் 11.63 கோடி ஒப்பளித்துள்ளது.

நீதித்துறையின் நீடித்த சிறப்பான செயலாக்கத்துக்கு இந்த அரசு பல்வேறு நடவடிக்கைகளை தொடர்ந்து எடுக்கும் என்று உறுதி அளிக்கிறேன்.

சில கோரிக்கைகளை, தமிழகத்தின் சார்பாக சுப்ரீம் கோர்ட் நீதியரசர்களின் கனிவான கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன். முதலாவதாக தென்னிந்திய மக்கள் பயன்பெறும் வகையில் சுப்ரீம்கோர்ட்டிற்கென ஒரு கிளை நீதிமன்றம் சென்னையில் அமைக்க வேண்டும். இரண்டாவதாக, நீதி கேட்டு வந்திருக்கும் மக்கள் நீதிமன்றத்தில் நடக்கும் விசாரணையின் தன்மையினை புரிந்து கொள்ளும் வகையில் ஐகோர்ட்டில் தமிழ் வழக்காடு மொழியாக அமைய வேண்டும். மூன்றாவதாக, நீதிபதிகள் நியமனங்கள் சமூகத்தின் அனைத்துத் தரப்பு மக்களின் பிரதிநிதித்துவம் இருக்கும் வகையில் நியமனங்கள் அமைய வேண்டும்.

நீதித்துறையின் ஒரு தீர்ப்பு அல்ல, ஒற்றைச் சொல்லையும் மதிக்கும் அரசாக தமிழக அரசு செயல்பட்டு வருகிறது. எனவே நீதித்துறையின் கட்டமைப்புகளை மேம்படுத்துவதற்கான அனைத்து உதவிகளையும், தமிழக அரசு எப்போதும் செய்யும் என்ற உறுதியை அளிக்கிறேன்.

இவ்வாறு அவர் பேசினார்.

பட்டினப்பாக்கம், காசிமேடு உள்ளிட்ட இடங்களில்

# விநாயகர் சிலைகள் வங்கக்கடலில் கரைப்பு

## பாதுகாப்பு பணியில் 15 ஆயிரம் போலீசார்

சென்னை, செப். 05-

சென்னையில்நேற்றுவிநாயகர்சிலைகள் ஊர்வலமாக எடுத்துச்செல்லப்பட்டு கடலில்கரைக்கப்பட்டது.இதையொட்டி பெரும்பாலான சாலைகளில் போக்குவரத்து மாற்றம் செய்யப்பட்டது. மேலும் அசம்பாவிதங்கள் ஏற்படாமல் தடுக்க, 15 ஆயிரம் போலீசாரும், 2 ஆயிரம் ஊர் காவல்படை வீரர்களும் விநாயகர் சிலை ஊர்வல பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர். இதுதவிர சிலைகள் கரைக்கும் இடங்களில்மருத்துவக்குழு,தீயணைப்பு துறையினர், ஆழ்கடல் நீச்சல் தெரிந்த 50 மீனவர்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டு இருந்தனர்.

விநாயகர் சதுர்த்தி கடந்த மாதம் 31-ம் தேதி நாடு முழுவதும் கோலாகலமாக கொண்டாடப்பட்டது. விழாவையொட்டி பலரும் விநாயகர் கோயில்களுக்கு சென்று சிறப்பு வழிபாட்டில் ஈடுபட்டனர். அப்போது அருகம்புல் மாலை, கொலுக்கட்டை, பொங்கல், சுண்டல் போன்றவற்றை படைத்து வழிபாடு செய்தனர். மேலும் தமிழகத்தில் பல்வேறு அமைப்புகள் சார்பில் பொது இடங்களில் ஒரு லட்சத்துக்கும் அதிகமான சிலைகள் நிறுவப்பட்டுவழிபாடுசெய்யப்பட்டுவந்தது. தொடர்ந்து இவ்வாறு நிறுவப்பட்ட சிலைகளானது 3ம் நாள் 5ம் நாள் என நீர் நிலைகளில் கரைப்பதற்காக ஊர்வலமாக எடுத்துச்செல்வது வழக்கம். ஒவ்வொரு ஊர்களிலும் உள்ள முக்கிய நீர் நிலைகளில் இதை கரைப்பார்கள். இதே போல் சென்னையில் விநாயகர் சதுர்த்திக்கு 5 ஆயிரத்துக்கு மேற்பட்ட விநாயகர் சிலைகள் வைக்கப்பட்டு வழிபாடு செய்யப்பட்டதில், 1,352 சிலைகள் பிரம்மாண்ட சிலைகளாகும்.

. இந்த நிலையில் பெரிய விநாயகர் சிலைகளை ஊர்வலமாக எடுத்து சென்று நீர்நிலைகளில் கரைப்பதற்கான ஊர்வலம் நேற்று நடந்தது. இதற்காக சென்னை பட்டினப்பாக்கம் சீனிவாசபுரம், நீலாங்கரை பல்கலைநகர், காசிமேடு மீன்பிடி துறைமுகம், திருவொற்றியூர் பாப்புலர் எடைமேடை பின்புறம் ஆகிய 4 கடற்கரை பகுதிகள், ஏற்கனவே தேர்வு செய்யப்பட்டு இருந்தது. பட்டினப்பாக்கத்தில் டிராலி வசதி மூலம் விநாயகர் சிலைகள் கடலில் கரைக்கப்பட்டது. ஒரு இணை ஆணையர் தலைமையில் 500 போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்தனர். இதுதவிர தீயணைப்புத் துறையினர், மருத்துவ குழுவினர், (ஆம்புலன்ஸ்கள்) தயார் நிலையில் வைக்கப்பட்டு இருந்தது. காசிமேடு, திருவொற்றியூர், நீலாங்கரை கடற்கரை பகுதிகளில் படகில் எடுத்து சென்று சிலைகள் கரைக்கப்பட்டது.

விநாயகர் சதுர்த்தி ஊர்வலத்தில் அசம்பாவிதங்கள் ஏற்படாமல் தடுக்க, சென்னை போலீஸ் கமிஷனர் சங்கர் ஜிவால் உத்தரவின்பேரில் 15 ஆயிரம் போலீசாரும், 2 ஆயிரம் ஊர் காவல் படை வீரர்களும் விநாயகர் சிலை ஊர்வல பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்தனர். இதேபோல் சிலைகளை கரைக்க வருபவர்கள் அலையில் சிக்கிவிட்டால் அவர்களைக் காப்பாற்றவும் ஆழ்கடல் நீச்சல் தெரிந்த 50 மீனவர்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டனர். இது தவிர 22 கண்காணிப்பு கேமராக்கள், கண்காணிப்பு கோபுரங்கள், சாதாரண உடையில் போலீஸ் ரோந்து என பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டு இருந்தது.

அர்ஜெண்டினாவில் ஏ.சி.யில் இருந்து பரவும்

# லெஜியோனேயர்ஸ் நோய் தாக்கி நான்கு பேர் பலி



பியூனஸ் அயர்ஸ், செப். 05-

அர்ஜெண்டினாவில் ஏ.சி. யில் இருந்து பரவும் லெஜியோனேயர்ஸ் நோய் தாக்கியதில் நுரையீரல் தொற்று ஏற்பட்டு நான்கு பேர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்த சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

அர்ஜெண்டினா நாட்டின் வடமேற்கு மாகாணத்தில் உள்ள ஒரு கிளினிக்கில் நான்கு பேர் லெஜியோனேயர்ஸ் நோயால் இறந்தனர். லெஜியோனேயர்ஸ் நோய் என்பது பாக்டீரியாவால் ஏற்படும் ஒரு தீவிரமான நிமோனியா (நுரையீரல் தொற்று) ஆகும். இந்த நோய் முதன்முதலில் 1976-ம் ஆண்டு அமெரிக்க நகரமான பிலடெல்பியாவில் நடந்த அமெரிக்க படைவீரர் குழுவின் கூட்டத்தில் தோன்றியது.

கடந்த திங்கட்கிழமை முதல் பதிவான இந்த இறப்புகள் அனைத்தும், சான்-மிகுவல் டி-டுகுமான் நகரில் உள்ள ஒரே கிளினிக்கில் நிகழ்ந்தன. அந்த கிளினிக்கில் அறுவை சிகிச்சை செய்து கொண்ட 70 வயது பெண் ஒருவரும் பலியானார். 48 வயதான ஒரு நபர் நேற்று முன்தினம் இறந்தார். மேலும் 7 பேருக்கு இந்நோயின் தாக்கம் கண்டறியப்பட்டு அவர்களுக்கு தீவிர சிகிச்சையளிக்கப்படுகிறது. அதில் கிட்டத்தட்ட பாதிக்கப்பட்டுள்ள அனைவரும் அந்த கிளினிக் பணியாளர்கள் ஆவர்.

அமைச்சர் செந்தில் பாலாஜியின்

# டுவிட்டர் பக்கம் முடக்கம் ஹேக்கர்கள் அத்துமீறல்




சென்னை, செப். 05-

தமிழக மின்சாரத் துறை அமைச்சர் செந்தில் பாலாஜியின் டுவிட்டர் கணக்கு மர்ம நபர்களால் ஹேக் செய்யப்பட்டது.

சமீப காலமாகவே அரசியல் பிரமுகர்கள், பிரபலங்களின் சமூக வலைதள பக்கங்கள் ஹேக் செய்யப்பட்டு, தவறான தகவல்கள் பதிவுச் செய்யப்பட்டு வருகின்றன. அந்த வகையில் தமிழக மின்சாரத் துறை அமைச்சர் செந்தில் பாலாஜியின் டுவிட்டர் பக்கம் நேற்று ஹேக் செய்யப்பட்டு, கிரிப்டோகரன்சி தொடர்பாக பதிவிடப்பட்டிருந்தது. அவரது டுவிட்டர் கணக்கின் பெயரும் மாற்றப்பட்டது.

பெயர் மாற்றப்பட்டு வெளியிடப்பட்டுள்ள அப்பதிவில், அனைவருக்கும் வணக்கம், எங்கள் கட்சி அதன் சொந்த கிரிப்டோ வாலட்டை உருவாக்கியுள்ளது. எங்கள் ஆற்றல் வளர்ச்சியில் உங்கள் உதவி எங்களுக்குத் தேவை என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. மேலும், தொடர்ச்சியாக கிரிப்டோ கரன்சி குறித்து பதிவுகள் வந்ததால் அமைச்சர் செந்தில் பாலாஜியை பின் தொடர்பவர்கள் பெரும் அதிர்ச்சிக்கு உள்ளாகினர். ஹேக் செய்யப்பட்ட பல மணி நேரங்களுக்குப் பின்னரும், செந்தில் பாலாஜியின் டுவிட்டர் பக்கம் மீட்கப்படாமல் இருந்தது.

இது குறித்து அமைச்சர் செந்தில்பாலாஜி தனது முகநூல் பக்கத்தில் நேற்று அன்புமிகு நண்பர்களுக்கு, எனது டுவிட்டர் கணக்கு ஹேக் செய்யப்பட்டுள்ளது. இதுகுறித்து கணினி குற்றப் பிரிவுக்கு புகார் அளிக்கப்பட்டுள்ளது என தெரிவித்துள்ளார். மேலும், டுவிட்டர் நிறுவனத்திடமும் புகார் அளிக்கப்பட்டுள்ளதாக தி.மு.க. தகவல் தொழில்நுட்பப்பிரிவு மாநில நிர்வாகி ராஜா தெரிவித்துள்ளார். கடந்த சில மாதங்களுக்கு முன்னர் பிரதமர் மோடியின் டுவிட்டர் பக்கமும் இவ்வாறு ஹேக் செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.

மூக்கையாதேவரின் நினைவு நாள்:

# உசிலம்பட்டியில் நாளை அ.தி.மு.க. மரியாதை

## ஓ.பன்னீர்செல்வம் அறிவிப்பு



சென்னை, செப். 05-

மூக்கையா தேவரின் நினைவு நாளையொட்டி உசிலம்பட்டியில் உள்ள அவரது நினைவிடத்தில் நாளை அ.தி.மு.க. சார்பில் மரியாதை செலுத்தப்படும் என்று ஓ. பன்னீர் செல்வம் தெரிவித்துள்ளார்.


இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிவிப்பில் கூறப்பட்டிருப்பதாவது,

இளமைப் பருவத்திலிருந்தே பொதுப் பணிகளில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு நீதிக்கும், நேர்மைக்கும், நியாயத்திற்கும் போராடியவரும், அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சியின் துணைத் தலைவராகவும், தலைவராகவும் பணியாற்றியவரும், ஆறு முறை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டு திறம்பட பணியாற்றியவருமான பி.கே. மூக்கையா தேவரின் நினைவு தினமான நாளை 6-ம் தேதி (செவ்வாய்க் கிழமை) அன்று காலை 11-00 மணிக்கு மதுரை புறநகர் மேற்கு மாவட்டம், உசிலம்பட்டியில் உள்ள பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் கல்லூரியில் அமைந்திருக்கும் அவரது நினைவிடத்தில் அ.தி.மு.க. சார்பில் முன்னாள் எம்.பி. கோபாலகிருஷ்ணன், முன்னாள் எம்.எல்.ஏ. சுப்புரத்தினம், மதுரை புறநகர் மேற்கு மாவட்ட செயலாளர் முருகேசன், தேனி மாவட்ட செயலாளர் சையதுகான், ரவீந்திரநாத் எம்.பி., தர்மர் எம்.பி., மதுரை புறநகர் மேற்கு மாவட்ட அவைத் தலைவர் அய்யப்பன், மதுரை புறநகர் கிழக்கு மாவட்ட செயலாளர் மேலூர் பாஸ்கரன், மதுரை புறநகர் தெற்கு மாவட்ட செயலாளர் ராமமூர்த்தி, சிவகங்கை மாவட்ட செயலாளர் அசோகன், ரெட்டியார்சத்திரம் ஒன்றிய செயலாளர் பசும்பொன், வேடசந்தூர் ஒன்றிய செயலாளர் சுப்ரமணியன் உள்ளிட்டோர் நினைவு அஞ்சலி செலுத்துவார்கள்.

மேற்படி நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை மதுரை புறநகர் மேற்கு மாவட்ட செயலாளர் முருகேசன் மேற்கொள்வார். இந்நிகழ்ச்சியில், மதுரை மாநகர், மதுரை புறநகர் கிழக்கு, மதுரை புறநகர் மேற்கு, மதுரை புறநகர் தெற்கு ஆகிய மாவட்டங்களில் பல்வேறு பொறுப்புகளில் பணியாற்றி வரும் நிர்வாகிகள், முன்னாள் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், உடன்பிறப்புகள் மற்றும் பொதுமக்கள் பெருந்திரளான அளவில் கலந்து கொண்டு மூக்கையா தேவருக்கு அஞ்சலி செலுத்துமாறு கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு அந்த அறிவிப்பில் ஓ. பன்னீர் செல்வம் தெரிவித்துள்ளார்.

# பிறந்த குழந்தைக்கு பக்கோடா என பெயர் சூட்டிய பிரிட்டன் தம்பதி



லண்டன், செப். 05-

பிரிட்டனில் ஒரு தம்பதி தங்களுக்கு பிறந்த குழந்தைக்கு பகோரா என பெயர் வைத்துள்ளனர். பகோரா என்பது இந்திய உணவான பக்கோடா தான் பகோரா.

இந்த தம்பதி அயர்லாந்தில் உள்ள உணவகத்தில் அடிக்கடி பக்கோடா வாங்கி சாப்பிட்டு வந்துள்ளனர். அதன் சுவையால் ஈர்க்கப்பட்ட அவர்கள், தங்களுக்கு பிறந்த குழந்தைக்கு பகோரா என பெயர் வைத்துள்ளனர். இது குறித்து அந்த தம்பதி கூறுகையில்,

தங்களுக்கு பக்கோடா பிடிக்கும் என்பதால் குழந்தைக்கு பக்கோடா என பெயர் வைத்துள்ளதாக தெரிவித்தனர். இதை அறிந்த அந்த உணவகம் அந்த தம்பதிக்கும், குழந்தைக்கும் வாழ்த்துக்களை தெரிவித்துள்ளது.

அதிகம் பேர் பாஸ்போர்ட் பெற்ற

# மாநிலங்களில் 3-வது இடத்தில் தமிழகம்

புதுடெல்லி, செப். 05-

இந்தியாவில் அதிகம் பேர் பாஸ்போர்ட் பெற்ற மாநிலங்களில் தமிழகம் 3-வது இடத்தில் உள்ளது.

இந்தியாவில் மூன்று வகையான பாஸ்போர்ட் உள்ளது. அதாவது சாதாரண, வழக்கமான பாஸ்போர்ட், டிப்ளமேடிக் பாஸ்போர்ட் மற்றும் அபீஷியல் பாஸ்போர்ட் என்று மூன்று வகை பாஸ்போர்ட்கள் உள்ளன.

ஹென்லி அண்ட் பார்ட்னர்ஸ் நிறுவனத்தின் பாஸ்போர்ட் குறியீட்டில் இந்தியா 87-வது இடத்தைப் பிடித்துள்ளது. இதிலும் அதிகம் பேர் பாஸ்போர்ட் பெற்ற மாநிலங்களில் தமிழகம் 3-வது இடத்தில் உள்ளது.

இந்தியாவில் கடந்த ஜூன் மாதம் 30-ம் தேதி வரை 7,95,19,121 பேர் பாஸ்போர்ட் வைத்துள்ளனர். இதில், அதிகபட்சமாக கேரளாவில் 91,43,099 பேரும், மராட்டியத்தில் 89,32,053 பேரும், தமிழகத்தில் 79,27,869 பேரும் பாஸ்போர்ட் வைத்துள்ளனர். மிசோரம், நாகலாந்து, சிக்கிம், அருணாச்சலப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் குறைவான நபர்கள்தான் பாஸ்போர்ட் வைத்துள்ளனர்.

விசாகப்பட்டினத்தில் போதிய வசதிகள் இல்லை:

# சென்னையில் 8 ஆண்டுகள் நிலை நிறுத்தப்படும் விக்ராந்த் கப்பல்

சென்னை, செப். 05-

விசாகப்பட்டினத்தில் போதிய உள்கட்டமைப்பு வசதிகள் இல்லாத காரணத்தால் ஐ.என்.எஸ். விக்ராந்த் கப்பல் சென்னைக்கு அருகில் உள்ள காட்டுப்பள்ளி துறைமுகத்தில் 8 ஆண்டுகள் வரை நிலைநிறுத்தப்படலாம் எனத் தகவல் வெளியாகியுள்ளது.


ஐ.என்.எஸ். விக்ராந்த் விமானம் தாங்கிக் கப்பலானது ரூ. 23,000 கோடி செலவில் கொச்சி கப்பல் கட்டும் தளத்தில் கட்டப்பட்டது. இந்திய கடற்படை வரலாற்றிலேயே உள்நாட்டில் கட்டப்பட்ட மிகப் பெரிய கப்பல் ஐ.என்.எஸ். விக்ராந்த் ஆகும். இந்தக் கப்பலில் நூறுக்கும் மேற்பட்ட குறு, சிறு, நடுத்தர தொழில் நிறுவனங்களால் தயாரிக்கப்பட்ட கருவிகளும், இயந்திரங்களும் ஏராளமாக பொருத்தப்பட்டுள்ளன. 1,700 வீரர்கள் பயணிக்கும் படியாக உருவாகியுள்ள இக்கப்பலிலிருந்து மிக் - 29கே போர் விமானங்கள், கமோவ் - 31 ஹெலிகாப்டர்கள், எம்ஹெச் - 60ஆர் ஹெலிகாப்டர்கள் ஆகியவற்றை இயக்கவும் தரையிறக்கவும் முடியும். அதிகபட்சமாக சுமார் 28 நாட் வேகத்தில் கப்பலை இயக்க முடியும். கடந்த வெள்ளிக்கிழமையன்று இக்கப்பலை பிரதமர் நரேந்திர மோடி கொச்சி கடற்படைத் தளத்தில் இந்தியக் கடற்படையில் இணைத்து வைத்தார்.

விசாகப்பட்டினத்தில் போதிய உள்கட்டமைப்பு வசதிகள் இல்லாத காரணத்தால் ஐ.என்.எஸ். விக்ராந்த் போர்க்கப்பல் சென்னைக்கு அருகில் உள்ள காட்டுப்பள்ளி துறைமுகத்தில் 8 ஆண்டுகள் வரை நிலைநிறுத்தப்படலாம் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

கப்பலை நிறுத்துவதற்காக இந்திய கடற்படை கடந்த சில ஆண்டுகளாக காட்டுப்பள்ளியில் உள்ள எல் அண்ட் டி கப்பல் கட்டும் நிறுவனத்துடன் பேச்சுவார்த்தை நடத்தி வருவதாகவும் கூறப்படுகிறது. விசாகப்பட்டினத்தில் புதிய தளம் பயன்பாட்டுக்கு தயாராகும் வரை போர்க்கப்பல் காட்டுப்பள்ளியில் தற்காலிகமாக நிலைநிறுத்தப்படும் எனத் தெரிகிறது.

பாரசூட் திறக்க தாமதம்:

# ஸ்கை டைவிங்கில் ஈடுபட்ட டிக்டாக் பெண் பிரபலம் பலி



ஒட்டாவா, செப். 05-

4 ஆயிரம் அடி உயரத்தில் இருந்து ஸ்கை டைவிங்கில் ஈடுபட்ட டிக்டாக் பெண் பிரபலம் பாராசூட் திறக்க தாமதமானதால் பரிதாபமாக பலியானார்.

கனடா நாட்டின் ஒடரியோ மாகாணம் டொரண்டோ பகுதியை சேர்ந்த இளம்பெண் தன்யா பர்டஷி (வயது 21). கல்லூரி மாணவியான இவர் 2017-ம் ஆண்டு நடந்த மிஸ் டீன் கனடா அழகி போட்டியில் பங்கேற்று இறுதி சுற்று வரை சென்றுள்ளார். தன்யா பர்டஷி டிக்டாக்கில் மிகவும் பிரபலமானவர். அவரை ஒரு லட்சத்திற்கும் அதிகமானோர் டிக்டாக்கில் பின் தொடர்கின்றனர்.

இதனிடையே, தன்யா பர்டஷி வானில் இருந்து கிழே பாரசூட்டில் கீழே குதித்து சாகசத்தில் ஈடுபடும் ஸ்கை டைவிங்கில் மிகவும் ஆர்வம் கொண்டவர். அவர், பல முறை 2 பேர் குதிக்கும் வகையில் உதவியாளருடன் வானில் இருந்து குதித்து ஸ்கை டைவிங் சாகசம் செய்துள்ளார். பின்னர் பயிற்சி பெற்று தனியாக ஸ்கை டைவிங் செய்ய உரிமம் பெற்றார்.

இந்நிலையில், தன்யா பர்டஷி டொரண்டோவில் நேற்று முன்தினம் தனியாக ஸ்கை டைவிங் செய்துள்ளார். விமானத்தில் இருந்து 4 ஆயிரம் அடி உயரத்தில் இருந்து தன்யா குதித்துள்ளார். ஆனால், அவர் தாமதமாக பாரசூட்டை திறந்துள்ளார். இதனால், பாரசூட் முழுமையாக திறந்து வேலை செய்வதற்குள் அவர் தரையில் வேகமாக விழுந்தார். இதையடுத்து, தன்யாவை மீட்ட மீட்புக் குழுவினர் அவரை மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். தன்யாவை பரிசோதித்த டாக்டர்கள் அவர் ஏற்கனவே உயிரிழந்து விட்டதாக தெரிவித்தனர். இந்த சம்பவம் தொடர்பாக போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# நேபாளத்தில் 22 பேருடன் சென்ற விமானம் அவசரமாக தரையிறக்கம்



காத்மாண்டு, செப். 05-

நேபாளத்தில் மலைப் பிரதேசமான முஸ்டாங்கிற்குச் சென்று கொண்டிருந்த பயணிகள் விமானம் ஒன்று பொக்ரா விமான நிலையத்தில் அவசரமாக தரையிறக்கப்பட்டது.

நேபாளத்தில் தனியார் விமான சேவை வழங்கும் சம்மிட் ஏர் விமான நிறுவனத்தின் இந்த விமானம், நேற்று காலை 8 மணியளவில் புறப்பட்ட 7 நிமிடத்திற்குள் தொழில்நுட்பக் கோளாறு காரணமாக அவசரமாக தரையிறக்கப்பட்டது. 22 பேருடன் சென்ற விமானம் எஞ்சினில் ஏற்பட்ட தொழில்நுட்ப கோளாறு காரணமாக பொக்ரா விமான நிலையத்திற்கு திரும்பியது.

ஒரே இன்ஜின் உதவியுடன் விமானம் தரையிறங்கியது. விமானத்தில் 18 பயணிகளும் நான்கு பணியாளர்களும் இருந்தனர். இந்த விவகாரம் தொடர்பாக விசாரணை நடைபெற்று வருகிறது என்று விமான நிலைய அதிகாரிகள் தெரிவித்தனர்.

# சிரியா விமான நிலையம் மீது இஸ்ரேல் தாக்குதல்

டமாஸ்கஸ், செப். 05-

சிரியாவின் அலெப்போ நகரில் உள்ள சர்வதேச விமான நிலையம் மீது இஸ்ரேல் ஏவுகணை தாக்குதல் நடத்தியதாக செய்தி நிறுவனம் ஒன்று தெரிவித்துள்ளது.

சிரியா நாட்டில் கடந்த 2011-ம் ஆண்டு உள்நாட்டுப் போர் தொடங்கியதில் இருந்தே அதன் அரசுப் படைகள் மற்றும் அதற்கு ஆதரவாக சண்டையிடும் ஈரான் ஆதரவு படைகளுக்கு எதிராக இஸ்ரேல் தாக்குதல் நடத்தி வருகிறது. இந்நிலையில் சிரியாவின் அலெப்போ நகரில் உள்ள சர்வதேச விமான நிலையம் மீது இஸ்ரேல் கடந்த புதன்கிழமை இரவு ஏவுகணை தாக்குதல் நடத்தியதாக சிரியாவின் சனா செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது. இதில் உயிரிழப்பு ஏதுமில்லை என்று அந்நிறுவனம் கூறியுள்ளது.

பிரிட்டனை மையமாகக் கொண்ட மனித உரிமைகளுக்கான சிரிய கண்காணிப்பகம் இந்த தாக்குதலை உறுதி செய்துள்ளது. விமான ஓடுதளம் மற்றும் கிடங்குளை குறிவைத்து 4 ஏவுகணைகளை செலுத்தி இஸ்ரேல் தாக்குதல் நடத்தியதாக அந்த அமைப்பு கூறியுள்ளது. சமீபத்திய ஆண்டுகளில் சிரியா மீது நூற்றுக்கணக்கான தாக்குதலை இஸ்ரேல் நடத்தியுள்ளது குறிப்பிடத்தக்கது.

# பிரிட்டனின் அடுத்த பிரதமர் யார்? அறிவிப்பு இன்று வெளியாகிறது



லண்டன், செப். 05-

பிரிட்டனின் அடுத்த பிரதமர் குறித்த அறிவிப்பு இன்று திங்கள்கிழமை வெளியாகவுள்ள நிலையில், வெற்றி பெறப் போவது யார் என்ற இறுதிகட்ட பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

கொரோனா தொற்று பரவல் காலத்தில் அரசின் கட்டுப்பாடுகளை மீறி, பிரதமராக இருந்த போரிஸ் ஜான்சன், கேளிக்கை விருந்து நடத்தியதாக குற்றச்சாட்டு எழுந்தது. அது நாட்டில் பெரும் விமர்சனங்களை ஏற்படுத்திய நிலையில், கட்சிக்குள்ளேயே அவருக்கு எதிர்ப்பலைகள் எழுந்தன.

இதையடுத்து அவரது அமைச்சரவையில் நிதியமைச்சராக இருந்த இந்திய வம்சாவளியைச் சேர்ந்த ரிஷி சுனக், போரிஸ் மீது அதிருப்தி தெரிவித்து தனது பதவியை ராஜினாமா செய்தார். அதைத் தொடர்ந்து அமைச்சர்கள் பலர் ராஜிநாமா செய்தனர். உள்கட்சியிலேயே கடும் அதிருப்தி எழுந்ததால், பிரதமர் பதவியை போரிஸ் ஜான்சன் ராஜினாமா செய்தார்.

இதையடுத்து ஆளும் கன்சர்வேடிவ் கட்சியின் தலைவரைத் தேர்ந்தெடுக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. ஆளும் கட்சித் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்படுபவரே நாட்டின் பிரதமராகவும் பொறுப்பேற்பார். பிரதமர் போட்டிக்குள் பலர் நுழைந்த நிலையில், இறுதிச் சுற்றில் ரிஷி சுனக்குக்கும் வெளியுறவு அமைச்சர் லிஸ் டிரஸுக்கும் இடையே போட்டி ஏற்பட்டது.

சுமார் 1.60 லட்சம் கட்சி உறுப்பினர்கள் வாக்களிப்பதற்கு கடந்த வெள்ளிக்கிழமை மாலை 5 மணி வரை அவகாசம் அளிக்கப்பட்டிருந்தது. அந்த அவகாசம் நிறைவடைந்த நிலையில், இருவரில் கட்சித் தலைவராகவும், நாட்டின் பிரதமராகவும் பதவியேற்கப் போகிறவர் யார் என்ற எதிர்பார்ப்பு எழுந்துள்ளது.

கன்சர்வேடிவ் கட்சித் தேர்தலில் பதிவான வாக்குகளின் முடிவுகள் இந்திய நேரப்படி திங்கள்கிழமை (செப். 5) மாலை 5 மணிக்கு அறிவிக்கப்படவுள்ளன. தேர்தலில் யார் வெற்றி பெற்று நாட்டின் பிரதமராகப் பொறுப் பேற்றாலும் அவருக்குப் பெரும் சவால் காத்திருப்பதாகப் பொருளாதார நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.



**விருகம்பாக்கம் ஏரிக்கரையில் செல்வ விநாயகர் ஆலயத்தில் விநாயகர் சதுர்த்தியையொட்டி 128 வது வடக்கு வட்ட அதிமுக பொருளாளர் தர்மர் ஏற்பாட்டில் தென் சென்னை தெற்கு மேற்கு மாவட்ட கழக செயலாளர் விருகை வி.என். ரவி பொது மக்களுக்கு அன்னதானம் வழங்கினார். உடன் பகுதி செயலாளர் சி.கே.முருகன், வட்ட செயலாளர்கள் ராம்மூர்த்தி , எம்.ஜி.ஆர் நகர் குட்டி, மற்றும் அ.தி.மு.க. நிர்வாகிகள் உள்ளனர்**

# டாபர் வீட்டா, குழந்தைகளுக்கான நோய் எதிர்ப்பு சக்தி அமர்வை ஏற்பாடு செய்தது

சென்னை, செப் 05-

பள்ளிகள் மீண்டும் திறக்கப்பட்டு, புதிய கல்வி அமர்வு தொடங்கும் நிலையில், ஹவுஸ் ஆஃப் டாபரின் முன்னணி சுகாதார உணவு பானமான டாபர் வீட்டா, பள்ளிக்குச் செல்லும் மக்களிடையே வலுவான நோய் எதிர்ப்புச் சக்தியின் முக்கியத்துவத்தைப் பற்றிய குழந்தைகளிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த மெகா நோயெதிர்ப்பு விழிப்புணர்வு பிரச்சாரத்தைத் தொடங்குவதாக இன்று அறிவித்தது.

சென்னையில் கவுல் பஜாரில் உள்ள 300க்கும் மேற்பட்ட குழந்தைகள் பங்கேற்ற சிறப்பு அமர்வுடன் இந்த இயக்கம் துவக்கிவைக்கப்பட்டது. குழந்தைகளுக்கு அடிப்படை சுகாதார நடைமுறைகள் மற்றும் சத்தான உணவு மூலம் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிப்பதற்கான வழிகள் குறித்து கற்பிக்கப்பட்டது. இந்த மாணவர்களுக்கு சிறப்பு நோய் எதிர்ப்பு சக்தி கிட், டாபர் வீட்டாவும் வழங்கப்பட்டது.

நிகழ்ச்சியில் பேசிய டாபர் இந்தியா லிமிடெட் கார்ப்பரேட் கம்யூனிகேஷன்ஸ் மேலாளர் தினேஷ் குமார் கூறுகையில், நேரடி வகுப்புகள் தொடங்கியதில் இருந்து, ஒவ்வொரு குழந்தைக்கும் வலுவான நோய் எதிர்ப்பு சக்தி முதன்மைத் தேவையாகும், ஏனெனில் நாம் இன்னும் தொற்றுநோயிலிருந்து வெளியேறவில்லை.

இதைக் கருத்தில் கொண்டு, டாபர் வீட்டா, இந்தியாவின் பன்னிரண்டு நகரங்களைச் சேர்ந்த முன்னணி அரசு சாரா நிறுவனங்கள்/பள்ளிகளுடன், அதாவது கொல்கத்தா, புனே, மும்பை, சென்னை, கோவை, வாரணாசி, லக்னோ, சண்டிகர், கான்பூர், அகமதாபாத், அவுரங்காபாத் மற்றும் பாட்னா நகரங்களில் நோய்களுக்கு எதிராக போராடுவதற்கு வலுவான நோயெதிர்ப்பு மண்டலத்தை உருவாக்குவதற்கு கைகோர்த்துள்ளது என்று கூறினார்.

# பொறியியல் சேர்க்கை கலந்தாய்வு 10-ந் தேதி நடைபெறும்

## தொழில்நுட்ப கல்வி இயக்குனரகம் தகவல்



**சென்னை, செப். 05-**

பொறியியல் மாணவர் சேர்க்கை கலந்தாய்வு திட்டமிட்டபடி வரும் 10-ம் தேதி நடைபெறும் என தொழில்நுட்ப கல்வி இயக்குனரகம் தெரிவித்துள்ளது.

அண்ணா பல்கலைக்கழகத்தின் கீழ் இயங்கும் 431 பொறியியல் கல்லூரிகளில் இளநிலைப் படிப்புகளுக்கு ஒரு லட்சத்து 48,811 இடங்கள் உள்ளன. இதற்கான மாணவர் சேர்க்கை கலந்தாய்வு கடந்த ஆகஸ்ட் 20-ம் தேதி தொடங்கியது. முதல்கட்டமாக, முன்னாள் ராணுவத்தினரின் வாரிசுகள், மாற்றுத் திறனாளிகள், விளையாட்டு வீரர்கள் ஆகியோர் அடங்கிய சிறப்புப் பிரிவுக்கான கலந்தாய்வு நடத்தி முடிக்கப்பட்டுள்ளது. இதில், 668 மாணவர்களுக்கு இடங்கள் ஒதுக்கப்பட்டன.

ஆகஸ்ட் 25-ம் தேதி முதல் நடைபெறவிருந்த பொதுப்பிரிவுக்கான கலந்தாய்வு, நீட் தேர்வுகள் முடிவுகள் தாமதம் காரணமாக தற்காலிகமாக தள்ளிவைக்கப்பட்டது. இதையடுத்து, பொறியியல் படிப்புகளுக்கான பொதுப்பிரிவுக் கலந்தாய்வு செப்டம்பர் 10-ம் தேதி முதல் நடைபெறும் என்று உயர்கல்வித் துறை அறிவித்திருந்தது.

இந்த நிலையில் பொறியியல் மாணவர் சேர்க்கை கலந்தாய்வு திட்டமிட்டபடி வரும் 10-ம் தேதி முதல் நடைபெறும் என தொழில்நுட்ப கல்வி இயக்குனரகம் தெரிவித்துள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

# காங்கிரசை களத்தில் எங்கும் காண முடியவில்லை: குலாம் நபி ஆசாத்

**ஸ்ரீநகர், செப். 05-**



காங்கிரஸ் கட்சியை களத்தில் காண முடியவில்லை என்று அக்கட்சியில் இருந்து விலகிய மூத்த தலைவர் குலாம் நபி ஆசாத் தெரிவித்தார். காங்கிரஸ் கட்சியில் இருந்து விலகிய பிறகு நேற்று காஷ்மீரில் பிரம்மாண்ட பொதுக்கூட்ட பேரணியை குலாம் நபி ஆசாத் நடத்தினார். அப்போது அவர் கூறுகையில்,

காங்கிரஸ் கட்சியை களத்தில் எங்கும் காண முடியவில்லை. ரத்தம் சிந்தி காங்கிரஸ் கட்சியை நாங்கள் வலுப்படுத்தினோம். கம்ப்யூட்டர் மூலமோ டுவிட்டர் மூலமோ அக்கட்சி வலுவடையவில்லை. எங்கள் மீது அவதூறு பரப்ப முயற்சிக்கின்றனர். ஆனல், டுவிட்டரை தாண்டி அவர்கள் வரவில்லை. காங்கிரஸ் கட்சியை களத்தில் காண முடியாததற்கு இதுவே காரணம். ஜம்மு காஷ்மீர் மக்களே எனது கட்சியின் பெயரையும் கொடியையும் தீர்மானிப்பார்கள். ஜம்மு காஷ்மீருக்கு மாநில அந்தஸ்து, வேலை வாய்ப்பு உள்ளிட்டவற்றில் எனது அரசு கவனம் செலுத்தும் என்று கூறினார்.

## எதிர்க்கட்சிகளை ஒருங்கிணைக்க முயற்சி:

# பீகார் முதல்வர் நிதிஷ்குமார் இன்று டெல்லி பயணம்

**பாட்னா, செப். 05-**

பா.ஜ.க.வுக்கு எதிராக எதிர்க்கட்சிகளை ஒருங்கிணைப்பதற்காக பீகார் முதல்வர் நிதிஷ்குமார் இன்று (திங்கட்கிழமை) டெல்லி செல்கிறார்.



பா.ஜ.க. தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணியில் முக்கிய கட்சியாக இருந்த ஐக்கிய ஜனதாதளம் சமீபத்தில் கூட்டணியை விட்டு வெளியேறியது. இந்த கட்சியின் தலைவரும், பீகார் முதல்வருமான நிதிஷ் குமார், ராஷ்டிரீய ஜனதாதளம், காங்கிரஸ் கட்சிகளுடன் இணைந்து புதிய அரசை அமைத்தார்.

பா.ஜ.க.வுடன் கூட்டணியை முறித்துக் கொண்ட அவர், 2024-ம் ஆண்டு நாடாளுமன்ற தேர்தலில் பா.ஜ.க.வுக்கு எதிராக எதிர்க்கட்சி கூட்டணியை உருவாக்கப் போவதாகவும் அறிவித்தார். இதற்கான பணிகளையும் அவர் மேற்கொண்டுள்ளார். இது ஒருபுறம் இருக்க, மணிப்பூரில் ஐக்கிய ஜனதாதளம் சார்பில் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்த 6 எம்.எல்.ஏ.க்களில் 5 பேர் பா.ஜ.க.வில் இணைந்து விட்டனர். இது நிதிஷ்குமாருக்கு பெரும் கோபத்தை ஏற்படுத்தி உள்ளது. இது தொடர்பாக செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது,

முன்பு எப்போதும் இல்லாத வகையில் இது ஒரு முற்றிலும் வேறுபட்ட புதிய கலாசாரமாக இருப்பதாகவும், அரசியல் சாசனத்துக்கு எதிரான இந்த நடவடிக்கை பா.ஜ.க.வின் குணத்தை காட்டுவதாகவும் கூறினார். அனைத்து எதிர்க்கட்சிகளும் ஒன்றிணைந்தால் 2024-ம் ஆண்டு நாடாளுமன்ற தேர்தல் முடிவுகள் சிறப்பாக இருக்கும் என கூறிய நிதிஷ்குமார், இன்று 5-ம் தேதி டெல்லி செல்ல இருப்பதாகவும் தெரிவித்தார். நிதிஷ்குமாரின் 3 நாள் டெல்லி பயணத்தின் போது, பல்வேறு எதிர்க்கட்சி தலைவர்களை சந்தித்து பேச உள்ளதாக தகவல் வெளியாகி இருக்கிறது.

# நடப்பு நிதியாண்டில் இரட்டை இலக்க பொருளாதார வளர்ச்சி

## மத்திய அமைச்சர் நிர்மலா சீதாராமன் நம்பிக்கை

**ஐதராபாத், செப். 05-**



நடப்பு நிதியாண்டில் இரட்டை இலக்க பொருளாதார வளர்ச்சி இருக்கும் என்று நிர்மலா சீதாராமன் நம்பிக்கை தெரிவித்துள்ளார்

மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் நேற்று தெலுங்கானாவில் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்றார். இதனிடையே செய்தியாளர்களை சந்தித்த அவரிடம், நடப்பு நிதியாண்டில் பொருளாதார வளர்ச்சி விகிதம் இரட்டை இலக்கத்தில் இருக்குமா? என கேட்கப்பட்டது. அதற்கு பதிலளித்து அவர் கூறியதாவது,

இரட்டை இலக்க வளர்ச்சி இருக்கும் என நான் நம்புகிறேன். அதற்காக உழைத்து வருகிறோம். பொருளாதார மந்த நிலையின் பிடியில் நாடு இல்லை என்றால் அது பொருளாதார வளர்ச்சிக்கு ஊக்கசக்தியாக இருக்கும் என்று தெரிவித்தார். மேலும் அவர், குறைந்த அடித்தளம் தான் அதிக வளர்ச்சி விகிதம் என்று சிலர் வாதிடலாம். ஆனால் நாம் பேசிக் கொண்டிருக்கும் வளர்ந்த நாடுகளுடன் ஒப்பிடுகையில், நாம் ஒரு நல்ல நிலையில் இருக்கிறோம். உண்மையில் நாம் வேகமாக வளர்ந்து வரும் பொருளாதாரம்தான் என்றும் அவர் தெரிவித்தார்.

இலவசங்கள் குறித்த கேள்விக்கு பதிலளித்த அவர், இது பற்றிய விவாதத்தில் நாம் பங்கேற்க வேண்டும். ஏனென்றால் நீங்கள் எதையாவது இலவசமாகக் கொடுக்கிறீர்கள் என்றால் அதற்கு யாரோ பணம் கொடுக்கிறார்கள் என்று அர்த்தம் என்று கூறினார்.

# இன்று ஆசிரியர் தினம்: தமிழக கவர்னர் வாழ்த்து

**சென்னை, செப். 05-**

இன்று ஆசிரியர் தினத்தையொட்டி, சமூகத்திற்கு ஊக்கமளிக்கும் முன்மாதிரியாக ஆசிரியர்கள் திகழ்கின்றனர் என்று தமிழக கவர்னர் ஆர்.என்.ரவி தெரிவித்துள்ளார்.

ஆசிரியர் தினத்தை முன்னிட்டு கவர்னர் மாளிகை வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில்,

அனைத்து ஆசிரியப் பெருமக்களுக்கும் குறிப்பாகத் தமிழ்நாட்டின் ஆசிரியர்கள் அனைவருக்கும் இனிய ஆசிரியர் தின நல்வாழ்த்துகள். ஆசிரியர்களுக்கு மரியாதை செலுத்துவது நமது பண்டைய இந்தியப் பாரம்பரிய மரபாகும். ஆசிரியர்கள் சமூகத்திற்கு ஊக்கமளிக்கும் முன்மாதிரியாகத் திகழ்கின்றனர். சுதந்திர இந்தியாவின் அமுதப் பெருவிழாக் காலத்தின் அடுத்த 25 ஆண்டுகள் இந்தியாவின் விரிவான எழுச்சிக் காலமாகும். இத்தருணத்தில் தேசத்தைக் கட்டியெழுப்புவதில் ஆசிரியர்களின் பங்கு மிக முக்கியமானது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# இந்தியாவில் சற்று குறைந்த தினசரி கொரோனா பாதிப்பு

## ஒரே நாளில் 6,809 பேருக்கு தொற்று

**புதுடெல்லி, செப். 05-**

இந்தியாவில் கடந்த சில தினங்களாக கொரோனா தொற்று பாதிப்பு குறைந்து வருகிறது. இந்த நிலையில் கடந்த 24 மணிநேரத்தில் இந்தியாவில் 6 ஆயிரத்து ,809 பேருக்கு கொரோனா கண்டறியப்பட்டது.

நேற்று முன்தினம் 7 ஆயிரத்து 219 ஆக இருந்த கொரோனா பாதிப்பு நேற்று 6 ஆயிரத்து 809 ஆக குறைந்துள்ளது. இதுவரை இந்தியாவில் கொரோனாவால் பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை 4,44,49,726 லிருந்து 4,44,56,535 ஆக உயர்ந்துள்ளது. மேலும் கடந்த 24 மணி நேரத்தில் 8,414 பேர் கொரோனா பாதிப்பில் இருந்து குணமடைந்து டிஸ்சார்ஜ் செய்யப்பட்டுள்ளனர். இதன் மூலம் இதுவரை கொரோனா தொற்றிலிருந்து குணமடைந்தோர் எண்ணிக்கை 4,38,65,016 லிருந்து 4,38,73,430 ஆக உயர்ந்துள்ளது.

மேலும் இந்தியாவில் கொரோனாவுக்கு ஒரே நாளில் 26 பேர் பலியாகி உள்ளனர். இதுவரை 5,27,991 பேர் உயிரிழந்துள்ளனர். நாடு முழுவதும் கொரோனாவால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெறுவோர் எண்ணிக்கை 56,745 லிருந்து 55,114 ஆக குறைந்துள்ளது. இதுவரை நாடு முழுவதும் 213 கோடியே 20 லட்சம் 'டோஸ்' கொரோனா தடுப்பூசிகள் போடப்பட்டுள்ளன. இந்தியாவில் ஒரே நாளில் 19,35,814 கொரோனா தடுப்பூசி போடப்பட்டுள்ளது. இவ்வாறு மத்திய சுகாதார அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிவிப்பில் தெரிவித்துள்ளது.

# காஷ்மீரில் தாக்குதல் நடத்த வந்த பயங்கரவாதி மாரடைப்பால் மரணம்

**ஜம்மு, செப். 05-**

ஜம்மு, காஷ்மீரில் தாக்குதல் நடத்துவதற்காக வந்து கைதான பாகிஸ்தான் பயங்கரவாதி மாரடைப்பால் உயிரிழந்தான்.

ஜம்முவின் ரஜோரி மாவட்டத்தில் நவ்ஷேரா செக்டர் பகுதியில் உள்ள கட்டுப்பாட்டு எல்லைப் பகுதி வழியாக ஊடுருவ முயன்ற பயங்கரவாதியை இந்திய ராணுவ வீரர்கள் சுட்டுக் கைது செய்தனர். அவனிடம் நடத்திய விசாரணையில், அவன் பாகிஸ்தானை சேர்ந்த தபாரக் உசேன் என்பது தெரிய வந்தது. இந்திய ராணுவ முகாம் மீது தாக்குதல் நடத்த திட்டமிட்டு இருந்ததும் தெரியவந்தது.

இந்தியாவில் நாசவேலை செய்வதற்காக பாகிஸ்தானை சேர்ந்த கர்னல் யூனுஸ் என்பவர் 30 ஆயிரம் ரூபாய் வழங்கியதாக தெரிவித்தான். இதே போல் மேலும் 5 பேர் அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாகவும் வாக்குமூலம் அளித்திருந்தான்.

ஊடுருவ முயன்ற போது பாதுகாப்பு படையினர் சுட்டதில் காயடைந்த தபாரக் உசேன் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தான். இந்த நிலையில், அவனுக்கு திடீரென மாரடைப்பு ஏற்பட்டதை தொடர்ந்து உயிரிழந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தமிழகத்தில் கனமழைக்கு வாய்ப்புள்ள மாவட்டங்கள்

## வானிலை மையம் தகவல்

**சென்னை, செப். 05-**

வளிமண்டல மேலடுக்கு சுழற்சி காரணமாக தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் அநேக இடங்களில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்று வானிலை மையம் தெரிவித்துள்ளது.

இது குறித்து சென்னை வானிலை மையம் வெளியிட்டுள்ள அறிவிப்பில் கூறியிருப்பதாவது:-

தமிழக பகுதிகளின் மேல் நிலவும் வளிமண்டல கீழடுக்கு சுழற்சி காரணமாக, இன்று (5-ம் தேதி) தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் அநேக இடங்களில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

நீலகிரி, கோயம்புத்தூர், திருப்பூர், தேனி, திண்டுக்கல், ஈரோடு, தென்காசி, மதுரை, கரூர், திருச்சி, நாமக்கல், சேலம், தர்மபுரி, கிருஷ்ணகிரி, திருப்பத்தூர், வேலூர், ராணிப்பேட்டை, திருவண்ணாமலை மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளது. சென்னையை பொறுத்தவரை அடுத்த 48 மணி நேரத்திற்கு வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒருசில பகுதிகளில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

நாளை (6-ம் தேதி) குமரிக்கடல் பகுதிகள், மன்னார் வளைகுடா மற்றும் அதனை ஒட்டிய தென் தமிழக கடலோரப் பகுதிகள், மற்றும் இலங்கையை ஒட்டிய தென்மேற்கு வங்கக்கடல் பகுதிகளில் பலத்த காற்று மணிக்கு மணிக்கு 40 முதல் 50 கிலோ மீட்டர் வேகத்தில் வீசக்கூடும். மீனவர்கள் இப்பகுதிகளுக்கு செல்ல வேண்டாம் என்று அறிவுறுத்தப்படுகிறார்கள்.

இவ்வாறு அதில் கூறப்பட்டு உள்ளது.

# டாடா சன்ஸ் குழும முன்னாள் தலைவர் கார் விபத்தில் பலி

## மராட்டிய முதல்வர் இரங்கல்

**புனே, செப். 05-**

டாடா சன்ஸ் குழுமத்தின் முன்னாள் தலைவர் சைரஸ் மிஸ்த்ரி கார் விபத்தில் உயிரிழந்த சம்பவத்திற்கு மராட்டிய முதல்வர் ஷிண்டே இரங்கல் தெரிவித்து உள்ளார்.

டாடா சன்ஸ் குழுமத்தின் முன்னாள் தலைவராக இருந்தவர் சைரஸ் மிஸ்த்ரி(54). இவர் மராட்டியத்தின் பால்கர் மாவட்டத்தில் சொகுசு கார் ஒன்றில் குஜராத்தின் ஆமதாபாத் நகரில் இருந்து மராட்டியத்தின் மும்பை நகர் நோக்கி சென்றுள்ளார். இந்நிலையில், அவரது கார் பாலம் ஒன்றில் சரோட்டி பகுதியருகே சென்று கொண்டிருந்தபோது, மாலை 3.15 மணியளவில் சாலையின் நடுவே இருந்த பகுதியில் திடீரென மோதி விபத்தில் சிக்கியுள்ளது.

இந்த விபத்தில் சைரஸ் மிஸ்த்ரி உள்பட 2 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்து உள்ளனர். மற்றொருவர் ஜஹாங்கீர் பின்ஷா பந்தோல் என தெரிய வந்துள்ளது. வாகனத்தில் மொத்தம் 4 பேர் பயணம் செய்து உள்ளனர். அவர்களில், விபத்தில் காயமடைந்த மற்ற 2 பேரும் மீட்கப்பட்டு சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டனர். இதுபற்றி போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறார்கள்.

இதுபற்றி மராட்டிய முதல்வர் ஏக்நாத் ஷிண்டே வெளியிட்டுள்ள இரங்கல் செய்தயில், டாடா சன்ஸ் குழுமத்தின் முன்னாள் தலைவர் சைரஸ் மிஸ்த்ரி கார் விபத்தில் மரணம் அடைந்த செய்தி அறிந்து அதிர்ச்சி அடைந்தேன். அவர் ஒரு வெற்றி பெற்ற தொழில் முனைவோராக மட்டுமின்றி, இளம் வயதிலேயே தொழிலதிபராக, தொலைநோக்கு பார்வை கொண்டவராக இருந்தவர். இது ஒரு பேரிழப்பு. எனது அஞ்சலியை செலுத்தி கொள்கிறேன் என கூறியுள்ளார்.

# தேசிய நல்லாசிரியர் விருது பெறுபவர்களுடன் பிரதமர் மோடி இன்று கலந்துரையாடல்

**புதுடெல்லி, செப். 05-**




தேசிய நல்லாசிரியர் விருது பெறுபவர்களுடன் டெல்லியில் இன்று பிரதமர் மோடி கலந்துரையாடுகிறார்.

1888, செப்டம்பர் 5-ல் பிறந்த முன்னாள் ஜனாதிபதி டாக்டர் எஸ். ராதாகிருஷ்ணன் நினைவாக நாடு முழுவதும் ஆசிரியர் தினம் கொண்டாடப்படுகிறது. ஆசிரியர் தினத்தை கொண்டாடும் வழக்கம் 1962-ல் முன்னாள் ஜனாதிபதி மற்றும் நாடு முழுவதும் உள்ள அனைத்து ஆசிரியர்களையும் கௌரவிக்கும் வகையில் தொடங்கியது.

கல்வி அமைச்சகம் ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் 5-ம் தேதி விக்யான் பவனில் ஒரு விழாவை ஏற்பாடு செய்து, நாட்டின் சிறந்த ஆசிரியர்களுக்கு விருதுகளை வழங்குகிறது. இதில் இம்முறை வெளிப்படையான மற்றும் ஆன்லைன் மூன்று கட்ட தேர்வு செயல்முறை மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.


இந்த நிலையில் தேசிய நல்லாசிரியர் விருது பெறும் தமிழகத்தை சேர்ந்த ராமச்சந்திரன் உட்பட 45 ஆசிரியர்களுடன் பிரதமர் மோடி இன்று கலந்துரையாடுகிறார். ஆசிரியர்களுக்கான தேசிய விருதுகளின் நோக்கமானது, தங்கள் அர்ப்பணிப்பு மற்றும் கடின உழைப்பின் மூலம் பள்ளிக் கல்வியின் தரத்தை மேம்படுத்துவதோடு மட்டுமல்லாமல் மாணவர்களின் வாழ்க்கையையும் வளப்படுத்திய நாட்டிலுள்ள சிறந்த ஆசிரியர்களின் தனித்துவமான பங்களிப்பைக் கொண்டாடி கௌரவிப்பதாகும் என பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

# சென்னை ஐகோர்ட்டில் நீதியின் தரம் சிறந்து விளங்குகிறது

## சுப்ரீம் கோர்ட் நீதிபதி கவுல் பாராட்டு

**சென்னை, செப். 05-**

சென்னை ஐகோர்ட்டில் நீதியின் தரம் சிறந்து விளக்குவதாக சுப்ரீம் கோர்ட் நீதிபதி சஞ்சய் கிஷன் கவுல் தெரிவித்தார்.



சார்பு நீதிமன்றங்களுக்கான புதிய கட்டிட அடிக்கல் நாட்டு விழா சென்னை ஐகோர்ட் வளாகத்தில் நேற்று நடைபெற்றது. முதல்வர் மு.க.ஸ்டாலின் கலந்து கொண்டு புதிய கட்டிடத்திற்கான அடிக்கல்லை நாட்டினார். இதில், சுப்ரீம் கோர்ட் நீதிபதிகள் சஞ்சய் கிஷன் கவுல், இந்திரா பானர்ஜி, ராமசுப்ரமணியன், சுந்தரேஷ், ஐகோர்ட் தலைமை நீதிபதி முனீஸ்வர் நாத் பண்டாரி, அமைச்சர்கள் எ.வ.வேலு, ரகுபதி, தலைமைச் செயலாளர் இறையன்பு உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.


இந்த விழாவில் சுப்ரீம் கோர்ட நீதிபதி சஞ்சய் கிஷன் கவுல் பேசியதாவது,

காஷ்மீர் எனது பிறந்த பூமி. தமிழ்நாடு வாழ்ந்த பூமி. உயர்ந்த வரலாற்றை உடையது சென்னை ஐகோர்ட். ஒன்று முன்னேறிச் செல்ல வேண்டும் அல்லது பின்னோக்கி செல்ல வேண்டும். சென்னை ஐகோர்ட் பல வழிகளில் முன்னேறியிருந்தாலும், இட நெருக்கடியில் பின்னோக்கி இருந்தது. சாப்ட்வேர்தான் நீதிபதிகள். உள்கட்டமைப்பு தான் ஹார்டுவேர். இரண்டும் சரியாக இருந்தால் தான் வேலை சரியாக நடக்கும். நீதியின் தரம் சிறந்து விளங்கும் நீதிமன்றம் சென்னை ஐகோர்ட்.

அரசியலமைப்பின் படியே நாம் செயலாற்ற வேண்டும். உள்கட்டமைப்பை மேம்படுத்தும் விஷயத்தில் தமிழக அரசு சரியான நேரத்தில் உதவி செய்துள்ளது. நீதிமன்றங்களில் எங்கெல்லாம் உள்கட்டமைப்பு குறைபாடுகள் உள்ளனவோ, அங்கெல்லாம் அது சரிசெய்யப்பட வேண்டும். என் சக நீதிபதிகள் சென்னை ஐகோர்ட்டின் புகழை மேலும் உயர்த்துவார்கள் என்று நம்புகிறேன். இவ்வாறு அவர் பேசினார்.

# மத்திய அமைச்சர் ராஜ்நாத் சிங் இன்று மங்கோலியா பயணம்

**புதுடெல்லி, செப். 05-**



மத்திய அமைச்சர் ராஜ்நாத்சிங் இன்று மங்கோலியா நாட்டுக்கு பயணம் மேற்கொள்கிறார். இந்திய பாதுகாப்பு அமைச்சர் ஒருவர் மங்கோலியாவிற்கு பயணம் செய்வது இதுவே முதல் முறையாகும்.

கிழக்கு ஆசிய நாடுகளுடனான கேந்திர கூட்டுமுயற்சிக்கு வலு சேர்க்கும் வகையில் மத்திய பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் இன்று 5-ம் தேதி முதல் 7-ம் தேதி வரையில் அரசுமுறைப் பயணமாக மங்கோலியா செல்கிறார். இந்திய பாதுகாப்பு மந்திரி ஒருவர் மங்கோலியாவிற்கு பயணம் செய்வது இதுவே முதல் முறையாகும்.

இரு நாடுகள் இடையே பாதுகாப்பு ஒத்துழைப்பு மற்றும் கேந்திர கூட்டுமுயற்சியை மேலும் மேம்படுத்துவதற்கு இந்தப் பயணம் வழிவகை செய்யும். தமது பயணத்தின் போது மங்கோலியா நாட்டின் பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத்சிங், லெப்டினன்ட் ஜெனரல் சைகான்பயருடன் இருதரப்பு பேச்சு வார்த்தைகளை மேற்கொள்வார். மங்கோலிய அதிபர் யூ. குரெல்சுக், அந்நாட்டு நாடாளுமன்ற சபைத் தலைவர் ஜி. ஜண்டன்ஷாடர் ஆகியோரையும் ராஜ்நாத் சிங் சந்தித்துப் பேச உள்ளார்.

இந்தியாவும் மங்கோலியாவும் கேந்திர கூட்டு முயற்சியை பகிர்வதோடு அதில் ராணுவம் முக்கியத் தூணாக விளங்குகிறது. இருதரப்பு பேச்சு வார்த்தையின் போது இரு நாடுகளின் பாதுகாப்பு அமைச்சர்களும், இந்தியா மற்றும் மங்கோலியா இடையேயான ராணுவ ஒத்துழைப்பை ஆய்வு செய்வார்கள். இருதரப்பு உறவை வலுப்படுத்துவதற்கு புதிய முன்முயற்சிகள் குறித்தும் ஆலோசனை நடத்துவார்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஞாயிறுதோறும் இம்மாதம் மெகா தடுப்பூசி முகாம்

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் அறிவிப்பு

**சென்னை, செப். 05-**



கொரோனா தடுப்பூசி முகாம் பொதுமக்கள் வசதிக்காக இந்த மாதம் அனைத்து ஞாயிற்றுகிழமைகளிலும் அதாவது 11, 18, 25 ஆகிய தேதிகளில் நடைபெறும் என்று அமைச்சர் மா. சுப்பிரமணியன் தெரிவித்தார்.

சென்னை ஆர்.ஏ.புரத்தில் நடைபெற்ற கொரோனா தடுப்பூசி முகாமை அமைச்சர் மா.சுப்பிரமணியன் பார்வையிட்டார். பின்னர் அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:-

இந்திய அளவில் மெகா தடுப்பூசி முகாம் அமைத்து செயல்படுத்துவதில் தமிழகம் முன்னணியில் உள்ளது. முதல்வர் மு.க.ஸ்டாலின் வழிகாட்டுதல்படி (நேற்று) 35-வது மெகா தடுப்பூசி முகாம் மாநிலம் முழுவதும் 50 ஆயிரம் இடங்களில் நடக்கிறது. சென்னையில் 2 ஆயிரம் இடங்களில் நடைபெறுகிறது.

பூஸ்டர் டோஸ் எடுத்துக் கொள்ள தகுதி உடையவர்களில் சுமார் 15 சதவீதம் பேர் தான் போட்டுள்ளனர். பொதுமக்கள் தயக்கம் இல்லாமல் பூஸ்டர் தடுப்பூசி போட்டுக் கொள்ள வேண்டுகிறேன்.

இந்த மாதம் மட்டும் தான் இலவசமாக போடப்படும். பொதுமக்கள் வசதிக்காக இந்த மாதம் அனைத்து ஞாயிற்றுகிழமைகளிலும் அதாவது 11, 18, 25 ஆகிய தேதிகளில் மெகா தடுப்பூசி முகாம் நடைபெறும்.

இந்த முகாம்கள் மட்டுமல்லாமல் ஆரம்ப சுகாதார நிலையங்கள், வட்டார மருத்துவமனைகள், மாவட்ட மருத்துவமனைகள், மருத்துவ கல்லூரி மருத்துவமனைகளிலும் வழக்கம் போல் தினமும் தடுப்பூசி போடப்படும். இவ்வாறு அவர் கூறினார்.

# உங்கள் நட்சத்திர பலன்கள்

**( 05.09.2022 முதல் 10.09.2022 வரை )**

ஜோதிடர்
எஸ். விஜயநரசிம்மன், மதுரை.

## மேஷம்

(அஸ்வினி-1, 2, 3, 4 பாதங்கள்—பரணி-1, 2, 3, 4 பாதங்கள்—கார்த்திகை-1, பாதம்)

அஸ்வினி –

இந்த வாரம் பணவரவு அதிகரிக்கும். பணிபுரியும் பெண்களுக்கு தற்போது இருக்கும் வேலையை காட்டிலும் நல்ல வேலைக்குப் போகும் வாய்ப்புகள் அமையும். ஆடம்பரச் செலவுகள் அதிகமாவதின் காரணமாகப் பணமுடை ஏற்பட வாய்ப்பு உண்டு. நேர்மையும் கடின உழைப்பும் மட்டும் வாழ்க்கையில் நல்ல முன்னேற்றத்தை அளிக்கும். பணியில் முழுக் கவனம் செலுத்துங்கள். ஏனெனில், நீங்கள் உயிரைக் கொடுத்து உழைத்தாலும், மேலதிகாரி அதில் ஏதாவது குற்றம் சொல்லிக் கொண்டே இருப்பார். ஆயினும் சகப் பணியாளர்கள் உதவியால் சமாளித்துவிடுவீர்கள். சிலருக்குச் சுறுசுறுப்பற்ற நிலையாலும், மந்த புத்தியாலும் காரியத் தடைகள் ஏற்படலாம்.

பரணி –

இந்த வாரம் பெண்களால் சந்தோஷம் உருவாகும். விருந்துகளிலும், கேளிக்கை நிகழ்ச்சிகளாலும் இல்லத்தில் மகிழ்ச்சி பொங்கும். பணவரவு அதிகரிப்பது போல், செலவுகளும் கூடும். நண்பர்கள், மற்றும் உறவுகளிடம் சுமூகமாக நடந்து கொண்டால் கருத்து பேதங்களைத் தவிர்க்கலாம். வாகனங்களில் செல்லும் போது மிகுந்த எச்சரிக்கையுடன் செல்லவும். நல்ல நண்பர்களுடன் பழகுவது நல்லது. தீய குணமுள்ள நண்பர்களைத் தவிர்த்தால், உங்கள் மனம் உயர்ந்த எண்ணங்களை கொண்டதாக அமையும். புதிய தொழில் தொடர்புகள், அரசு வகை ஆதாயங்களும் தொழில் மேன்மை அடையும். நீங்கள் விரும்பிய பொருட்கள் எல்லாம் கிடைத்துவிடும்.

கார்த்திகை 1 ஆம் பாதம்.—

இந்த வாரம் விருந்து, கேளிக்கைகளில் மகிழ்ச்சியின் உச்சிக்குச் செல்வீர்கள். நண்பர்களிடம் வேண்டாத விவாதங்களை தவிர்த்து எப்போதும் போல் ஜாலியாக பொழுது போக்குவது நல்லது. பெரியவர்கள் நல்வார்த்தைகள் கேட்டு, அதன்படி நடந்தால் வாழ்க்கையில் முன்னேற்றங்கள் எதிர்பார்க்கலாம். வாகனப் பயணங்களின் போது தேவையான ஆவணங்களை மறக்காமல் எடுத்துச் செல்லுங்கள். நிலையற்ற வியாபாரத்தால் வருமானம் குறையும் நிலை ஏற்படலாம். பெண்களின் ஆடம்பர த்தினால் ஏற்படும் கட்டுக்கடங்காத செலவுகள் காரணமாக கடன் வாங்க நேரலாம். அரசுப் பணியாளர்களின் அயராத உழைப்பை கண்டு உயர் அதிகாரிகளின் பாராட்டால் மனம் மகிழும்.

## ரிஷபம்

(கார்த்திகை – 2,3,4 பாதங்கள்-ரோகிணி-1,2,3,4-பாதங்கள்-மிருகசிரீடம்-1,2 பாதங்கள் )

கார்த்திகை 2,3,4 பாதங்கள் –

இந்த வாரம் மகான்களின் சந்திப்பால் மனதில் அமைதி நிலவும். நேர்த்தியாக உடையணிந்து, விருந்தினர்களுடன் கேளிக்கைகளில் ஈடுபட்டு மகிழ்வீர்கள். இன்பப் பயணங்களால் சந்தோஷம் பெருகும். முழு முயற்சியின் காரணமாக காரியங்கள் அனைத்திலும் வெற்றி அடைவீர்கள். சிலருக்குப் போதுமான வருமானம் இன்றி, பணத் தட்டுப்பாட்டால் பிரச்சனைகள் அதிகம் இருக்கும். குடும்ப உறுப்பினர்களிடையே கருத்து வேறுபாடுகள் எழலாம். சமையல் செய்யும் போது பெண்கள் மிகுந்த எச்சரிக்கையுடன் செயல்படுவது சிலருக்கு பணி காரணமாக தேவையற்ற அலைச்சல்கள் ஏற்படலாம். அரசு ஆதாயங்களால் தொழில் வழியில் முன்னேற்றம் ஏற்படும்.

ரோகிணி –

இந்த வாரம் புதிய தொழில் தொடர்புகள் மூலம் அதிக லாபங்களை பெறுவீர்கள். வியாபாரத்திலும் புதுப்புதுப் பொருட்களின் வருகை காரணமாக இலாபங்கள் எதிர்பார்ப்புக்கு மேல் இருக்கும்.

இல்லற வாழ்க்கையில் துணையின் உதவியோடும், அனுசரிப்போடும் முன்னேற்றங்களையும், சுகானுபவங்களையும் காண்பீர்கள். இளைஞர்களுக்குத் உங்கள் படிப்பு கேற்றபடி உயர்வான சம்பளத்துடன் நல்ல வேலை கிடைக்கும். சிலர் பழைய கடன்களை அடைக்க புதிய கடன்கள் வாங்க நேரும். அரசுப் பணியில் உள்ளவர்களுக்கு, அரசு ஆதாயங்கள் ஏற்படலாம். குழந்தைகளின் முன்னேற்றங்கண்டு பெற்றோர் மகிழ்வர். குடும்பத்தில் வீண்வாக்கு வாதங்களைத் தவிர்ப்பது நல்லது.

மிருகசீரிஷம் – 1 , 2 பாதங்கள் –

இந்த வாரம் பெண்களின் மூலம் எதிர்பாராத தன வரவுகள் ஏற்படும். தெய்வீக ஈடுபாட்டால், காதுக்கு இனிய பக்திப் பிரசங்கங்கள் கேட்பதில் ஆர்வம் ஏற்படும். புண்ணிய ஸ்தல யாத்திரைகள் சென்று மகிழ்வீர்கள். புதிய வியாபார விரிவாக்கத் திட்டங்களுக்கான வங்கிக் கடன்கள் கூடிய விரைவில் கிடைக்கும்.

திறமைமிக்க ஊழியர்களின் ஒத்துழைப்பு மூலம் உற்பத்தி அதிகரித்து, லாபம் அதிகரிக்கும். அரசுப் பணியாளர்கள் தங்கள் உயர் அதிகாரிகளால் பாராட்டப்பட்டு, பதவி உயர்வுக்கான பரிந்துரைகள், சிபாரிசுகளை பெற்று மகிழ்வர். சிலருக்குப் பாசம் மிக்க உறவுகளைப் பிரிந்து வாழ நேரிடலாம். ஆரோக்கியத்தில் அக்கறை எடுத்துக் கொள்ளுங்கள். தந்தை வழி உறவுகளால் நன்மைகள் ஏற்படலாம்.

## மிதுனம்

(மிருகசீரிடம்- 3,4 பாதங்கள், திருவா திரை-1,2,3,4 பாதங்கள், புனர்பூசம் -1,2,3 பாதங்கள்)

மிருகசீரிஷம்- 3,4 பாதங்கள்

இந்த வாரம் உங்கள் முழு முயற்சியின் காரணமாக வேலையில் ஏற்படும் சுணக்க நிலைகளை சீர்படுத்தி, சிக்கல்களில் இருந்து முன்னேறுவீர்கள். வள்ளுவன் வாக்கை மறக்காமல் ஏறி வந்த ஏணியை மறந்து விடாமல் இருப்பது முன்னேற்றம் தரும். சிலருக்கு மேல் மட்டத்தில் உள்ள முக்கிய நபர்களின் உதவியால், எதிர்பார்த்த காரியங்கள் வெற்றிகரமாக முடியும். தொழில் வாய்ப்புக்கள் பிரகாசமாக இருக்கும். புதிய வியாபார தொடர்புகள் இலாபத்தின் சதவிகிதம் அதிகரித்து, வங்கி கையிருப்பு களும் கூடும். சிலருக்கு அரசு வகையில் தொல்லைகள் ஏற்படலாம். பணிபுரிபவர்களுக்கு உயர் அதிகாரிகளின் கெடுபிடியால் மனக் குழப்பங்கள் ஏற்பட்டு மதிப்புக் குறையலாம்.

திருவாதிரை —

இந்த வாரம் நீங்கள் திட்டமிட்டுச் செய்யும் செயல்கள் அனைத்திலும் வெற்றி பெறுவீர்கள். கணவன் மனைவி இடையேயான உறவு பலப்படும். குடும்பத்தார், நண்பர்களிடம் பிறரிடம் கோபத்தால், துர் வார்த்தைகள் பேசாதிருப்பது நல்லது, சகோதரர்களிடம் விரோதம் ஏற்படாதிருக்க அனுசரித்துச் செல்லுங்கள். வேலை விஷயமாக அரசிடம் இருந்து எதிர்பார்த்த தகவல்கள் விரைவில் வந்து சேரும். வியாபாரத்தில் திட்டமிட்டபடி புதிய விரிவாக்கங்கள் செய்து முடிப்பீர்கள். அதன் காரணமாக வருவாய் ஓரளவு அதிகரிக்கும். மேடைப் பேச்சாளர்களுக்குத் உங்கள் வாக்கு வன்மையால் வருமானம் அதிகரிக்கும். பெண்களால் ஆதாயம் ஏற்படும் என்றாலும் அவர்களிடம் எச்சரிக்கையாக இருப்பது நல்லது.

புனர்பூசம் – 1, 2, 3 – பாதங்கள்.

இந்த வாரம் தம்பதிகளுக்கு இடையே கோபம் மறைந்து சமாதானமாகி, இணைந்து பேரின்பம் அடைவர். புதிதாக திட்டமிட்ட காரியங்களில் ஒருமுறைக்கு இருமுறை யோசித்து இறங்குவது நல்லது.

விடுமுறைக் காலம் ஆதலால் குழந்தைகளின் கூட்டத்தையும் மற்றும் சேட்டைகளை கண்டு மனம் மகிழ்ச்சி அடைந்தால், அவர்கள் கேட்டதை வாங்கிக் கொடுத்து சமாளிப்பது கஷ்டமாகும். மேடைப் பேச்சாளர்கள் உங்கள் பேச்சின் மூலம் வருமானம் ஈட்டுவீர்கள். உறவுகளுக்குள் ஒற்றுமை ஓங்கும். தொழிலில் எதிர்பார்த்த அளவுக்கு இலாபம் அடைய புதிய யுக்திகளை கடைப்பிடிப்பீர்கள். அரசு வகையில் எதிர்பார்க்கும் உதவிகள் கிடைப்பது வாழ்க்கையில் நல்ல முன்னேற்றம் ஏற்படும்.

## கடகம்

(புனர்பூசம்- 4 ஆம் பாதம், பூசம்-1,2,3,4 பாதங்கள், ஆயில்யம்-1,2,3,4 பாதங்கள்)

புனர்பூசம் – 4 ஆம் பாதம்.

இந்த வாரம் பாசம் மிக்க பெண்கள் மனமகிழ்ச்சி ஏற்படும். பயணங்களால் சுகம் ஏற்படும். உறவுகளின் உல்லாசப் பொழுது போக்குகளும், விருந்தினர் வருகையால் செலவுகள் அதிகரிக்கும்.

அரசாங்கத்திடம் இருந்து அனுகூலமான செய்திகள் வந்து சேரும். அரசுப் பணியாளர்களே உங்கள் திறமை மிக்க செயல்பாடுகளால் அனைவரின் பாராட்டையும் பெறுவீர்கள். பதவி உயர்வுக்கும் அனுகூலமாக இருக்கும். தொழிலில் ஏற்படும் முழுமையான ஈடுபாடு காரணமாக தாராளமான பணவரவு இருக்கும். சிலருக்கு வெயில் காரணமாக அசதி, தலைவலி, காய்ச்சல், உஷ்ண சம்பந்தமான உடல் உபாதைகள் ஏற்படலாம். அதன் காரணமாக மருத்துவச் செலவுகள் கூடும்.

பூசம் –

இந்த வாரம் எதிர்பார்த்த இனங்களிலிருந்து போதுமான அளவு பணவரவு ஏற்படும். வீட்டில் சுப காரியங்கள் அனைத்தும் சிறப்புற, வெற்றிகரமாக நடக்கும். நண்பர்கள், உறவுகள் மூலமாகவும் பணவுதவி கள் கிடைக்கும். புதிதாக தொடங்கப்படும் தொழிலில் எச்சரிக்கையுடன் இருந்தால் வருமான வாய்ப்புகள் பெருகும்.

தேவையற்ற கோபத்தைக் குறைத்தால் குடும்பத்தில் குழப்பங்கள் குறையும். தாய்வழி உறவுகளால் வீண் தொல்லைகள் ஏற்படலாம். நல்லவர்கள் தொடர்பால் நன்மைகள் பல ஏற்பட வாய்ப்புண்டு. எனவே, அவர்களின் ஆலோசனைகளை கேட்டு நடப்பது வாழ்க்கையில் முன்னேற்றத்தை அளிக்கும்.

ஆயில்யம் –

இந்த வாரம் நல்லோர் சேர்க்கையால், பந்துக்கள் வருகையாலும் உற்சாகம் பொங்கும். புத்திர பாக்கியம் ஏற்படும். உயர் வாகன வசதியும், நற்கல்வியும் கிடைக்கும். தாயின் சொல் கேட்டு, வீட்டில் மனைவியிடம் தேவையற்ற விவாதங்களைத் தவிர்க்கவும். புதிய தொழிலாளர் சேர்க்கை காரணமாக தொழிலில் எதிர்பார்ப்புக்கு மேல் உற்பத்தி பெருகும்.

சிலருக்குக் கூட்டு வியாபாரத்தில் இலாபம் ஏற்படும். திடீரெனக் காணாமல் போன பொருட்கள் சேதாரமின்றி கைக்கு வந்து சேரும். சிலருக்குக் காரியத் தடைகள் ஏற்படலாம். அரசுப் பணியாளர்களுக்கு நீண்ட நாளா எதிர்பார்த்த புதிய பதவியும், பொறுப்பும் கிடைக்கும். சிலருக்கு அரசாங்க விருதுகள் கிடைக்கும்.

## சிம்மம்

(மகம்-1,2,3,4 பாதங்கள்,பூரம்- 1,2,3,4 பாதங்கள் மற்றும் உத்திரம்- 1 பாதம்)

மகம் –

இந்த வாரம் வீடு, மனை ஆகியவை வாங்கும் யோகம் ஏற்படும். . பூரண சயன சுகம் ஏற்படும். மனதிற்கினிய பெண்கள் சல்லாபம், முயற்சிகளில் வெற்றி போன்றவற்றால் மனம் மகிழும். பிறருக்கு உதவும் நல்ல எண்ணம் மேலோங்கும். தொழில் விஷயமாக தீட்டிய முக்கியத் திட்டங்கள் நிறைவேறும். முழு மூச்சுடன் ஈடுபடும் வேலைகளில் புதிய சாதனைகள் படைப்பீர்கள்.

பெரியவர்கள் ஆசியும், மேலதிகாரிகளின் ஆதரவு, புதிய நண்பர்களால் நன்மையும் ஏற்படும். தங்கம், வெள்ளி, துணி, ஆயத்த ஆடைகள், புத்தகங்கள், ரப்பர் மற்றும் பிளாஸ்டிக் ஆகிய வியாபாரத்தில் நல்ல ஆதாயத்தை எதிர்பார்க்கலாம். அரசுப் பணியில் எதிர்பார்த்தபடி நல்ல இடமாற்றங்கள் ஏற்படலாம்.

பூரம் –

இந்த வாரம் வீட்டில் திருமணம் போன்ற சுபகாரியங்கள் நிறைவேறி மகிழ்வு தரும். வெளிநாட்டில் இருந்து நல்ல தகவல்கள் வந்து சேரும். மனோதைரியம் அதிகரிப்பதன் காரணமாக எவரையும் எதிர்த்து வெற்றி பெறுவீர்கள். தொழிலில் எதிர்பார்த்தபடி பல வழிகளிலும் தனவரவு அதிகரிக்கும். சிலருக்கு நல்ல குரு வாய்க்கப் பெற்று ஆன்மிக வழியில் அறிவுத் தெளிவு ஏற்படும். வெளிநாட்டில் இருந்து எதிர்பார்த்த நல்ல தகவல்களால் மனமகிழ்ச்சி ஏற்படும். வியாபாரத்தில் சோம்பல் காரணமாகச் சுறுசுறுப்பற்ற நிலை ஏற்பட்டு ஆதாயம் குறையும். அதன் காரணமாக முக்கிய செலவுகளுக்குக் கூட பிறரின் உதவி நாடவேண்டிய நிலை ஏற்படும்.

உத்திரம்- 1 பாதம் –

இந்த வாரம் எதிர்பார்த்தபடி தனவரவுகள் கைக்கு வந்து சேரும். வந்த பணத்தை ஆன்மிக காரியங்களுக்கு தாராளமாகச் செலவு செய்து மகிழ்வீர்கள். இல்லத்தில் கேளிக்கை, பிறந்த நாள் விருந்துகள் என மகிழ்ச்சி பொங்கும். குடும்பத்தில் அமைதியை நிலை நாட்ட வாக்குவாதங்களை தவிர்ப்பது நல்லது. தேவையற்ற செலவுகளை குறைத்து சிக்கனமாக இருந்தால், பணமுடைகளைத் தவிர்க்கலாம். வியாபாரிகளுக்கு வங்கிக் கடன்கள் பெறுவதில் எவ்விதச் சிக்கல்களும் ஏற்படாது. வியாபாரம் மற்றும் தொழில் புதுப்புது மாற்றங்களால் பண வருமானம் அதிகரிக்கும். வாடிக்கையாளரிடம் நெளிவு சுளிவாக நடக்கும் வியாபாரிகளுக்கு அதிக இலாபம் கிடைக்கும்.

## கன்னி

( உத்திரம் – 2, 3, 4-பாதங்கள், ஹஸ்தம்-1, 2, 3, 4 பாதங்கள், சித்திரை – 1,2 பாதங்கள்)

உத்திரம் – 2, 3, 4 – பாதங்கள்.

இந்த வாரம் சுபகாரியங்களுக்கான வீடே விழாக்கோலம் பூணும். திடீரென ஏற்படும். பயணங்களால் ஆதாயம், மகிழ்ச்சியும் ஏற்படும். மனதுக்குப் பிடித்த படி அழகிய ஆடை ஆபரணங்கள் வாங்குவீர்கள். கேளிக்கை ஈடுபாட்டால் மகிழ்ச்சி ஏற்படும். பந்து ஜன வரவால் உற்சாகம் பொங்கும். உயர் அதிகாரிகளின் நட்பால் ஆதாயம் பெறுவீர்கள். நீங்கள் எடுக்கும் அனைத்து முயற்சிகளும், எவ்விதத் தடையின்றி வெற்றி பெறும். அரசுப் பணியாளர்களுக்கு எதிர்பார்த்தபடி தலைமைப் பதவிகள் தேடி வரும். வீரம் பொங்கும். உங்கள் சேவைகள் மேலதிகாரிகளால் அங்கீகரிக்கப்படும். அத்துடன் நல்ல பாராட்டு பெறுவீர்கள். புதிய வியாபார முயற்சிகளால் வாழ்க்கையில் எதிர்பார்த்த முன்னேற்றங்கள் இருக்கும்.

அஸ்தம் –

இந்த வாரம் பெரிய மகான்களின் தரிசனம் ஏற்பட்டு மனதில் அமைதி நிலவும். பெரியவர்கள் நல்வார்த்தைகள் கேட்டு, ஞானம் பெறுவீர்கள். அரசுப் பணியில் இருப்பவர்கள் எதிர்பார்த்த அல்லது விரும்பிய இடத்திற்கு இடமாற்றங்கள் ஏற்படலாம். நண்பர்களிடம் அனுசரித்துச் செல்வது நல்லது. பயணங்களில் வணிகர்களுக்கு பல பிரச்சனைகளால் தொழிலில் தடைகள் ஏற்படலாம். அதன் காரணமாக வருமானம் குறையும் நிலை ஏற்படலாம். குழந்தைகள் தரும் தொல்லைகளால் மனவருத்தம் ஏற்படும். அவர்கள் வழியாக சென்று அவர்களை திருத்துவது நல்லது. புதிய வியாபார முயற்சிகளால் வாழ்க்கையில் எதிர்பார்த்த முன்னேற்றங்கள் இருக்கும்.

சித்திரை – 1,2 பாதங்கள் –

இந்த வாரம் ஸ்த்ரீ சுகம் கூடும். கேளிக்கை ஈடுபாட்டால் மகிழ்ச்சியும், நெருங்கிய உறவுகள் வருகையால் உற்சாகமும் பிறக்கும். அரசாங்கப் பணியில் இருப்பவர்களுக்கு எதிர்பார்த்த அல்லது விரும்பிய இடத்திற்கு இடமாற்றங்கள் கிடைப்பது தள்ளிப் போகலாம். வியாபாரிகளுக்கு முதலீடுகள் அதிகரித்து லாபம் அதிகரிக்கும். உத்தியோகம் மற்றும் தொழிலில் அபிவிருத்தி ஏற்படும். தொழில் வாய்ப்புகள் பிரகாசமாக இருக்கும். கூட்டாளிகளால் பண விஷயமான பிரச்சனைகள் தலைதூக்கும். சிலருக்கு ஆரோக்கியக் குறைவு, காவல்துறையினர் மூலம் அச்சம் ஆகியவை ஏற்படலாம். திட்டமிடப்பட்ட பயணங்களில் முன்பதிவு கிடைக்காமல் தடைகள் ஏற்படலாம்.

## துலாம்

( சித்திரை-3,4 பாதங்கள், சுவாதி – 1,2,3,4 பாதங்கள் மற்றும் விசாகம்-1,2,3 பாதங்கள்)

சித்திரை-3,4 பாதங்கள் –

இந்த வாரம் மனதிற்கினிய தகவல்கள் வந்து சேரும். தனவரவு அதிகரிக்கும். நண்பர்கள் மற்றும் உறவுகளின் வருகையால் உள்ளம் மகிழும். சினிமா, டிராமா, மால் என இளைஞர்களின் கனவு மையங்களில் பொழுது இனிமையாக கழியும். பிறரின் உயர்வு கண்டு ஏற்படும் பொறாமை மற்றும் கோபங்களை தவிர்ப்பது நல்லது. கோபம் வரும் போது மனதில் தெய்வ சிந்தனை ஏற்பட்டால் அமைதி கிடைக்கும். சிலருக்கு உயர் ரக வாகனங்கள் வாங்கும் யோகம் ஏற்படும். பணம் சம்பாதிப்பதில் ஆக்கமும், ஊக்கமும் ஏற்படும். திடீர்ப் பயணங்கள் மூலம் ஆதாயங்கள் ஏற்படும். பழைய கடன்களை அடைத்துவிடுவீர்கள். அரசு சம்பந்தமான வேலைகள் தாமதப்படலாம்.

சுவாதி –

இந்த வாரம் விரும்பிய பொருட்களை எல்லாம் வாங்கிக் குவிப்பார்கள். சுகமும், ஆடை ஆபரண சேர்க்கை, புத்திர பாக்கியம் மற்றும் எதிர்பாராத பண வரவுகள் ஆகியவை ஏற்படும். குடும்பத்தாரிடையே ஓரளவே ஒற்றுமை நிலவும். அவர்களை அனுசரித்து செல்வது நல்லது. பயணங்களில் இடையூறுகள் ஏற்படலாம்.

புதிய தொழில் முயற்சிகளுக்காக எதிர்பார்க்கப்படும் வங்கிக் கடன் உதவிகள் தாமதத்திற்கு பின்னர் கிடைக்கும். அரசுப் பணியாளர்கள் பதவி உயர்வுகளை எதிர்பார்க்கலாம். அக்னி பயம், திடீர் விபத்து ஏற்பட வாய்ப்பு இருப்பதால் எச்சரிக்கையுடன் இருப்பது நல்லது. எந்தக் காரியத்தையும் முழுத் திறமையையும் காட்டித் திறம்படச் செய்யும் உங்கள் செயல்திறன் கூடும்.

விசாகம்- 1,2,3 பாதங்கள் –

இந்த வாரம் உங்கள் திறமை, முழு முயற்சி ஆகியவற்றின் காரணமாக உங்கள் பணி இலக்கை எளிதாக அடைவீர்கள். சிலருக்கு மற்றவர்களை ஆணையிடும் உயர் பதவி கிடைக்கும். புதிதாக வேலை தேடுபவர்களுக்கு நல்ல காலம் பிறக்கும். பொருளாதார நிலை உயர்வால் பணவரவுகள் திருப்திகரமாக இருக்கும்.

ஆடை, ஆபரண இலாபங்கள் பெற்று உற்சாகமாகத் திகழ்வீர்கள். சிலருக்குப் பிள்ளைப் பேறு ஏற்படலாம். தொழிலில் புதிய வாய்ப்புக்கள் மற்றும் லாட்டரி யோகம் ஆகியவை ஏற்படலாம். குடும்பத்தில் உறவுகளிடையே பாசம் அதிகரிக்கும். அரசு அதிகாரிகளை அனுசரித்துச் சென்றால் தொழில் அல்லது வியாபாரத்தில் ஏற்படும் சிக்கல்களை சமாளிக்கலாம்.

## விருச்சிகம்

(விசாகம்- 4, அனுஷம்-1,2,3,4 பாதங்கள் மற்றும் கேட்டை -1,2,3,4 பாதங்கள் )

விசாகம்- 4 ஆம் பாதம் –

இந்த வாரம் தெய்வ சிந்தனை மற்றும் தர்ம சிந்தனையும் ஏற்படும். சுற்று வட்டாரத்தில் நல்ல புகழும், கௌரவமும் உண்டாகும். உங்கள் அபரிமிதமான அறிவுத் திறனால் கௌரவப் பட்டங்கள், புதிய பதவிகள் ஆகியவை கிடைக்கும். புத்தக வெளியீடு போன்ற தொழில்களில் முன்னேற்றம் ஏற்பட்டு, ஆதாயம் அதிகரிக்கும். பழைய கடன்களை அடைக்க தக்க சமயத்தில் பணவரவு ஏற்படும். சிலருக்குப் புதிய தொழில் தொடங்க வங்கிக் கடன்களுக்கான முயற்சிகள் வெற்றி பெறும். அரசு அதிகாரிகளின் அன்பு மற்றும் ஆதரவால் பணி உயர்வு நினைத்தபடி கிடைக்கும். அதைத் தக்க வைத்துக் கொள்ள கடின உழைப்புத் தேவை. சிலருக்குச் சில நேரங்களில் சுறுசுறுப்பற்ற நிலையும், மனோபயம் நிலவும்.

அனுஷம் –

இந்த வாரம் சிலர் வேலை பார்க்கும் இடத்தில் காதல் வயப்பட்டு, எதிர்ப்புகளுக்கு இடையே, கல்யாணத்தில் முடியும். நெருங்கிய கூட்டாளிகளால் ஏமாற்றப்படுவதை தவிர்க்க மிகுந்த எச்சரிக்கையுடன் இருப்பது அவசியம். மனைவியின் ஆலோசனைகளைக் கேட்டு நடந்தால் இல்லத்தில் இன்பம் பொங்கும்., முன்னேற்றங்களும் தேடிவரும்.. உத்தியோக முயற்சியில் இருப்பவர்களுக்குப் போட்டி தேர்வுகளில் எதிர்பார்த்த வெற்றி கிட்டும். பெண்களால் இலாபம் ஏற்படும். வீட்டில் சுப நிகழ்ச்சிகள் மிகச் சிறப்பாக நடைபெறும். வியாபாரிகள் தங்கள் வாக்கால் வாடிக்கையாளர்களை கவர்ந்து இலாபத்தைப் பெருக்குவர்.

கேட்டை –

இந்த வாரம் சிலருக்கு உழைப்புக்கேற்ற ஊதியம் கிடைக்கும். வீடு வாங்கும் முயற்சிகளில் ஈடுபடுவீர்கள். பலவழிகளிலும் பணவரவுகள் அதிகம் கிடைக்கும். தொழிலில் புதிய விரிவாக்க நடவடிக்கைகள் மூலம் வருமான வாய்ப்புகள் பெருகும். விற்பனைப் பிரதிநிதிகளின் வருமானம் அவர்களின் பேச்சுத் திறன் அதிகரிக்கும். வாகனங்களில் செல்கையில் எச்சரிக்கையுடன் இருத்தல் அவசியம். இரவு நேரப் பயணங்களைத் தவிர்ப்பது நல்லது. கூட்டாகத் தொழில் புரியும் வாய்ப்புக்கள் ஏற்படும். திரைத்துறையில் இருப்பவர்களுக்குப் புதிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும். இதுநாள் வரையில் இழுபறியாக இருந்த வழக்குகள் பைசலாகும். வாழ்க்கையில் நல்ல முன்னேற்றங்களை எதிர் பார்க்கலாம்.

## தனுசு

( மூலம்-1,2,3,4 பாதங்கள், பூராடம்- 1,2,3,4 பாதங்கள் மற்றும் உத்திராடம் –1 பாதம்)

மூலம் –

இந்த வாரம் பெரியவர்கள் ஆலோசனைகளைக் கேட்டு நடப்பது நல்ல முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும். வெளிவட்டாரப் பழக்க வழக்கங்களால் வியாபாரிகளுக்கு அதிக இலாபம் கிடைக்கும். தாயார் கூறும் அனுகூலமான வார்த்தைகள் உற்சாகம் அளிக்கும். அனைத்து பணிகளுக்கும் மனைவியின் முழு ஒத்துழைப்பு கிடைக்கும். சிலருக்குப் பெரிய இடத்துப் பெண் மனைவியாக அமைவாள். அரசுப் பதவியில் உள்ளவர்கள் உயர் அதிகாரிகளின் தயவால் அனுகூலமான பலன்கள் அடைவர். நல்ல புத்திர பாக்கியம் ஏற்படும். மேல்மட்ட அதிகாரிகளை அனுசரித்துச் செல்வதால் பதவி உயர்வுக்கான வாய்ப்புகள் பிரகாசமாக அமையும். தந்தைவழி உறவுகளால் தேவையற்ற தொல்லைகள் ஏற்படலாம்.

பூராடம் –

இந்த வாரம் நீங்கள் நினைத்ததெல்லாம் நடக்கும். கணவன், மனைவி இருவரும் ஒருவர் மீது ஒருவர் பாசமழை பொழிவர். பிள்ளைகளின் முன்னேற்றங்கண்டு பெருமை கொள்வீர்கள். இல்லத்துக்கு தேவையான நவீன வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி அனுபவிப்பீர்கள். பணிபுரியும் இடத்தில் உங்கள் உழைப்பின் சிறப்பு பாராட்டுப் பெறுவதோடு, பதவி உயர்வுக்கு கை கொடுக்கும். வண்டி, வாகனங்களில் அபராதம் கட்டாதிருக்க அனைத்து ஆவணங்களையும் மறவாமல் கையோடு எடுத்துச் செல்லுங்கள். பொருளாதார நிலையை பொறுத்தவரை சீராக இருக்கும். தெய்வீக கைங்கர்யங்களில் ஆர்வம் ஏற்பட்டு தான தர்மங்கள் செய்ய முற்படுவார்கள்.

உத்திராடம் –1 ஆம் பாதம் –

இந்த வாரம் அனைத்து வசதிகளும் இன்பமும் ஏற்படும். நல்ல உயர்ந்த மனிதர்களின், பண்பு மிக்கவர்களின் நட்பால் உயர்வு ஏற்படும். அனைவரையும் கவரும் வண்ணம் சிறப்பான உடை அணிந்து மிடுக்காக உலா வருவீர்கள். நீண்ட நாட்களாக தீட்டிய திட்டங்களின்படி வட இந்திய யாத்திரை செல்லும் நிலை ஏற்படலாம். செய்தொழில், வியாபாரம் எதுவானாலும் புதிய திட்டங்கள் தீட்டுவது அதிக லாபங்களை தரும். அரசுப் பணியாளர்களுக்கு வேலைப்பளு அதிகரிக்கும். அதிகாரிகள் கெடுபிடிகளும் அதிகமாகும். தனவருமானம் அதிகரிப்பதால் அனைத்துக் காரியங்களும் அனுகூலமாக இருக்கும். அதற்கேற்ப செலவினங்களும் கூடும். தொழிலில் மிகப் பெரிய சாதனைகள் புரிவீர்கள்.

## மகரம்

( உத்திராடம்- 2,3,4-பாதங்கள், திருவோ ணம்-1,2,3,4 மற்றும் அவிட்டம் 1,2 பாதங்கள் )

உத்திராடம்- 2,3,4- பாதங்கள் ---

இந்த வாரம் குடும்பத்தில் சந்தோஷம் குறைவில்லாது நிறைந்திருக்கும். தம்பதிகளிடையே அன்யோன்யம் அதிகரிக்கும். உங்கள் தனித் திறமைக்கு ஏற்ப பெயரும் புகழும் கிடைக்கும். புதிய கடன்களை அடைக்க, சேமிப்புகளில் இருக்கும் பணத்தில் கை வைக்க வேண்டிய நிலை ஏற்படும். பங்குச் சந்தையில் ஆலோசித்து இறங்குவது நல்லது. பதறாத காரியம் சிதறாது முடியும் என்பதால், எந்த ஒரு காரியத்தையும் பதட்டமின்றி பொறுமையாக செய்தால் வெற்றி நிச்சியம். பணிபுரியும் பெண்களுக்கு விரும்பிய இடத்திற்கு இடமாற்றங்கள் கிடைக்கும் வரவுக்கு மீறிய செலவுகளைக் கட்டுப்படுத்தி சேமிப்பை உயர்த்துவது நல்லது. சிலருக்குப் பணி அல்லது வீடு ஆகிய இடமாற்றங்கள் ஏற்படலாம்.

திருவோணம்-

இந்த வாரம் பெரியவர்கள் ஆசியால் நீங்கள் எடுக்கும் அனைத்து முயற்சிகளும் வெற்றி பெறும். புத்திர பாக்கியம், சுபகாரிய நிகழ்ச்சிகள் ஆகியவற்றால் இல்லத்தில் மகிழ்ச்சி பொங்கும். வெளிநாட்டுப் பயணம் மற்றும் வாணிபத்தால் தன லாபம் அதிகரிக்கும். புதிய விரிவாக்கங்கள் செய்வதால் தொழிலில் நல்ல வளர்ச்சி ஏற்படும். பணிவுடன் நடக்கும் பணியாளர்கள், அதிகாரிகள் உதவியால் உயர்பதவிகள் கிடைக்கும். சுபச் செய்திகள் வந்து காதுகளில் தேனைப் பாய்ச்சும். புதிய கொள்முதல் களால் வியாபாரம் பெருகி இலாபம் அதிகரிக்கும். தொட்டது துலங்கும். நீங்கள் எடுக்கும் அனைத்து முயற்சிகளும் வெற்றி அடைய கடின உழைப்பு தேவைப்படும்.

அவிட்டம் 1,2 பாதங்கள் –

இந்த வாரம் வீட்டில் சுப காரியங்கள் அனைத்தும் சிறப்புற, வெற்றிகரமாக நடக்கும். புதிய நண்பர்கள் சேர்க்கை, தொழில் இலாபம் ஆகியவை ஏற்படும். புதிய பெண்கள் தொடர்பு ஏற்படும். பல வகையான உயரக வாகன வசதி அமையும். கணவன், மனைவி இடையே மிகுந்த ஒற்றுமை ஏற்பட்டு சந்தோஷம் நிலவும். அலங்காரப் பொருட்கள் மற்றும் வாசனை திரவிய வியாபாரங்களில் அதிக இலாபம் காணலாம். நன்கு ஆராய்ந்து பங்குச் சந்தை மற்றும் போட்டி பந்தயங்களில் ஈடுபட்டால் அதிக இழப்பைத் தவிர்க்கலாம். திருமணமாகாத பெண்களுக்கு திருமணத்துக்கு முயற்சிகள் இந்த வாரம் மேற்கொள்ளப்படும். தேவையற்ற அலைச்சல் தரும் பயணங்களால் தேகசுகம் குறையும்.

## கும்பம்

(அவிட்டம் – 3,4 பாதங்கள்– சதயம்-1,2,3,4 பாதங்கள்-பூரட்டாதி-1,2,3 பாதங்கள்)

அவிட்டம் – 3,4 பாதங்கள்—

இந்த வாரம் பண விஷயத்தைப் பொருத்தவரை திருப்திகரமான வாரமாக இருக்கும். வீட்டில் திருமண வைபவங்களை எதிர்பார்க்கலாம். மாணவர்களுக்கு கல்வியில் தேர்ச்சி உண்டாகும். கடமை உணர்வு மிக்க அரசு ஊழியர்களுக்குக் கட்டளைகளை இடும்படியான அதிகாரம் மிக்க உயர் பதவிகள் கிடைக்கும். பொழுது போக்குச் செலவுகள் அதிகமாகும்.

பணியாளர்கள் கடினமாக உழைத்தாலும், உழைப்புக்கேற்ற ஊதியம் கிடைக்காது. பழைய பொருட்களை விற்பனை செய்யும் வியாபாரிகள் நல்ல வருமானத்தை அடைவார்கள். மொத்தத்தில் வீட்டில் அமைதியும், நிம்மதியும் நிலவும். மனைவியின் பேச்சைக் கேட்டு நடக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும்.

சதயம்-

இந்த வாரம் உயர் வாகன வசதிகள் மேம்படும். அந்தஸ்து உயரும். உதவிகரமான புதிய, நல்ல நண்பர்கள் கிடைப்பர். இனிய பயணங்கள் மற்றும் புண்ணியத் தல யாத்திரைகள் பலன் அளிக்கும். எழுத்துத் தொழிலில் வேலையில் காட்டப்படும் சிரத்தை மற்றும் கடின உழைப்பால் கல்லாக் கட்டுவீர்கள்.

உங்களுக்குக் கீழ் பணிபுரிபவர்கள் வேலையில் கை கொடுப்பர். மற்றவர்களிடம் பேசும் போது எச்சரிக்கையுடன் பேசவும். உறவுகளிடையே ஒற்றுமைக் குறைவால் உறவில் விரிசல்கள் ஏற்படும். பதட்டப்படாமல் சம்பந்தப்பட்டவர்களிடம் சமாதானமாகப் போவது நல்லது. விற்பனைப் பிரதிநிதிகளுக்கு அலைச்சலுக்கு தக்க ஆதாயம் ஏற்படும்.

பூரட்டாதி-1,2,3 பாதங்கள் –

இந்த வாரம் பல திசைகளில் இருந்தும் பணம் கூடுதலாக வரும். எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு தொழிலில் புதிய திட்டங்களைத் தீட்டி முன்னேற முயல்வீர்கள். ஆக்கமும், ஊக்கமும் பெருக சுயமாக சம்பாதிக்கும் வழிமுறைகள் கண்டறிவீர்கள். இக்கட்டான சூழ்நிலைகளில் இல்லத்தரசியின் உதவிகள் கை கொடுக்கும். பணிபுரியும் பெண்கள் தங்கள் உயர் அதிகாரிகளின் சொல் கேட்டு நடந்தால் உன்னத நிலை அடைவர். சிலருக்கு அனுபவ பூர்வமான அறிவுத்திறன் கூடும். பூமி வீடு மூலம் இலாபம் ஏற்படும். நினைத்ததை நினைத்தபடியே சாதிக்கும் திறன் அதிகரிக்கும். சிலருக்கு வீண் விரயங்கள் ஏற்படலாம்.

## மீனம்

( பூரட்டாதி – 4 ஆம் பாதம், உத்திரட்டாதி-1,2.3.4 பாதங்கள் , ரேவதி- 1,2,3,4 பாதங்கள்)

பூரட்டாதி – 4 ஆம் பாதம் –

இந்த வாரம் மதிப்பு, கௌரவம் உயரும். பருவநிலை காரணமாக சோம்பேறித்தனம் அதிகரிக்கும். பெண்களுக்கு ஆன்மீகத்தில் ஈடுபாடு, அதன் காரணமாக குடும்ப முன்னேற்றம் ஏற்படும். குழந்தைகளின் நடவடிக்கைகள் சந்தோஷத்தைத் தரும். உறவுகள் வருகையால் சந்தோஷம் பெருகுவது போல், செலவுகளும் அதிகரிக்கும். சிறப்பான பொதுசனத் தொடர்பு காரணமாக உபரி வருமானம் கிடைக்கும். பொருளாதார உயர்வினால் எப்போதும் மனதில் மகிழ்ச்சி பொங்கும். குடும்பத்தின் ஆசைகள் அனைத்தையும் நிறைவேற்றி அவர்களை மகிழ வைப்பீர்கள். நல்லதொரு வாகனம் வாங்க முயற்சிப்பீர்கள். மிகக் கடினமான நண்பர்களிடம் அனுசரித்துச் செல்வது நல்லது.

உத்திரட்டாதி-

இந்த வாரம் பலவழிகளிலும் பணவரவு ஏற்படும். குடும்ப உறவுகளின் ஒத்துழைப்பால் குடும்ப முன்னேற்றம் சாத்தியப்படும். பக்தி மார்க்கத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். சுபகாரிய நிகழ்வுகளால் இல்லத்தில் மகிழ்ச்சி பொங்கும் எதையும் சாதிக்கும் திறன் அதிகரிக்கும். பிராயணத்தின் போது எச்சரிக்கையுடன் இருப்பது அவசியம். அரசுப் பணி புரிபவர்களுக்கு அனுகூலமான வாரம். ஆரோக்கியமான சூழ்நிலை உருவாகும். அரசு உதவிகள் தொழிலில் முன்னேற்றம் ஏற்படலாம். பணிபுரியும் இடங்களில் உங்கள் மதிப்பு உயரும். அதிகாரம் மிக்க பதவிகளை அலங்கரிக்கும் நிலைக்கு நீங்கள் உயர்வீர்கள். தொழில் புரிபவர்கள் புதிய எந்திரங்களை வரவழைத்து உற்பத்தியை பெருக்கி ஆதாயம் காண்பர்.


ரேவதி-

இந்த வாரம் உங்கள் அசாத்தியத் திறமையால் சம்பாதிக்கும் திறன் அதிகரிக்கும். மதிப்பு மிக்க பெரியவர்கள் சந்திப்பு மகிழ்ச்சி தரும். உங்கள் திறமைக்கு ஏற்றபடி புகழ், கௌரவமும் கூடும். தேவையான நேரத்தில் நண்பர்களின் உதவி கண்டிப்பாகக் கிடைக்கும். வியாபாரிகள் எதிர்பார்த்தபடி வங்கிக் கடன்கள் சிரமமின்றி கிடைக்கும். தொழிலில் முழு வெற்றி அடைய அதிக முயற்சிகள் தேவைப்படும். அனைத்து வேலைகளையும் நம்பிக்கையுடன் செய்து முடிப்பீர்கள். அரசு வேலைகளுக்கு மனு செய்தவர்கள் சாதகமான பதில்களை எதிர்பார்க்கலாம். நண்பர்கள் மற்றும் உறவுகளிடம் தர்க்கம் செய்யாதிருப்பது நல்லது. அடிக்கடி தேவையற்ற பயணங்களை மேற்கொள்ள நேரும்.



அ.தி.மு.க. பொதுக்குழு தொடர்பான வழக்கில் ஐகோர்ட் சாதகமான தீர்ப்பு அளித்ததை தொடர்ந்து முன்னாள் முதல்வர் எடப்பாடி பழனிசாமியை சென்னை, பசுமைவழிச் சாலையில் உள்ள அவரது இல்லத்தில் நேற்று வி.வி. ராஜன் செல்லப்பா எம்.எல்.ஏ. சந்தித்து பூங்கொத்து கொடுத்து வாழ்த்து தெரிவித்தார்.

# நத்தத்தில் இந்து முன்னணி சார்பில் விநாயகர் சிலைகள் ஊர்வலம்



**நத்தம், செப்.5**

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் நகர்பகுதிகளில் அண்ணாநகர், கொண்டையம்பட்டி, அசோக்நகர்,கோவில்பட்டி போன்ற இடங்களிலும், சுற்று வட்டார கிராமப் பகுதிகளான சமுத்திராபட்டி, ஆவிச்சிபட்டி, உலுப்பகுடி, வேலம்பட்டி உள்ளிட்ட இடங்களில் கடந்த மாதம் 31-ந் தேதியன்று விநாயகர் சதுர்த்தியையொட்டி ஆங்காங்கே விநாயகர் சிலைகள் வைக்கப்பட்டு சிறப்பு வழிபாடுகள் நடந்தது.இதைதொடர்ந்து நத்தத்தில் இந்து முன்னணி சார்பில் நேற்று விநாயகர் சிலைகள் ஊர்வலம் நடந்தது.இதையொட்டி அந்தந்த பகுதிகளிலிருந்தும் அலங்கரிக்கப்பட்ட வாகனங்களில் ஒலிபெருக்கி ஓசையுடன் மேளதாளம் முழங்க விநாயகர் சிலைகள் நத்தம் கோவில்பட்டியில் உள்ள ஆஞ்சநேயர் கோவிலை வந்தடைந்தது.

பின்னர் அங்கிருந்து விநாயகர் சிலை ஊர்வலம் தொடங்கியது.இதற்கு இந்து முன்னணி மாவட்ட செயலாளர் மணிமாறன் தலைமை தாங்கினார். கிழக்கு மாவட்ட தலைவர் ராஜா,வடக்கு ஒன்றிய தலைவர் சரண், வீரமுத்தரையர் முன்னேற்ற சங்க மாநில ஒருங்கிணைப்பாளர் பூமிஅம்பலம் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.தொடர்ந்து விநாயகர் சிலைகள் ஊர்வலம் நத்தம் பஸ் நிலையம், மூன்றுலாந்தர் பகுதி, அவுட்டர் வழியாக அம்மன் குளத்தை சென்றடைந்தது. அங்கு விநாயகர் சிலைகள் கரைக்கப்பட்டது. இதில் சுமார் 32-க்கும் மேற்பட்ட சிலைகள் கரைக்கப்பட்டன. இதில் இந்து முன்னணியைச் சேர்ந்த நகர துணைதலைவர் வீரமணி, ஒன்றிய துணை தலைவர் கார்த்திக் ராஜா உள்ளிட்ட நிர்வாகிகள் பலரும் கலந்து கொண்டனர்.பாதுகாப்பு ஏற்பாடுகளை நத்தம் தாசில்தார் சுகந்தி, மாவட்ட உதவி போலீஸ் சூப்பிரண்டு அருண் கபிலன் ஆகியோர் மேற்பார்வையில் 200க்கும் மேற்பட்ட போலீசார் ஈடுபட்டிருந்தனர்.

# சம்பள பணத்தை தவறுதலாக வேறொருவருக்கு அனுப்பிய பெண்

## திரும்ப கிடைத்ததும் கண்ணீர் மல்க நன்றி



**மலேசியா, செப். 05-**

இணையவழி பரமாற்றம் மூலம் தவறுதலாக வேறொருவருக்கு பணத்தை அனுப்பிய பெண், அது திரும்ப கிடைத்ததும் கண்ணீர் மல்க நன்றி தெரிவித்தார்.

மலேசியாவில் பஹதா பிஸ்தாரி என்ற இளம்பெண் ஒருவர் தான் வேலை பார்த்து ஈட்டிய முதல் மாத சம்பளத்தை தன் தாயாருக்கு கொடுப்பதற்காக அவருடைய வங்கிக் கணக்குக்கு இணைய வழி பணப்பரிமாற்றம் செய்துள்ளார். அதை தொடர்ந்து பணம் இன்னும் வரவில்லை என்று தாயார் தெரிவித்தார். அதன்பின், அந்த பெண் வங்கி பணப்பரிவர்த்தனை விவரங்களை பரிசோதித்ததில், வேறொருவருக்கு பணம் சென்றது தெரிய வந்தது.

தற்செயலாக நடந்த கவனக்குறைவால் அக்கவுண்ட் எண் மாறி விட்டது. இதனால் அவர் தனது முதல் மாத சம்பளத்தை ஒரு அந்நியருக்கு மாற்றி விட்டார். இது தெரிய வரவே அந்த நபரின் போன் நம்பரை கொண்டு அவரை தொடர்பு கொண்ட போது அந்த நபர், இந்த பணத்தை நன்கொடையாக அளித்ததாக நினைத்துக் கொள்ளுமாறு பெண்ணிடம் கூறியுள்ளார்.

இதில் அதிர்ச்சியடைந்த பெண் அழுது கொண்டே நடந்தவற்றை வீடியோவாக டிக்டாக்கில் பதிவேற்றினார். இதை பலரும் பார்த்து பரிதாபப்பட்டனர்.

அதன் பின் சுவாரசிய சம்பவம் அரங்கேறியது. அந்த பெண்ணை மிரட்டிய நபர் அடுத்த நாள் பணத்தை திருப்பி அனுப்பி விட்டார். இதை சற்றும் எதிர்பராத அந்த பெண், அந்த நபர் தன்னை பயப்படுத்துவதற்காக சற்றுநேரம் முன் வெறுமனே அவர் நாடகமாடியதை தெரிந்து கொண்டார். அவருக்கு நன்றி தெரிவித்தார்.

# அங்கூர் வைஷ், தலைவர் - கிரியேட்டர் பார்ட்னர்ஷிப்ஸ், பேஸ்புக் இந்தியா (மெட்டா) உடன் ஒரு கலந்துரையாடல்

**சென்னை, செப் 05-**

படைப்பாளிகளின் சந்திப்பின் நோக்கம் என்ன? பிராந்தியங்கள் மற்றும் மொழிகள் முழுவதும், இந்தியா ரீல்ஸில் மகிழ்விக்கப்படுகிறது. தமிழ்நாட்டைச் சேர்ந்த படைப்பாளிகள் பல போக்குகளைத் தூண்டி, தேசிய மற்றும் பிராந்தியப் பின்தொடர்வதைப் பெற்றுள்ளனர். ஒரு தளமாக, இந்த படைப்பாளர்களைக் கொண்டாட விரும்புகிறோம், மேலும் அவர்கள் ஒருவரோடு ஒருவர் ஒத்துழைக்க அவர்களுக்கு ஒரு மேடையை வழங்க விரும்புகிறோம், அதைத்தான் இந்த சந்திப்பின் மூலம் நாங்கள் அடைய திட்டமிட்டுள்ளோம். தொற்றுநோயால் தூண்டப்பட்ட இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு இது மிகவும் முக்கியமானது, ஏனெனில் படைப்பாளிகள் இப்போது வெளியேறவும், கற்றுக்கொள்ளவும், தங்கள் அருகிலுள்ள மற்றும் சமூகத்தில் உள்ள பிற படைப்பாளர்களுடன் ஈடுபடவும் விரும்புகிறார்கள். கோயம்புத்தூரை ஏன் தேர்வு செய்தீர்கள்?

இந்த கிரியேட்டர் மீட் அப்களுடன், நாங்கள் நாடு முழுவதும் சுற்றி வருகிறோம், ஏனென்றால் கடந்த 2 ஆண்டுகளாக ரீல்ஸில், குறிப்பாக சிறிய நகரங்கள் மற்றும் ஊர்கள் மற்றும் பிராந்திய மொழிகளின் திறமைகள் வளர்ந்துள்ளன. தமிழ்நாட்டைச் சேர்ந்த படைப்பாளிகள் இந்தத் திறமை அலையில் அங்கம் வகிக்கின்றனர். ரீல்ஸில் 'அரபிக் குத்து' மற்றும் 'பாதலா பாதலா' போன்ற பாடல்கள் பிரபலமடைந்திருப்பது அவை மேடையில் ட்ரெண்டுகளைத் தூண்டிய விதத்திற்குச் சான்றாகும். மேலும், கோவையில் சந்திப்பு நடைபெற்ற போது, திருச்சி, மதுரை, வேலூர், ஒட்டப்பாலம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த படைப்பாளிகளும் கலந்து கொண்டனர். ரீல்ஸ் டேப், எக்ஸ்ப்ளோரில் உள்ள இடம் மற்றும் பரிந்துரைக்கப்பட்ட ரீல்களையும் காட்டும் AI இயக்கப்படும் ஹோம் ஃபீட் மூலம் ஸ்க்ரோலிங் செய்வதன் மூலம் உங்கள் உள்ளடக்கத்தைக் கண்டறியலாம். 2020 இல் அறிமுகப்படுத்தப்பட்டதிலிருந்து, 30-60-90 வினாடிகள் ரீல்கள், ரீல்ஸ் டேப், ரீமிக்ஸ், ரீல்ஸ் விஷுவல் ரிப்ளைகள், ஒலிகளைச் சேமிப்பது மற்றும் ஆடியோ உலாவி போன்ற ஆடியோ அம்சங்கள் வரை பல அம்சங்களுடன் ரீல்ஸ் உருவாகியுள்ளது.

Printed Published and Owned
by **S.Manimaran,**
Printed at Manimaran
Printers at **9**, Dindigul
Main Road, vilangudi,
Madurai - 625 018.
Phone: 0452- 2668165,
0452- 2668185,
E-Mail: maduraiedi@thinaboomi.com
**RNI Regn. No.61494 / 94**

# உலக பாலியல் தினத்தையொட்டி பாலியல் விழிப்புணர்வு பிரச்சார மனிதசங்கிலி

**சென்னை, செப் 05-**

உலக பாலியல் தினத்தையொட்டி சென்னை வடபழனியில் உள்ள டாக்டர் காமராஜ் மருத்துவமனையில் பாலியல் விழிப்புணர்வு பிரச்சார மனிதசங்கிலி, கையெழுத்து இயக்கம், பாலியல் வன்கொடுமைகளுக்கு எதிரான உறுதிமொழி ஏற்பு ஆகியவை நடைபெற்றது.இதுகுறித்து உலக பாலியல் சங்க பாலியல் உரிமை குழு உறுப்பினர் டாக்டர் டி.காமராஜ், மீடியா கமிட்டி தலைவரும், அசோசியேட் செயலாளருமான டாக்டர் கே.எஸ்.ஜெயராணி காமராஜ் ஆகியோர் கூறுகையில், குழந்தைகள் மீதான பாலியல் வன்முறை அதிகரித்துவருவது வேதனை அளிக்கிறது. பாலியல் தொடர்பான விழிப்புணர்வு அனைவருக்குமே மிக அவசியமான ஒன்றாகும். குறிப்பாக பெண் குழந்தைகளுக்கு மட்டுமல்ல, பெற்றோர்களுக்கும் தேவைப்படுகிறது. இதுதொடர்பான விழிப்புணர்வு ஏற்படுத்தும் பணியை நாங்கள் கடந்த 28 ஆண்டுகளாக மேற்கொண்டு வருகிறோம்.

பாலியல் விஷயங்களையும், பாலியல் உணர்வுகளையும் மூடி மூடி வைப்பதால் அனாகரிகமாக வெறித்தனத்தோடு வெளிப்பட்டு பாலியல் வன்முறையாக உருவெடுக்கிறது. இந்த சமூக கொடுமையிலிருந்து மீள முறையான பாலியல் கல்வி தேவைப்படுகிறது. அதற்காகத்தான் கடந்த சில தினங்களுக்கு முன்பாக கேரள உயர்நீதிமன்றம், பள்ளிக்கூட பாடத்திட்டத்தில் பாலியல் கல்வியை சேர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என கேரள அரசுக்கு உத்தரவிட்டுள்ளது. இதனை நாங்கள் மனப்பூர்வமாக வரவேற்கிறோம். இதே போல் தமிழகத்தில் பள்ளிக்கூட பாடத்திட்டத்தில் பாலியல் கல்வியை சேர்க்க வேண்டும் என வலியுறுத்துகிறோம் என்று டாக்டர்கள் டி.காமராஜ், ஜெயராணி காமராஜ் ஆகியோர் கூறினர்.

# இந்து அறநிலையத்துறை கோவில்களில் தமிழில் அர்ச்சனை செய்து வழிபட்ட நாம் தமிழர் கட்சியினர்



**வத்தலகுண்டு, செப். 05**

திண்டுக்கல்மாவட்டம்நிலக்கோட்டையில் 100-ஆண்டு பழமைவாய்ந்த பிரசித்தி பெற்ற அகோபில நரசிம்ம பெருமாள் கோவில்,நடராஜர்கோவில்,மல்லீஸ்வரன் சிவன் கோவில் உள்ளிட்ட 10-க்கும் மேற்பட்ட இந்து அறநிலையத்துறை கட்டுப்பாட்டில் உள்ள கோவில்களில் தமிழகஅரசுஉத்தரவுப்படிஅர்ச்சகர்களின் ஒத்துழைப்போடு நாம் தமிழர் கட்சி தொகுதி செயலாளர் செந்தில் முருகன் தலைமையில் தமிழில் அர்ச்சனை செய்துவழிபட்டனர்.

அப்போது உள்ளிருக்கும் சிவனும் தமிழர், கோவிலை கட்டிய வரும் தமிழர், வழிபடுவோரும் தமிழர், பின் எதற்கு புரியாத சமஸ்கிருதம் சமஸ்கிருதம் தவிர்த்து தமிழில் அர்ச்சனை செய்வோம் என வலியுறுத்தி சிறப்பு அபிஷேக ஆராதனைபூஜைவழிபாடுநடத்தினர்.

இந்நிகழ்ச்சியில் ஒன்றிய தலைவர் தமிழ்மணிதொகுதிதலைவர்முருகன்,கஸ்பார்,யோகேஸ்வரன் உட்பட்ட பலர் கலந்து கொண்டனர்.

# நத்தம் அருகே அரசு பஸ் ஓட்டலுக்குள் புகுந்து விபத்து: உடல் நசுங்கி 2 பேர் பலி



**நத்தம், செப்.5**

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் -கோவில்பட்டியை சேர்ந்தவர் தேவராஜ்(61). சிரங்கம்பட்டியை சேர்ந்தவர் பாண்டி(50). பூ . வியாபாரி.இவர்கள் புளிக்கடை ஸ்டாப் அருகில் உள்ள ஓட்டலின் அருகில் இருசக்கர வாகனத்தில் நின்று கொண்டிருந்தனர். அப்போது நத்தத்திலிருந்து மதுரை நோக்கிச்சென்ற அரசு டவுன் பஸ் கட்டுப்பாட்டை இழந்து சாலையோரத்தில் இருந்த ஓட்டலுக்குள் புகுந்தது. இதில் ஓட்டலின் அருகில் இருசக்கர வாகனத்தில் நின்று கொண்டிருந்த தேவராஜ் மற்றும் பாண்டி ஆகியோர் அரசு பஸ்ஸின் உள்ளே சக்கரத்தில் சென்று மாட்டிகொண்டனர். இதில் இரத்த வெள்ளத்தில் துடிதுடித்து இருவரும் சம்பவ இடத்திலேயே பலியாகினர். தகவலறிந்து சம்பவ இடத்திற்கு வந்த நத்தம் போலீசார் இறந்தவர்களின் பிரேதத்தை கைப்பற்றி நத்தம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைத்தனர். மேலும் பஸ்ஸில் பயணம் மற்றும் சாலையோரத்தில் நின்று கொண்டிருந்த 10-க்கும் மேற்பட்டோர் நத்தம் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.இச்சம்பவம் தொடர்பாக போலீஸ் இன்ஸ்பெக்டர் தங்கமுனியசாமி வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறார். இதனால் நத்தம்- மதுரை சாலையில் சுமார் ஒரு மணி நேரம் போக்குவரத்து பாதிக்கபட்டது.

# இன்சூரன்ஸ் தேவை வேண்டாமென்று நினைத்தால் நிறுவனங்கள் வழங்கும் ஜீரோ காஸ்ட் டேர்ம்

**மதுரை, செப். 05-**

மக்கள்தொகையில் பெரும் பகுதியினருக்கு வேலைப் பளுவின் வாழ்க்கையானது 60 வயதுக்கும் அப்பால் அதிகரித்து வருகிறது. இதன் விளைவாக ஆயுள் காப்பீட்டாளர்கள் 60 வயதுக்கு மேல் மற்றும் 70 வயது வரை மற்றும் 75 வயது வரை தொடர்ந்து செயல்படும் பாலிசிகளை வடிவமைத்து வருகின்றனர். பல பாலிசி வாங்குபவர்கள் 60 வயதை எட்டிய பிறகும் இன்சூரன்ஸின் தேவை வேண்டாமென்று நினைத்தால் நிறுவனங்கள் ஜீரோ காஸ்ட் எனும் நீட்டிக்கப்பட்ட டேர்ம் கவரை வழங்குகின்றன. அதாவது பாலிசியை முன்கூட்டியே ரத்து செய்தால் பாலிசிதாரருக்கு (வட்டியின்றி) செலுத்தப்பட்ட பிரீமியம் திருப்பி அளிக்கப்படும்.

பல பாலிசிதாரர்கள் எப்போது ஓய்வு பெறுவார்கள் என்று தெரியவில்லை. மேலும் 75 வயது வரை கால அவகாசம் பெற விரும்புகிறார்கள். ஆனால் அவர்கள் 60 வயதில் ஓய்வு பெறலாம் அல்லது அவர்களது குடும்பம் நன்கு செட்டில் ஆகி அவர்களின் நிதித் தேவைகள் கவனிக்கப்பட்ட பிறகு அவர்களுக்கு காப்பீடு தேவையில்லை. இந்தக் கொள்கை அவர்களுக்கு முன்கூட்டியே ரத்து செய்து நீண்ட காலத்திற்கு அவர்கள் செலுத்திய அதிக பிரீமியத்தைப் பெறுவதற்கான நெகிழ்வுத்தன்மையை வழங்குகிறது என்று பாலிசிபஜார் வணிகத் தலைவர் (டேர்ம் லைப் காப்பீடு) சஜ்ஜா பிரவீன் சவுத்ரி கூறினார். பஜாஜ் அலையன்ஸ் லைப் மற்றும் மேக்ஸ் லைப் போன்ற நிறுவனங்கள் இதன் அடிப்படையில் பல பாலிசிகளை அறிமுகப்படுத்தியுள்ளன. தவிரஇ பிற லைப் நிறுவனங்களும் இதுகுறித்து ஆய்வில் இருக்கின்றன. வாடிக்கையாளர்கள் அனைத்து பாலிசிகளையும் ரத்து செய்ய முடியும் என்றாலும் காப்பீட்டாளர்கள் அதிக பிரீமியத்தைத் திருப்பித் தருவது இதுவே முதல் முறையாகும்.



மதுரை மீனாட்சி அம்மன் திருக்கோவிலில் நடைபெற்று வரும் ஆவணி திருவிழாவில் நேற்று சுந்தரேசுவரருக்கு பட்டாபிஷேகம் நடைபெற்றது. மகுடம் தரித்து செங்கோல் ஏந்தி சுந்தரேசுவரர் பக்தர்களுக்கு அருள்பாலித்தார்.

# மிகைல் கோர்பசேவ் இறுதி நிகழ்வில் ரஷ்ய அதிபர் பங்கேற்காததால் சர்ச்சை



**மாஸ்கோ, செப். 05-**

மிகைல் கோர்பசேவ் இறுதி நிகழ்வில் ரஷ்ய அதிபர் புதின் கலந்துகொள்ளாதது சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

சோவியத் யூனியனின் கடைசி அதிபராக அறியப்பட்ட மிகைல் கோர்பசேவ் வயது முதிர்வு காரணமாக மரணம் ஆகஸ்ட் 30-ஆம் தேதி மரணம் அடைந்தார். அவருக்கு வயது 91. பனிப்போர் முடிவுக்கு காரணமாக இருந்த மிகைலின் கோர்பசேவின் மரணம், ரஷ்ய மக்களை சோகத்தில் ஆழ்த்தியுள்ளது. அவர் இறந்து நான்கு நாட்களுக்குப் பிறகு நேற்று அவரது உடல் அடக்கம் செய்யப்பட்டது. இந்த நிகழ்வில் ரஷ்யாவின் முக்கிய அரசியல் தலைவர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

ஆனால், இறுதிச் சடங்கில் ரஷ்ய அதிபர் புதின் பங்கேற்கவில்லை. வேலை பளுவின் காரணமாக மிகைல் கோர்பசேவின் இறுதி நிகழ்வில் புதின் கலந்துகொள்ளவில்லை என ரஷ்ய அரசு விளக்கம் அளித்துள்ளது.

உக்ரைன் மீதான ரஷ்யாவின் படையெடுப்பை மிகைல் கடுமையாக விமர்சித்திருந்த பின்னணியில், மிகைலின் இறுதி நிகழ்வில் புதின் கலந்து கொள்ளாமல் இருப்பதை பல்வேறு தரப்பினரும் விமர்சித்துள்ளனர். யார் இந்த மிகைல் கோர்பசேவ்? - 1931-ஆம் ஆண்டு மார்ச் 2-ஆம் தேதி ரஷ்யாவின் பிரிவோல்னோயீல் பிறந்த மிகைல் கோர்பசேவ் தன்னுடைய 19 வயதில் சட்டம் பயின்றார். பின் கம்யூனிஸ்ட் கொள்கை மீது ஆர்வம் கொண்டு அக்கட்சியில் இணைந்து அரசியல் பணியாற்றத் தொடங்கினார். மிகைல் கோர்பசேவ் 1985-ஆம் ஆண்டு சோவியத்தின் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளராக தேர்ந்தெடுக்கப்பட்ட மிகைல் கோர்பசேவ் சோவியத் யூனியனின் அதிபரானார்.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

## பொது அறிவிப்பு

எமது கட்சிக்காரரான திண்டுக்கல் மாவட்டம், பழனி வட்டம், வில்வாதம்பட்டி கிராமம், வில்வாதம்பட்டி மேற்குத்தெரு, க.எண். 39ல் வசிக்கும் மாரிமுத்து அவர்களின் மகன் இராமச்சந்திரன் அவர்களின் தகவலின்படி, எமது கட்சிக்காரர் கடந்த 05.01.2022ம் தேதி காலை சுமார் 11.00 மணியளவில் புளியம்பட்டியில் உள்ள ஜெராக்ஸ் கடையில் நகல் எடுக்க சென்ற சமயம் எமது கட்சிக்காரரின் பூர்வீக சொத்தான அவரது தாத்தா வஞ்சியப்ப கவுண்டர் பெயரில் உள்ள பெயரில் உள்ள சுத்த கிரைய ஆவணத்தை (ஆவண எண் 2157) புளியம்பட்டியில் உள்ள ஜெராக்ஸ் கடையில் ஜெராக்ஸ் எடுக்க செல்லும் வழியில் மேற்படி சுத்த கிரைய ஆவணம் வழியில் எங்கோ தவறிவிட்டது. மேற்படி சுத்த கிரைய ஆவணம் கிடைக்கப்பெற்றவர்கள் மேற்படி சுத்த கிரைய ஆவணம் எம்மிடமோ (அ) எமது கட்சிக்காரரிடமோ ஒப்படைக்க வேண்டுமாய் கேட்டுக்கொள்ளப்படுகிறது

Lr.K.KUMARAVADIVEL M.A.,M.L., ADVOCATE, PALANI-624601

## பொது அறிவிப்பு

எமது கட்சிக்காரரான திண்டுக்கல் மாவட்டம், பழனி வட்டம், வில்வாதம்பட்டி கிராமம், புளியம்பட்டி, வடக்கு தெரு, க.எண். 185ல் வசிக்கும் திருமலைசாமி கவுண்டர் அவர்களின் மகன் சிவசங்கர் அவர்களின் தகவலின்படி, எமது கட்சிக்காரர் கடந்த 12.05.2022ம் தேதி காலை சுமார் 11.00 மணியளவில் புளியம்பட்டியில் உள்ள ஜெராக்ஸ் கடையில் நகல் எடுக்க சென்ற சமயம் எமது கட்சிக்காரர் பெயரில் உள்ள அசல் செட்டில் மெண்ட் (ஏற்பாட்டு ஆவணம்) (ஆவண எண் 2939) ஆவணத்தை புளியம்பட்டியில் உள்ள ஜெராக்ஸ் கடையில் ஜெராக்ஸ் எடுக்க செல்லும் வழியில் மேற்படி அசல் செட்டில்மெண்ட் (ஏற்பாட்டு ஆவணம்) வழியில் எங்கோ தவறிவிட்டது. மேற்படி அசல் செட்டில்மெண்ட் (ஏற்பாட்டு ஆவணம்) கிடைக்கப்பெற்றவர்கள் மேற்படி அசல்செட்டில்மெண்ட் (ஏற்பாட்டு ஆவணம்) எம்மிடமோ (அ) எமது கட்சிக்காரரிடமோ ஒப்படைக்க வேண்டுமாய் கேட்டுக்கொள்ளப்படுகிறது

Lr.K.KUMARAVADIVEL M.A.,M.L., ADVOCATE, PALANI-624601

## அறிவிப்பு

சிவகங்கை மாவட்டம், காளையார்கோவில் வட்டம், வேளாரேந்தல் அஞ்சல், விளாங்காட்டூர் கிராமம் கதவு எண்.462ல் என்ற முகவரியில் வசிக்கும் சுப்பிரமணியன் அவர்கள் மகன் ஜெயசங்கர் ஆகிய எனது கட்சிக்காரர் கொடுத்த தகவலின் பேரில் கொடுக்கும் பொது அறிவிப்பு யாதெனில் எனது கட்சிக்காரர் கடந்த 28.01.2020ம் தேதி காளையார்கோவில் சார்பதிவக அலுவலகத்தில் 2020ம் வருடம் 115 எண்ணாக பதிவு செய்யப்பட்ட ஏற்பாடு ஆவணத்தின் மூலம் விளாங்காட்டூர் கிராமத்தில் பட்டா எண்.182ல் கண்ட முன் சர்வே எண்.137 பகுதி மற்றும் புதிய சர்வே எண்.234/3 கண்ட 1176 சதுரடி மனை இடம் மற்றும் மேற்படி பட்டா மற்றும் முன் சர்வேயில் கண்ட புதிய சர்வே எண்.234/4 மற்றும் 234/5ல் கண்ட மொத்த சதுரடி 2498 இடத்தை ஏற்பாடு ஆவணத்தின் மூலம் பெற்று அவர் சர்வ சுதந்திரமாக அடைந்து அனுபவித்து வருகிறார். மேற்படி சொத்தை ஈடுகாட்டி எனது கட்சிக்காரர் Orange Retail Finance India PVT Ltd-ல் கடன் கோரிய போது மேற்படி நிறுவனத்தால் மேற்படி சொத்து சம்பந்தமான ஆவணங்கள் சரிபார்க்கப்பட்டது. அப்போது தான் மேற்படி சொத்தின் மூல ஆவணமான அழகு மகன் சுப்பிரமணியன் பெயரில் காளையார்கோவில் தாசில்தார் வழங்கிய அசல் படிவம் பட்டா (பட்டா எண்.182) காணாமல் போனது தெரியவந்தது. ஆகவே மேற்படி காணாமல் போன மேற்படி அசல் படிவம் பட்டா (பட்டா எண்.182) ஆவணம் தன் வசம் வைத்திருப்பவர்களோ அல்லது மேற்படி சொத்தின் பேரில் யாருக்கேனும் உரிமையோ ஆட்சேபனையோ பின் தொடர்ச்சியாக இருந்தாலோ நாளது தேதி முதல் 15 நாட்களுக்குள் எழுத்து மூலமாக தக்க ஆதாரத்துடன் கீழ்க்கண்ட முகவரிக்கு தெரியப்படுத்தவும். அதற்கு பின்னிட்டு வரும் எந்தவிதமான ஆட்சேபனையும் எனது கட்சிக்காரரை எவ்வித வில்லங்கத்திற்கும் உட்படுத்தாது என்பதை இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறோம்.

அட்வகேட், **ஜே.உதுமான்** பி.எஸ்.,பி.எல்.,
இராமநாதபுரம். செல்: 9443408144

---

உட்கோட்ட நடுவர் நீதிமன்றம்
மற்றும்
வருவாய் கோட்டாட்சியர்
அலுவலகம்
பரமக்குடி
ந.க.பி 6/ 3135/2022

செல்வராசு
த/பெ. கோவிந்தன்
2/116, வடக்கு தெற்கு தெரு,
செவ்வூர், பரமக்குடி

அறிவிப்பு

மேற்படி முகவரியில் வசிக்கும் மனுதாரராகிய நான் எனது தாயார் ராமாயி என்பவர் கடந்த 30-11-2018 அன்று பரமக்குடி வட்டம் செய்யலூர் கிராமத்தில் இறந்ததை பதிவு செய்யக்கோரி இந்நீதி மன்றத்தில் மனுத்தாக்கல் செய்துள்ளேன்.என்னுடைய தாயார் இறந்ததை அறியாமையின்காரணமாக பதிவு செய்ய தவறிவிட்டேன். மேற்படி விசாரணைக்கான வாய்தா எதிர்வரும் 9-9-2022 தேதி அன்று பரமக்குடி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் நடைபெற உள்ளது.இதில் யாருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் அறிவிப்பு வெளியான 15 தினங்களுக்குள் காலை 10 மணிக்கு மேற்படி நடுவர் முன்பு ஆஜராகி தங்களது ஆட்சேபனையை தெரிவித்துக்கொள்ளலாம்.

மனுதாரர்
செல்வராசு

---

உட்கோட்ட நடுவர் நீதிமன்றம்
மற்றும்
வருவாய் கோட்டாட்சியர்
அலுவலகம்
பரமக்குடி
ந.க.பி 6/ 2990/2022

செல்வராசு
த/பெ. கோவிந்தன்
2/116வடக்குதெற்குதெரு
செவ்வூர், பரமக்குடி

அறிவிப்பு

மேற்படி முகவரியில் வசிக்கும் மனுதாரராகிய நான் எனது தந்தை கோவிந்தன் என்பவர் கடந்த 16-9-2013 அன்று பரமக்குடி வட்டம் செய்யலூர் கிராமத்தில் இறந்ததை பதிவு செய்யக்கோரி இந்நீதி மன்றத்தில் மனுத்தாக்கல் செய்துள்ளேன்.என்னுடைய தந்தை இறந்ததை அறியாமையின்காரணமாக பதிவு செய்ய தவறிவிட்டேன். மேற்படி விசாரணைக்கான வாய்தா எதிர்வரும் 9-9-2022 தேதி அன்று பரமக்குடி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் நடைபெற உள்ளது.இதில் யாருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் அறிவிப்பு வெளியான 15 தினங்களுக்குள் காலை 10 மணிக்கு மேற்படி நடுவர் முன்பு ஆஜராகி தங்களது ஆட்சேபனையை தெரிவித்துக்கொள்ளலாம்.

மனுதாரர்
செல்வராசு

---

கனம் உட்கோட்ட நடுவர் நீதிமன்றம் மற்றும் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம். மதுரை.
ந.க.எண்.6164/2022/டி

சின்னம்மாள்
த/பெ.லேட்.சுப்பிரமணியன்சேர்வை
2/232,M.மீனாட்சிபுரம்
பூலாம்பட்டி, வாவிடைமருதூர்
மதுரை மாவட்டம்-625501.
------- மனுதாரர்

--- எதிர் ---

உயர்திரு.வருவாய் கோட்டாட்சியர் அவர்கள்
வருவாய் கோட்டாட்சியர்
அலுவலகம், மதுரை.
------------ எதிர் மனுதாரர்

அறிவிப்பு

மேற்படி மனுதாராகிய நான், எனது தாயார் லேட்.அங்கம்மாள்,க/பெ.லேட். சுப்பிரமணியன் சேர்வை என்பவர் கடந்த 05.04.1969-ம் தேதி மதுரை மாவட்டம்,வாடிப்பட்டி வட்டம், எர்ரம்பட்டி கிராமத்தில் வைத்து இறந்ததை பதிவு செய்து உத்தரவிட வேண்டி மதுரை வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் மனு தாக்கல் செய்துள்ளேன். அம்மனு மீதான விசாரணைக்கான வாய்தா வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், மதுரை முன்பாக நடைபெறுகிறது.இதில் யாருக்கேனும் ஆட்சேபணை இருப்பின் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்ட 10தினங்களுக்குள் காலை 11.00மணிக்கு மேற்படி கனம் மதுரை உட்கோட்ட நடுவர் முன்பு ஆஜராகி தங்களது ஆட்சேபணையை தெரிவித்துக் கொள்ளலாம்.

மனுதாரர்
சின்னம்மாள்
மீனாட்சிபுரம்,பூலாம்பட்டி.

---

மாண்புமிகு சார்பு நீதிமன்றம்
இராமநாதபுரம்.
E.P.No:69/2021 in
O.S.No.106/2019

V.V.வடமலை
... நி.மனுதார்/வாதி
-எதிர் -

K.ராஜாத்தி
த/பெ.கருணாநிதி,
3/3322, பட்டணம்காத்தான் கிராமம்,
இராமநாதபுரம் வட்டம். ....
நி.2மனுதிர்மனுதார்/2ம்பிரதிவாதி

அறிவிப்பு

இதனால் 2ம் நிறைவேற்றுதல் எதிர்மனுதாரராகிய தங்களுக்கு அறிவிப்பது என்னவென்றால், மேற்படி வழக்கில் கண்ட நிறைவேற்றுதல் மனுதாரர், மை மனு சொத்திலிருந்து 1ம் நிறைவேற்றுதல் மனுதாரரையும், தங்களையும், மை சொத்திலிருந்து காலி செய்து மை சொத்தினை நிறைவேற்றுதல் மனுதார் வசம் ஒப்படைப்பு செய்வதற்காக, மை மனுவை தாக்கல் செய்துள்ளார். இதில் தங்களுக்கு ஏதேனும் ஆட்சேபனை இருப்பின் தாங்கள் சமூகம் நீதிமன்றத்தில் 08.09.2022ம் தேதி காலை 10:30 மணி அளவில் ஆஜராகி தங்களது ஆட்சேபணையை தெரிவித்து கொள்ளலாம் என்றும், தவறும் பட்சத்தில் தங்களுக்கு எதிராக ஒருதலைபட்சமாக உத்தரவு ஏற்படும் என்பதும் இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

K.நாகராஜன் B.Sc., B.L.,
N.சத்தாக்கிருஷ்ணா B.A., M.L.,
A.திருநாவுக்கரசு B.A., B.L.,
P.திலைலக்ஷமணா B.Sc., B.L.,
M.மங்களாவசந்தன் M.Sc., L.L.B.,
அட்வகேட்கள், இராமநாதபுரம்.

---

மாண்புமிகு சார்பு நீதிமன்றம்
இராமநாதபுரம் இ.பி.
எண்.14/2022. A.C.P.
No. 77/2014

1. தனலெட்சுமி சீனிவாசன் சிட்பன்ட்ஸ் பிரைவேட் லிமிடெட் அதன் இராமநாதபுரம் கிளை மேலாளர் மூலம்
....தீர்ப்பாணை பெற்றவர்
-எதிர்-

1.ஆர்.சுகந்தலா
த/பெ.ரகு
2072, தேவிபதி நகர்,
இராமநாதபுரம் மாவட்டம்-623501.
.... 3ம் தீர்ப்புக் கடனாளி

அறிவிப்பு

மேற்படி நிறைவேற்றுகை மனுவில் கண்ட 3ம் தீர்ப்புக் கடனாளி முகவரிக்கு நீதிமன்றத்தின் மூலம் பல முறை அறிவிப்பு அனுப்பி சார்பு ஆகாததால் மாற்றுமுக சார்புக்கு உத்தரவாகி உள்ளது. அதன்படி மேற்படி 3ம் தீர்ப்புக் கடனாளி இராமநாதபுரம் சார்பு நீதிமன்றத்தில் வரும் 13.10.2022ம் தேதி காலை 10.00 மணிக்கு கனம் நீதிமன்றத்தில் நேரிலோ அல்லது தனது வழக்கறிஞர் மூலமோ ஆஜராகி பிரதிநிதித்துவம் செய்ய வேண்டியது. இல்லையெனில் அவருக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்படும் என இந்த அறிவிப்பின் மூலம் அறிவிக்கப்படுகிறது.

M.சக்திவேல், B.L,
அட்வகேட்,
இராமநாதபுரம்.

# நத்தம் மாரியம்மன் கோவில் கும்பாபிஷேக விழா: கன்னிமார் தீர்த்தம் எடுத்து வந்த பக்தர்கள்



**நத்தம், செப், 5**

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் மாரியம்மன் கோவில் தென் தமிழகத்தில் மிகவும் பிரசித்தி பெற்ற கோவிலாகும், இந்த கோவிலில் வருகிற 7-ம் தேதி கும்பாபிஷேக விழா நடைபெற உள்ளது. இதையொட்டி கடந்த மாதம் 4-ம் தேதி முகூர்த்தக்கால் நடுதலுடன் விழா தொடங்கியது.

தொடர்ந்து செப்டம்பர் 2-ம் தேதி விக்னேஷ்வர பூஜை, தனபூஜையும், தொடர்ந்து நேற்று முன் தினம் கணபதி ஹோமம், நவக்கிரக ஹோமம், லட்சுமி ஹோம பூஜைகளும் நடந்தது. பின்னர் நேற்று காலை உலுப்பகுடி அருகே உள்ள கரந்தமலையில் பக்தர்கள் கன்னிமார் தீர்த்தம் அழைத்து வந்து சந்தன கருப்பு சுவாமி கோவில் வந்தடைந்தனர். தொடர்ந்து அங்கிருந்து குதிரை, யானை பவனிகளோடு மேளதாளம் முழங்க ஊர்வலமாக பக்தர்கள் தீர்த்தக் குடங்களையும், முளைப்பாரியை தலையில் சுமந்தபடி மாரியம்மன் கோவிலை வந்தடைந்தனர்.

பின்னர் மூலவர் அம்மனுக்கு சிறப்பு அபிஷேகம், அலங்காரம் , தீபாராதனைகள் நடந்தது. மேலும் இந்த விழாவில் உணவுத் துறை அமைச்சர் சக்கரபாணி, திண்டுக்கல் எம்.பி வேலுச்சாமி, முன்னாள் எம்.எல்.ஏ ஆண்டி அம்பலம், சாணார்பட்டி மாவட்ட கவுன்சிலர் விஜயன், நத்தம் பேரூராட்சி தலைவர் சேக்சிக்கந்தர் பாட்சா, திமுக ஒன்றிய செயலாளர்கள் ரத்தினக்குமார், பழனிச்சாமி, நகர செயலாளர் ராஜ்மோகன்,கோவில் செயல் அலுவலர் வாணி மகேஸ்வரி, பேரூராட்சி துணை தலைவர் மகேஸ்வரி சரவணன், உலுப்பகுடி பால் பண்ணை தலைவர் சக்தி வேல் உள்ளிட்ட இந்து சமய அறநிலையத் துறை அதிகாரிகள், திருக்கோவில் பூசாரிகள், பக்தர்கள், பொதுமக்கள் உள்பட பலரும் கலந்து கொண்டனர்.

# கொடைக்கானலில் விநாயகர் சிலை ஊர்வலம்



**கொடைக்கானல். செப்.5.**

கொடைக்கானலில் வட்டார இந்து முன்னணி சார்பில் விநாயகர் சிலை ஊர்வலம் நேற்று நடந்தது. இந்து முன்னணியின் கொடைக்கானல் ஒருங்கிணைப்பாளர் சிவா விநாயகர் சிலை ஊர்வலத்தை கொடி அசைத்து தொடங்கி வைத்தார். நகர வட்டார இந்து முன்னணி சார்பில் உள்ள நிர்வாகிகள் விநாயகர் சிலை ஊர்வலத்தை ஒருங்கிணைப்பு செய்தார்கள். கொடைக்கானல் ஏரிச்சாலை அருகே தொடங்கிய விநாயகர் சிலை ஊர்வலம், அண்ணா சாலை, ஆனந்த கிரி, டர்னர் புரம் ,லாஸ் காட் சாலை, வழியாக நடந்தது.

நகரின் பல பகுதிகளில் பிரதிஷ்டை செய்யப்பட்ட விநாயகர் சிலைகள் வாகனங்களில் ஊர்வலமாக எடுத்து வரப்பட்டது. அதேபோல வீடுகளில் வைக்கப்பட்டிருந்த விநாயகர் சிலைகள் பெண்கள் சிறுவர் சிறுமிகள் தலையில் சுமந்து ஊர்வலமாக கொண்டு சென்றார்கள். ஆயிரக்கணக்கான விநாயகர் சிலைகள் கொடைக்கானல் லாஸ் காட் சாலை அரசு மேல்நிலைப்பள்ளி அருகே உள்ள ஆற்றில் கரைக்கப்பட்டது. கொடைக்கானல் போலீஸ் டிஎஸ்பி சீனிவாசன் தலைமையில் போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர். பின்னர் ஐயப்பா சேவா சங்கத்தின் சார்பில் கொடைக்கானல் அரசு மேல் நிலைப்பள்ளி வளாகத்தில் அன்னதானம் நடைபெற்றது.



விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு மதுரை திருப்பரங்குன்றம் ராஜீவ் காந்திநகர் 2 - வது தெரு பகுதி பொதுமக்கள் விநாயகர் சிலையை ஊர்வலமாக எடுத்துச்சென்ற காட்சி.

# வத்தலகுண்டு காந்திநகர் பகுதியில் மேற்கு ஒன்றியம் சார்பில் லட்டு வழங்கி கொண்டாடப்பட்டது



**வத்தலகுண்டு செப்.05**

திண்டுக்கல் மாவட்டம் வத்தலகுண்டு மேற்கு ஒன்றியம் கணவாய்பட்டி ஊராட்சி காந்திநகர் பாரதிதாசன் தெருவில் உள்ள அதிமுக கொடி கம்பத்தின் அருகில் உயர்நீதி மன்ற அளித்துள்ள தீர்ப்பில் அதிமுக பொதுக்குழு செல்லும் என்று வழங்கியுள்ளது .எடப்பாடி எடப்பாடி யாருக்கு சாதகமாக அறிவித்தலை முன்னிட்டு பொதுமக்களுக்கு ஜாங்கிரி லட்டு ஆகிய இனிப்பு வழங்கி கொண்டாடப்பட்டது. விழாவிற்கு மாவட்ட பிரதிநிதி காசிராஜன் வைத்தார் வத்தலகுண்டு மேற்கு ஒன்றிய செயலாளர் எம் வி எம் பாண்டியன் இனிப்புகள் வழங்கினார். மேற்கு ஒன்றிய கழக துணைச் செயலாளர் ரத்தினம் மாவட்ட துணைச் செயலாளர் முருகேசன் கிளைக் கழகச் செயலாளர்கள் முகமது மைதீன் மாரிமுத்து பாண்டி கோபால் மற்றும் காந்திநகர் நிர்வாகிகள் கந்தசாமி அன்பு விசுவநாதன் ராமு தாய் பொதுமக்கள் ஏராளமானோர் கலந்து கொண்டார்கள்.

# சிவகாசியில் தடை செய்யப்பட்ட பொருட்களை விற்பனை செய்த கடைகளுக்கு அபராதம்

**விருதுநகர் செப் 5.**

சிவகாசி வம்பிழுத்தான் தான்முக்கு, காமராஜபுரம் காலனி பகுதியில் ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி, கோவில் அருகே தடை செய்யப்பட்ட புகையிலை, பீடி ,சிகரெட், விற்ற 6 கடைகளுக்கு தலா 200% அபதாரம் விதிக்கப்பட்டது. இதன் மூலம் ரூபாய் 7000 மதிப்புள்ள சிகரெட் ,பிடி, 25 கிலோ பிளாஸ்டிக் பைகள் கைப்பற்றப்பட்டு அளிக்கப்பட்டது. வட்டார சுகாதார மேற்பார்வையாளர் ஜெயச்சந்திரன் சுகாதார ஆய்வாளர்கள் விக்னேஷ், கிருஷ்ணமூர்த்தி, சரவணகுமார், செல்வகுமார், பிரபு ஆகியோர் மேற்கொண்டனர்.

# சிவகாசி டாஸ்மாக் கடை அகற்ற வலியுறுத்தல்

**விருதுநகர் செப் 5.**

சிவகாசி வடக்கு ஒன்றியம் பாஜக சார்பில் தாலுகா அலுவலகத்தில் டாஸ்மாக் கடையை அகற்ற வலியுறுத்தி மனு கொடுத்தனர். சிவகாசி ரிசர்வ் லைன் நேருஜி நகரில் குடியிருப்புக்கு மத்தியில் டாஸ்மாக் கடை உள்ளது. இதன் அருகே மூன்று பள்ளிகள் செயல்படுகிறது. கடைக்கு வரும் குடிமகர்களால் மாணவர்கள் மாணவிகள் குடியிருப்பு வாசிகள் அதிக அளவில் பாதிக்கப்படுகின்றனர். அச்சத்தில் உள்ளனர். எனவே அந்த மது கடையை அகற்ற வேண்டும் என அந்த மனுவில் குறிப்பிட்டுள்ளனர். வடக்கு ஒன்றிய தலைவர் சிவ செல்வராஜ், தொழில் பிரிவு துணைத் தலைவர் பாண்டியன், குருநாதன், ஜெபராஜ், முத்துலட்சுமி உடன் இருந்தனர்.

# நரிக்குடி அருகே கொடுக்கல் வாங்கல் தகராறு: காரில் கடத்தி தாக்குதல்

**அருப்புக்கோட்டை செப் 5.**

நரிக்குறியைச் சேர்ந்தவர் முத்துகிருஷ்ணன் 45. பெட்டிக் கடை வைத்து தொழில் செய்து வருகிறார். சில தினங்களுக்கு முன் மைலி இலுப்பை குளத்தைச் சார்ந்த பழனியிடம் ரூபாய் 38 ஆயிரத்திற்கு டூவீலர் வாங்கி உள்ளார். முன்பணம் 30, ஆயிரம் செலுத்தியுள்ளார். ஆர் .சி புக் கொடுக்கும்போது மீதி பணம் கொடுப்பதாக ஒப்புக்கொண்டனர். இந்நிலையில் பயணிக்கும் நரி குடையை சேர்ந்த பெரியசாமிக்கும் ஜே.சி.பி. இயந்திரம் வாங்கியதில் பிரச்சனை இருந்து வந்தது இதில் முத்துகிருஷ்ணன் பெரியசாமிக்கு ஆதரவாக செயல்பட்டார். இதில் ஆத்திரம் அடைந்த பழனி முத்துக்கிருஷ்ணனை காரில் கடத்தியதோடு கொலை மிரட்டல் விடுத்தார். இதில் பலத்த காயம் அடைந்த முத்துகிருஷ்ணன் அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார். இது குறித்து நரிக்குடி போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# திருமங்கலம் அருகே இரு வேறு விபத்துக்களில் இருவர் பலி

**திருமங்கலம். செப்.05.**

மதுரை அவனியாபுரம் எம் எம் சி காலனி சேர்ந்த செல்வகுமார் என்பவரது மகன் கௌதம்(21). இவர் பைப் கம்பெனியில் சேல்ஸ் மேனாக வேலை பார்த்து வந்துள்ளார். இந்நிலையில் பணி காரணமாக இருசக்கர வாகனத்தில் அருப்புக்கோட்டை சென்று விட்டு மீண்டும் அவனியாபுரம் நோக்கி வந்து கொண்டிருந்தார். பாரபத்தி கேஸ் கம்பெனி பகுதியில் வந்து கொண்டிருந்தபோது அருப்புக்கோட்டையில் இருந்து மதுரை நோக்கி வந்த தனியார் பேருந்து இரு சக்கர வாகனத்தின் மீது மோதியது.இதில் கௌதம் தூக்கி வீசப்பட்டு சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். இச்சம்பவம் குறித்து தகவல் அறிந்த கூடக்கோவில் போலீசார் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக திருமங்கலம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்து விட்டு விசாரணை நடத்தி வருகின்றனர்.

மதுரை மாவட்டம் டி.கல்லுப்பட்டி அருகே உள்ள ஜாரி உசிலம்பட்டி சேர்ந்தவர் கருப்பசாமி(52). இவர் கூலித் தொழிலாளி. இவருடைய மனைவி சண்முகத்தாய். இவர்களுக்கு ஒரு மகனும் ஒரு மகளும் உள்ளனர்.இந்நிலையில் நேற்று இரவு டீ குடிப்பதற்காக கோபால்சாமி கோவில் விலக்கு சென்று விட்டு திரும்ப வீட்டிற்கு செல்வதற்காக ராஜபாளையம் மதுரை சாலையை கடக்க முயன்றுள்ளார். அப்போது சென்னை தாம்பரம் கணபதிபுரத்தைச் சேர்ந்த பரத் என்பவர் ஓட்டி வந்த இருசக்கர வாகனம் கருப்பசாமி மீது மோதியதில் கருப்பசாமி பலத்த காயமடைந்தார்.உடனடியாக அருகில் இருந்தவர்கள் 108 ஆம்புலன்ஸ் மூலம் பேரையூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக கொண்டு வந்தனர்.ஆனால் வரும் வழியில் கருப்பசாமி இறந்து விட்டடார். இச்சம்பவம் குறித்து கருப்பசாமி மனைவி சண்முகத்தாய் கொடுத்த புகாரின் பேரில் டி.கல்லுப்பட்டி போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# விருதுநகரில் வீடு கட்டி தருவதாக கூறி ஏட்டுவிடம் மோசடி

**விருதுநகர் செப் 5.**

விருதுநகர் போலீஸ் குடியிருப்பில் வசிப்பவர் மாவட்ட குற்றப்பிரிவு ஏட்டு சாந்தி 53, அப்பகுதியில் வாங்கிய நிலத்தில் வீடு கட்ட விருதுநகர் இன்டீரியர் நிறுவன பொறியாளராக பணியாற்றும் திருநெல்வேலியை சேர்ந்த கௌசல்யா பிரியதர்ஷினி 27, இடம் ரூபாய் 36 லட்சம் காம்பவுண்டுடன் ஆறு மாதத்தில் வீடு கட்டி தர சாந்தி மகளிடம் கூறியுள்ளார். இதை தொடர்ந்து ஒப்பந்தம் செய்து 11 தவணைகளில் 36 லட்சத்தை கொடுத்துள்ளார். களப்பொறியாளராக கண்ணன் 38 ,மேஸ்திரி எம் ரெட்டிபட்டி ராகவன் 36, வேலை பார்த்தனர். பேசியபடி கட்டடத்தில் பொருட்கள் பயன்படுத்தாமலும் குறித்த நேரத்தில் கட்டிடத்தை முடித்துக் கொடுக்காமல் ஏமாற்றி மோசடி செய்தனர். இது குறித்து சூலக்கரை போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# சிவகாசியில் சிறப்பு கிராம சபை கூட்டம்

**விருதுநகர் செப் 5.**

சிவகாசி ஆனையூர் ஊராட்சியில் சிறப்பு கிராம சபை கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு ஊராட்சி மன்ற தலைவர் (பொறுப்பு) முத்துமாரி தலைமை வகித்தார். பற்றாளர் ராம முனீஸ்வரன் முன்னிலை வகித்தார். பெண்களின் ஆரோக்கியம், குழந்தைகளின் ஊட்டச்சத்து, கல்வி, நீர் பாதுகாப்பின் முக்கியத்துவம் குறித்து விவாதிக்கப்பட்டது. அங்கன்வாடி பணியாளர்கள் பொதுமக்கள் கலந்து கொண்டனர். ஊராட்சி செயலாளர் நாகராஜன் நன்றி கூறினார்.

இதே போல் சித்து ராஜா ஊராட்சியில் தலைவர் லீலாவதி தலைமையில், அனுப்பன்குளம் ஊராட்சியில் தலைவர் கவிதா, பள்ளபட்டி ஊராட்சியில் தலைவர் உசிலை செல்வம், விஸ்வநத்தம் ஊராட்சியில் தலைவர் நாகராஜ் தேவர் குளம் ஊராட்சியில் தலைவர் முத்துவல்லி, செங்கமல நாச்சியார் புறம் ஊராட்சியில் தலைவர் கருப்பசாமி உள்ளிட்ட பல்வேறு ஊராட்சிகளில் தலைவர்கள் தலைமையில் சிறப்பு கிராம கூட்டம் நடைபெற்றது. கிராம சபை கூட்டத்தில் கிராம பொதுமக்கள் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# கடலாடி வேளாண்மை விரிவாக்க மையத்தில் மானியத்தில் விதைகள் விநியோகம்

**கடலாடிசெப்5**

கடலாடி வேளாண்மை விரிவாக்க மையத்தில் மானியத்தில் விதைகள் விநியோகம் செய்யப்படுகிறது. இது குறித்து வேளாண்மை உதவி இயக்குநர் ப.சுந்தரவள்ளி கூறியதாவது: கடலாடி வட்டாரத்தில் தற்போது நல்ல மழை பெய்து வருவதால் பயிர் சாகுபடிக்கு தேவையான சான்று பெற்று நெல்விதைகள் கோ-51-ஏடிடி-45-ஆர்.என்.ஆர்.ஆகிய இரகங்கள் 50மூ மானியத்தில் விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேலும் உளுந்து (வம்பன்8)கம்பு-சோளம்-குதிரைவாலி-விதைகளும்- விவசாயிகளுக்கு 50மூ மானியத்தில் வழங்கப்படஉள்ளது. எனவே விவசாயிகள் தங்களுக்கு தேவையான விதைகளை மானியத்தில் வாங்கி பயனடையுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. இவ்வாறு கூறியுள்ளார். மேலும் பிரதம மந்திரியின் நிதியினை பெறுவதற்கு விவசாயிகள் தங்களது ஆதார் எண்ணுடன் போன் நம்பரை இணைத்தால் (ஈ-கே-ஒய்-சி) மட்டுமே 12வது தவனைபெற முடியும் என்பதால் விவசாயிகள் அனைவரும் பொதுசேவை மையங்களில் தங்களது போன் நம்பரை ஆதார் எண்ணுடன் இணைத்து பயன் பெறுமாறு வேளாண்மை உதவி இயக்குநர் ப.சுந்தரவள்ளி கேட்டுக்கொண்டுள்;ளார்.

## மதுரை வருகை தரும் முதல்வருக்கு பிரமாண்ட வரவேற்பு

# மதுரை தெற்கு மாவட்ட தி.மு.க நிர்வாகிகள் கூட்டத்தில் மாவட்டச் செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் பேச்சு



**திருமங்கலம்.செப்.05.**

மதுரைக்கு வருகை தரும் தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு மதுரை தெற்கு மாவட்ட தி.மு.க சார்பில் பிரமாண்டமான வரவேற்பு கொடுப்பதுடன் விருதுநகரில் நடைபெறவுள்ள தி.மு.க முப்பெரும் விழாவில் 500-க்கும் மேற்பட்ட வாகனங்களின் கட்சியினருடன் சென்று கலந்து கொண்டு சிறப்பிக்க இருப்பதாக திருமங்கலம் நகரில் நடைபெற்ற மதுரை தெற்கு மாவட்ட தி.மு.க நிர்வாகிகள் ஆலோசனை கூட்டத்தில் மாவட்டச் செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் பேசினார்.

தமிழக முதல்வரின் மதுரை வருகை மற்றும் விருதுநகரில் நடைபெறவுள்ள தி.மு.க முப்பெரும் விழா நிகழ்வுகளை சிறப்பிப்பது குறித்த மதுரை தெற்கு மாவட்ட தி.மு.க நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் திருமங்கலம் நகரிலுள்ள மாவட்ட கழக அலுவலகத்தில் நேற்று வெகு சிறப்பாக நடைபெற்றது. இவ்விழாவிற்கு மாவட்ட அவைதலைவர் நாகராஜன் முன்னிலை வகித்தார்.திருமங்கலம் நகர கழகச் செயலாளர் ஸ்ரீதர்,திருமங்கலம் நகர் மன்ற தலைவர் மு.ரம்யாமுத்துக்குமார், துணை தலைவர் அ.ஆதவன் அதியமான ஆகியோர் வரவேற்றனர்.மதுரை தெற்கு மாவட்ட தி.மு.க நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் ஏராளமானோர் கலந்து கொண்ட இந்த ஆலோசனை கூட்டத்தில் மதுரை தெற்கு மாவட்ட தி.மு.க செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் கலந்து கொண்டு தலைமையேற்று பல்வேறு ஆலோசனைகளை வழங்கி சிறப்புரையாற்றினார். அப்போது மாவட்டச் செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் பேசுகையில்: மதுரையில் 9-ம் தேதி அமைச்சர் பி.மூர்த்தியின் இல்ல திருமண விழாவில் பங்கேற்பதற்காக மதுரைக்கு வருகை தரும் கழக தலைவர்,தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு மதுரை தெற்கு மாவட்ட தி.மு.க சார்பில் பிரமாண்ட வரவேற்பு கொடுத்திட ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகிறது.முதல்வரின் பயணத்திட்டத்திற்கு ஏற்ப திருமங்கலம் அருகேயுள்ள கப்பலூர் டோல்கேட் அல்லது விமான நிலையத்தில் வரலாறு காணாத அளவில் வரவேற்பு கொடுத்திட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.அதே போல் வருடம் தோறும் நடத்தப்படும் தி.மு.க முப்பெரும் விழா விருதுநகரில் நடைபெறுகிறது.இந்த முப்பெரும் விழாவில் மதுரை தெற்கு மாவட்ட தி.மு.க சார்பில் 500-க்கும் மேற்பட்ட வாகனங்களில் கட்சியினருடன் சென்று கலந்து கொண்டு சிறப்பிக்க இருக்கிறோம்.அதே போல் தி.மு.க இளைஞரணி நிர்வாகிகள் வீடு வீடாகச் சென்று தொகுதிக்கு 10ஆயிரம் இளைஞர்களை கட்சியில் இணைத்திட வேண்டும்.அதன்படி மதுரை தெற்கு மாவட்டத்திலுள்ள 3தொகுதிகளில் மொத்தமாக 30ஆயிரம் இளைஞர்களை கட்சியில் இணைத்திட வேண்டும்.மேலும் மகளிரணியினரும் புதிய உறுப்பினர்களை கட்சியில் சேர்த்திடும் பணிகளை உடனே துவங்கிட வேண்டும். தி.மு.க ஆட்சியில் மக்கள் நலன்கொண்ட செயல்பாடுகள் அனைத்தும் மக்களுக்கு தெரியும்.இதை பறைசாற்றிட வேண்டிய அவசியம் நமக்கு கிடையாது.ஆனால் சமூக வலைத்தளங்களில் தவறாக பதிவிடப்படும் கருத்துக்களுக்கு தி.மு.க ஐ.டி விங் உடனடியாக தக்க பதிலடி கொடுத்திட வேண்டும். பிஜேபி தலைவர் அண்ணாமலைக்கு வேலை வெட்டி கிடையர்து.அதனால் தான் தி.மு.க மீது அவதூறு பரப்பி வருகிறார்.உடைந்து சிதறி வரும் அ.தி.மு.க.வை குறித்து யாரும் கவலை கொள்ள வேண்டாம்.தமிழகம் பகுத்தறிவு கொண்ட பெரியார், அண்ணா, கலைஞர் பிறந்த மண் என்பதால் பிஜேபி தமிழகத்தில் கால்ஊன்ற முடியாது. துமிழக மக்களுக்காகவே பணியாற்றி வரும் தி.மு.க தலைவர் மு.க.ஸ்டாலின் தொடர்ந்து 25 ஆண்டுகளுக்கு முதல்வராக ஆட்சியை தொடருவார்.இவ்வாறு அவர் பேசினார்.

இந்த கூட்டத்தில் முன்னாள் எம்.எல்.ஏக்கள் முத்துராமலிங்கம்,சாமிநாதன்,லதா அதியமான்,தலைமை செயற்குழு உறுப்பினர் எர்போட் பாண்டியன்,மாவட்ட பொருளாளர் பொடா நாகராஜன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் மதன்குமார், மாவட்ட ஐ.டி.விங் அமைப்பாளர் பாசபிரபு,மாவட்ட கவுன்சிலர் கிருத்திகா தங்கப்பாண்டி,பொதுக்குழு உறுப்பினர் சிவமுருகன்,வழக்கறிஞர்கள் தங்கேஸ்வரன், தங்கசுவாமி,கட்சி நிர்வாகிகள் முத்துக்குமார்,திருக்குமார்,வீரக்குமார், விமல்,முத்து, கருவேலம்பட்டி வெற்றி,ஆசாத் (எ) சேட், கிருஷ்ணபாண்டி, ரவி,செல்வம்,அண்ணாதுரை, முத்துராமன், வசந்தகுமாரி மற்றும் மதுரை தெற்கு மாவட்ட நகர,ஒன்றிய.பகுதி, பேருர்,வட்ட கழக நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# கொடைக்கானல் பழனி சாலையில் ஏற்பட்ட நிலச்சரிவு காரணமாக சுற்றுலா பயணிகளின் வருகை குறைந்தது

**கொடைக்கானல் செப். 5**



கொடைக்கானல் பழனி சாலையில் கடந்த சில தினங்களுக்கு முன்பு பெய்த கன மழை காரணமாக சவரி காடு அருகே மிகப்பெரிய நிலச்சரிவு ஏற்பட்டு சாலை துண்டிக்கப்பட்டது. இதனால் கடந்த சில தினங்களாக போக்குவரத்து நிறுத்தப்பட்டு உள்ளது. தற்போது கேரள மாநிலத்தில் ஓணம் பண்டிகை விழா துவங்கப்பட்டுள்ளது. கொடைக்கானலுக்கு கேரளா மாநிலத்தைச் சேர்ந்த சுற்றுலா பயணிகள் அதிக அளவில் வந்து செல்வார்கள். கேரள மாநிலத்திலிருந்து பழனி வரும் கேரள மாநில சுற்றுலா பயணிகள் பழனியில் இருந்து இந்த மலைச் சாலை வழியாகத்தான் கொடைக்கானலுக்கு வந்து செல்வார்கள். தற்போது கொடைக்கானல் பழனி மலைச்சாலையில் போக்குவரத்து தடைபட்டுள்ள காரணத்தினால் கேரள மாநில சுற்றுலாப் பயணிகள் உள்ளிட்ட பழனி சாலையை பயன்படுத்தும் சுற்றுலா பயணிகள் கொடைக்கானலுக்கு வருவது குறைந்துள்ளது. இதனால் நேற்று வார விடுமுறை இருந்த நிலையிலும் குறைவான சுற்றுலா பயணிகளை கொடைக்கானலுக்கு வந்து சென்றார்கள் எனவே தடைபட்டுள்ள போக்குவரத்தை விரைவில் சீர்படுத்த சுற்றுலாப் பயணிகளும் பொதுமக்களும் கோரிக்கை விடுத்துள்ளனர் கொடைக்கானல் பழனி சாலை சபரி கார்டு அருகே துண்டிக்கப்பட்ட சாலை பணியினை விரைந்து முடிக்க கொடைக்கானல் ஒன்றிய பெருந்தலைவர் ஸ்வேதா ராணி, மாவட்ட திமுக இளைஞரணி அமைப்பாளர் கணேசன் ஆகியோர் பார்வையிட்டு அறிவுரை வழங்கினார்கள்.

# இல்லம் தேடி கல்வி ரீடிங் மாரத்தான் போட்டியில் அரசுப்பள்ளி மாணவிகள் முதலிடம் பெற்று சாதனை



**ஒட்டன்சத்திரம்.செப்.5**

திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரத்தில் தமிழக அரசின் பள்ளிக்கல்வித்துறையின் இல்லம் தேடி கல்வி சார்பில் பழனி கல்வி மாவட்டத்தில் ஒட்டன்சத்திரம் ஒன்றியம் சார்பில் நடைபெற்ற ரீடிங் மாரத்தான் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பாராட்டுவிழா சண்முகவேல்புரத்தில் நடைபெற்றது. போட்டியில் வெற்றி பெற்று முதல் இடத்தைப் பெற்ற அனுஷ்கா, இரண்டாம் இடத்தைப் பெற்ற பூபணா ஆகியோருக்கு பரிசுகள் வழங்கப்பட்டது.

இதில் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி ராஜேஸ்வரி, இல்லம் தேடி கல்வி வட்டார பொறுப்பு ஆசிரியர்கள் இராதாகிருஷ்ணன், கீதா, செல்வராஜ், ஊர்தலைவர் சுப்பிரமணி, தன்னார்வலர்கள் ஜமுனாராணி, சக்திகாளீஸ்வரி, செல்லாத்தாள், வடிவேல், கார்த்திகைவேல் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

# ஹர்திக் பாண்டியா போன்ற வீரரை பாகிஸ்தான் அணி கண்டுபிடிக்க வேண்டும்

## முன்னாள் வீரர் கருத்து



சென்னை, செப்.05

15-வது ஆசிய கோப்பை கிரிக்கெட் (20 ஓவர்) போட்டி தொடரில் கடந்த வாரம் நடைபெற்ற குரூப் சுற்று போட்டியில் ஹர்திக் பாண்டியாவின் அதிரடியால் இந்திய அணி பாகிஸ்தானை வீழ்த்தி அபார வெற்றி பெற்றது.

இந்த நிலையில் 20 ஓவர் கிரிக்கெட்டில் பாகிஸ்தான் அணி மேலும் வளர ஹர்திக் பாண்டியா போன்ற தரம் வாய்ந்த வேகப்பந்து வீச்சு ஆல்ரவுண்டரை பாகிஸ்தான் அடையாளம் காண வேண்டும் என்று அந்த அணியின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் ஆகிப் ஜாவேத் தெரிவித்துள்ளார்.

இது குறித்து ஆகிப் ஜாவேத் கூறியதாவது: "இந்தியாவுக்கு கிடைத்த மிகப் பெரிய பலம் ஹர்திக் பாண்டியா. பாகிஸ்தானுக்கு அப்படி ஒரு ஆல்-ரவுண்டர் இல்லை. பாகிஸ்தானுக்கு அப்துல் ரசாக் இருந்ததைப் போல அவர் திறமையானவர். எனவே பாகிஸ்தான் டி20-களில் வளர விரும்பினால், அவர்கள் ஹர்திக் பாண்டியா போன்ற ஒரு ஆல்-ரவுண்டரை விரைவில் கண்டுபிடிக்க வேண்டும். ஏனெனில் 20 ஓவர் போட்டிகளில் உங்களிடம் எத்தனை ஆல்-ரவுண்டர்கள் உள்ளனர் என்பது மிக முக்கியம். அந்த வகையில் இந்தியாவிற்கு ஜடேஜா, பாண்டியா மிக பெரிய பலம். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## இந்திய மகளிர் ஆக்கி அணி:

# வெண்கலப் பதக்கம் வென்ற விதம் உத்வேகம் அளித்தது- நவ்ஜோத் கவுர்

சென்னை, செப்.05



இந்திய மகளிர் ஹாக்கி அணியின் நட்சத்திர வீராங்கனையாக திகழ்ந்து வருபவர் நவ்ஜோத் கவுர். 2012 ஆம் ஆண்டு இந்திய அணிக்கு அறிமுகமானதிலிருந்து, அவர் அணியின் அனைத்து முக்கிய போட்டிகளிலும் பங்கு பெற்றுள்ளார். மேலும் இந்திய பெண்கள் ஹாக்கி அணியின் சில சிறந்த வெற்றிகளில் அவர் இடம்பெற்றுள்ளார். இருப்பினும், 27 வயதான அவர் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்ட காரணத்தால் சமீபத்தில் முடிவடைந்த காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்கவில்லை.

பர்மிங்காம் 2022 காமன் வெல்த் விளையாட்டுப் போட்டிகளில் இந்திய அணி போட்டி தொடங்குவதற்கு முன்பே அவர் தாயகம் திரும்பினார். இந்த நிலையில் தற்போது அவர் அது குறித்து பேசியுள்ளார். நவ்ஜோத் கவுர் கூறுகையில், உண்மையைச் சொல்ல வேண்டும் என்றால் அப்படி வெளியேறியது ஏமாற்றமாக இருந்தது.

அதை ஏற்றுக்கொள்வது எனக்கு மிகவும் கடினமாக இருந்தது. இதற்கு முன் எந்த ஒரு பெரிய போட்டியையும் நான் தவறவிட்டதில்லை. எனவே எனது வாழ்க்கையில் முதல் முறையாக இந்த சூழ்நிலையை நான் எதிர்கொண்டேன்" என தெரிவித்தார்.

வெண்கல பதக்கம் வென்ற இந்திய ஆக்கி அணி குறித்து பேசிய நவ்ஜோத், "எனது குடும்பத்துடன் அனைத்து போட்டிகளையும் பார்த்தேன். மிகக் குறைந்த வித்தியாசத்தில் ஆஸ்திரேலியாவுக்கு எதிராக தோற்றது மனவேதனையாக இருந்தது. ஆனால் இந்திய அணி மீண்டும் போராடி வெண்கலப் பதக்கத்தை வென்ற விதம் உண்மையிலேயே உத்வேகம் அளிப்பதாக இருந்ததாக தெரிவித்தார்.

# சுழற்பந்து வீச்சாளர்கள் நோ-பால் வீசுவது குற்றம் - ஷகிப் அல் ஹசன்

துபாய்,செப்.05.



ஐக்கிய அரபு அமீரகத்தில் நடைபெற்று வரும் ஆசியகோப்பை கிரிக்கெட் தொடரில் லீக் சுற்றில் கடைசி ஆட்டத்தில் வங்கதேசம் – இலங்கை அணிகள் மோதின. இதில் வெற்றி பெற்றும் அணீ சூப்பர்-4 சுற்றுக்கு முன்னேறும் என்ற அழுத்தமான நிலையில் இரு அணிகளும் மோதின. இதில் 184 ரன்கள் இலக்கை துரத்திய இலங்கை 19.2 ஓவர்களில் 8 விக்கெட்களை இழந்து வெற்றி பெற்றது. வங்கதேச அணிக்கு இது 2-வது தோல்வியாக அமைந்தது. இதனால் தொடரில் இருந்து வெளியேறியது. இலங்கைக்கு எதிராக வங்கதேச அணி 17 ரன்களை எக்ஸ்ட்ராகளாக வழங்கியிருந்தது. இதில் 4 நோ-பால்கள் அடங்கும். முக்கியமாக ஆட்டத்தின் 20-வது ஓவரில் இலங்கை அணிக்கு கடைசி 3 பந்துகளில் 4 ரன்கள் தேவையாக இருந்த நிலையில் மெஹிதி ஹசன் நோ-பால் வீசினார். இதன் வாயிலாக 3 ரன்களை எளிதாக பெற்று வெற்றியை வசப்படுத்திய இலங்கை அணி சூப்பர் 4 சுற்றுக்கு முன்னேறியது. வங்கதேச அணியின் கேப்டன் ஷகிப் அல்ஹசன் கூறும்போது, ஆட்டத்தின் இறுதியில் நாங்கள் சிறப்பாக பந்து வீசவில்லை. பேட்டிங்கை பொறுத்தவரையில் நாங்கள் கூடுதலாக 10 முதல் 15 ரன்களை எடுத்தோம். மெஹிதி ஹசன் உள்ளூர் போட்டிகளில் சிறப்பாக செயல்பட்டுள்ளார். எந்த ஒரு கேப்டனும் நோ-பால் வீசுவதை விரும்ப மாட்டார்கள். நாங்கள் நிறைய நோ-பால் மற்றும் அகலப்பந்துகளை வீசினோம்.

இது சிறந்த பந்துவீச்சு அல்ல. சுழற்பந்து வீச்சாளர்கள் நோ-பால் வீசுவது குற்றம் ஆகும். அதிக அளவிலான நோ-பால் மற்றும் அகலப் பந்துகளை வீசிவிட்டோம். நாங்கள் அழுத்தத்தில் இருந்ததாக நினைக்கிறேன். உலகக் கோப்பையை கருத்தில் கொண்டு இந்த விஷயத்தில் அதிகம் கவனம் செலுத்த வேண்டும். படிப்படியாக முன்னேற்றம் காண விரும்புகிறோம். இறுதி கட்ட ஓவர்களில் நாங்கள் இன்னும் சிறப்பாக செயல் பட வேண்டும் என நினைக்கிறேன் என்றார்.

# சர்வதேச டி-20 கிரிக்கெட்டில் இருந்து வங்காளதேச வீரர் முஷ்பிகுர் ரஹீம் ஓய்வு

மும்பை, செப்.05



வங்காளதேச அணியின் முன்னணி விக்கெட் கீப்பர் முஷ்பிகுர் ரஹீம். இவர் வங்காளதேச அணிக்காக 82 டெஸ்ட் போட்டிகள், 236 ஒரு நாள் போட்டிகள் மற்றும் 102 டி-20 போட்டிகளில் ஆடி உள்ளார். மேலும், டெஸ்ட் போட்டிகளில் 5,235 ரன்னும், ஒரு நாள் போட்டிகளில் 6,774 ரன்களும், டி-20 போட்டிகளில் 1,500 ரன்களும் அடித்துள்ளார்.

இந்நிலையில் 35 வயதான முஷ்பிகுர் ரஹீம் சர்வதேச டி-20 கிரிக்கெட் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார். தனது 16 வயதில் வங்காளதேச அணிக்காக 2005-ம் ஆண்டு டெஸ்ட் போட்டிகளில் அறிமுகம் ஆன இவர் டி-20 போட்டிகளில் 2006-ம் ஆண்டு ஜிம்பாப்வே அணிக்கு எதிராக அறிமுகம் ஆனார். 2007-ம் ஆண்டு முதல் டி-20 உலக கோப்பைகளில் வங்காளதேச அணிக்காக முஷ்பிகுர் ரஹீம் ஆடியுள்ளார். இந்நிலையில் அடுத்த மாதம் ஆஸ்திரேலியாவில் நடைபெற உள்ள உலக கோப்பைக்கு அந்நாட்டு அணிக்காக ஆடுவார் என எதிர்பார்க்கப்பட்ட ரஹீம் தனது ஓய்வு முடிவை அறிவித்துள்ளார். தனது ஓய்வு குறித்து முஷ்பிகுர் ரஹீம் டுவிட்டர் பக்கத்தில் பதிவிட்டதாவது, சர்வதேச டி-20 கிரிக்கெட்டில் இருந்து நான் ஓய்வு பெறுகிறேன், டெஸ்ட் மற்றும் ஒருநாள் கிரிக்கெட்டில் எனது கவனத்தை செலுத்த உள்ளேன். மேலும், ஐ.பி.எல் போன்று வெளிநாடுகளில் நடைபெறும் டி-20 கிரிக்கெட் தொடர்களில் வாய்ப்பு கிடைத்தால் விளையாடுவேன் என்று கூறியுள்ளார். மேலும், எம்.ஆர்.15 என்ற பெயருடன் டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டிகளில் எனது நாட்டுக்காக விளையாட காத்துக் கொண்டிருக்கிறேன் என பதிவிட்டுள்ளார். சமீபத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கிற ஆசிய கோப்பை தொடரில் வங்காளதேச அணி ஆப்கானிஸ்தான் மற்றும் இலங்கை அணியிடம் தோல்வி அடைந்து லீக் சுற்றுடன் வெளியேறியதை அடுத்து முஷ்பிகுர் ரஹீம் தனது ஓய்வு முடிவை அறிவித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# விராட் கோலி 100 சதங்கள் அடித்து சச்சினின் சாதனையை முறியடிக்க வேண்டும்

## சோயிப் அக்தர் விருப்பம்



சென்னை,செப்.05.

சர்வதேச கிரிக்கெட்டில் சச்சின் டெண்டுல்கரின் 100 சதங்கள் சாதனையை விராட் கோலி முறியடிப்பதை பார்க்க விரும்புவதாக பாகிஸ்தான் முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் சோயிப் அக்தர் தெரிவித்துள்ளார். சில நாட்கள் ஓய்வுக்கு பிறகு ஆசிய கோப்பையில் பாகிஸ்தான் அணிக்கு எதிரான போட்டியில் களமிறங்கிய விராட் கோலி 34 பந்துகளில் 35 ரன்கள் எடுத்து ஆட்டமிழந்தார். பின்னர் ஹாங்காங் அணிக்கு எதிராக 59 ரன்கள் குவித்தார்.

சர்வதேச அளவில் விராட் கோலி சதம் அடித்து ஆயிரம் நாட்கள் கடந்துவிட்டது. இதனால் ஒவ்வொரு போட்டியில் அவர் களமிறங்கும் போதும் அவர் மீண்டும் பார்முக்கு வர வேண்டும் என ரசிகர்கள் ஆவலோடு காத்திருக்கின்றனர். இந்த நிலையில் கோலி குறித்து சோயிப் அக்தர் பேசியதாவது:

ஆசிய கோப்பையின் 2 போட்டிகளிலும் விராட் கோலி பந்தை சிறப்பாக எதிர்கொள்ளவில்லை. 20 ஓவர் கிரிக்கெட் வடிவம் அவருக்கு ஏற்றதாக இருக்கிறதா இல்லையா என்பதை பார்க்க அவர் டி20 உலகக் கோப்பை வரை காத்திருக்க வேண்டும். விராட் கோலி என்றென்றும் சிறந்த வீரராக முடியும். கோலி மேலும் 30 சதங்கள் அடிக்க வேண்டும். நிச்சயமாக கடினமான 30 சதங்களாக இருக்கும். கோலி 100 சதங்கள் அடித்து சச்சின் டெண்டுல்கரின் சாதனையை முறியடிக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன். இப்போது அது சாத்தியமற்றதாகத் தெரிகிறது. ஆனால் கோலியால் நிச்சயம் அதைச் செய்ய முடியும். இவ்வாறு அக்தர் தெரிவித்தார்.

## லெஜண்ட்ஸ் லீக் கிரிக்கெட்:

# சேவாக் அணியில் இணைந்த கிறிஸ் கெயில்: ரசிகர்கள் மகிழ்ச்சி



மும்பை,செப்.05

ஓய்வுபெற்ற முன்னாள் வீரர்கள் பங்கேற்கும் லெஜண்ட்ஸ் லீக் கிரிக்கெட் தொடர், செப்டம்பர் 16 ஆம் தேதி முதல் கொல்கத்தா ஈடன் கார்டன் மைதானத்தில் தொடங்குகிறது. மொத்தம் 4 அணிகள் பங்கேற்கும் இந்த தொடரில், 6 நகரங்களில் 16 போட்டிகள் நடைபெற உள்ளன. இந்த தொடரில் குஜராத் ஜெயன்ட்ஸ் அணியில் கேப்டனாக இந்திய அணியின் முன்னாள் வீரர் விரேந்தர சேவாக் ஏற்கனவே நியமிக்கப்பட்டுள்ளார். இந்த நிலையில் குஜராத் அணி வெஸ்ட் இண்டீஸ் அணியின் முன்னாள் அதிரடி வீரர் கிறிஸ் கெயிலை ஒப்பந்தம் செய்துள்ளது.

இந்திய கிரிக்கெட் ரசிகர்கள் அதிகம் நேசிக்கும் வெளிநாட்டு வீரர்களில் கிறிஸ் கெயிலும் ஒருவர். இந்த நிலையில் உலக கிரிக்கெட்டின் சிறந்த 2 தொடக்க வீரர்கள் ஒன்றாக இணைந்து விளையாட உள்ளது கிரிக்கெட் ரசிகர்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. குஜராத் ஜெயண்ட்ஸ் அணி: வீரேந்திர சேவாக் (கேப்டன்), பார்த்திவ் படேல், கிறிஸ் கெய்ல், எல்டன் சிகும்புரா, கிறிஸ் ட்ரெம்லெட், ரிச்சர்ட் லெவி, கிரேம் ஸ்வான், ஜோகிந்தர் சர்மா, அசோக் டிண்டா, டேனியல் வெட்டோரி, கெவின் ஓபிரியன், ஸ்டூவர்ட் பின்னி, மிட்செல் மெக்லெனகன், லெண்டல் சிம்மன்ஸ், மன்விந்தர் பிஸ்லா, அஜந்தா மெண்டிஸ்.

# அமெரிக்காவின் எதிரியே அதிபர் ஜோபைடன்தான்

## டிரம்ப் கடும் விமர்சனம்

வாஷிங்டன், செப். 05-



அமெரிக்க அதிபர் ஜோ பைடன் இந்த நாட்டின் எதிரி என்று அந்நாட்டின் முன்னாள் அதிபர் டொனால்ட் ட்ரம்ப் கடுமையாக விமர்சித்துள்ளார்.

கடந்த மாதம் புளோரிடாவில் உள்ள டிரம்ப்பின் வீட்டில் எப்.பி.ஐ. அதிகாரிகள் சோதனை நடத்தினர். இந்த சோதனைகளில் அத்துமீறல்கள் நடந்ததாக அமெரிக்க முன்னாள் அதிபர் டிரம்ப் குற்றம் சுமத்தியிருந்தார். டிரம்ப் வெள்ளை மாளிகையிலிருந்து வெளியேறும்போது தன்னுடன் சில ஆவணங்களைக் கொண்டு சென்றதாகவும், இந்த ஆவணங்கள் தொடர்பாகத்தான் இந்த சோதனை நடந்ததாகவும் அமெரிக்க ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

எனினும் இந்தச் சோதனையின் பின்னணியில் அமெரிக்க அதிபர் ஜோ பைடன் உள்ளார். இது அரசியல் பழிவாங்கல் என்று விமர்சனங்கள் எழுந்தன. ஆனால், வெள்ளை மாளிகையோ டிரம்ப் வீட்டில் நடந்த சோதனைக்கும் அமெரிக்க அதிபருக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்று விளக்கமளித்தது.

இந்த நிலையில், பென்சில்வேனியாவில் தனது ஆதரவாளர்கள் சார்பில் நடந்த பேரணியில் டிரம்ப் பங்கு கொண்டார். அதில் அவர் பேசும்போது, நாம் இந்த நாட்டின் ஜனநாயகத்தை காக்க தொடர்ந்து முயற்சித்து வருகிறோம். அமெரிக்க சுதந்திரதிற்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது என்பதற்கேற்ப சில வாரங்களுக்கு முன்பு நடந்ததே உதாரணம். அவர்கள் அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்தனர். மோசமான, வெறுக்கத்தக்க பேச்சுகளை அமெரிக்க அதிபர் பேசி வருகிறார். பைடன் இந்த நாட்டின் எதிரி என்று பேசினார்.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

# பினராய் விஜயனுக்கு தமிழக முதல்வர் நன்றி கடிதம்

சென்னை, செப். 05-

கேரள முதல்வர் பினராய் விஜயனுக்கு முதல்வர் மு.க. ஸ்டாலின் நன்றி தெரிவித்து கடிதம் எழுதியுள்ளார்.

கேரள மாநிலம் கோவளத்தில் தென் மண்டல கவுன்சில் கூட்டம் மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா தலைமையில் கடந்த 3-ம் தேதி நடைபெற்றது. இந்த கூட்டத்தில் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின், கேரளா, ஆந்திரா, கர்நாடகா மற்றும் புதுச்சேரி மாநில முதல்வர்கள் பங்கேற்றனர்.

இந்த நிலையில் கேரள முதல்வர் பினராய் விஜயனுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் எழுதியுள்ள கடிதத்தில் கூறப்பட்டிருப்பதாவது,

திருவனந்தபுரத்தில் கடந்த 3-ம் தேதி தென் மண்டல கவுன்சில் கூட்டத்தை சிறப்பாக நடத்தியமைக்காக பாராட்டு தெரிவித்து கொள்கிறேன். விருந்தினர்களாக சென்ற எங்களுக்கு அளிக்கப்பட்ட அன்பான உபசரிப்புகளுக்கு நன்றி. மேலும் சமீப காலத்தில் முன்மொழியப்பட்ட முன்னெடுப்புகளை விரைவில் அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் செல்வோம் என்று நம்புகிறேன். இவ்வாறு அந்த கடிதத்தில் முதல்வர் மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

# இன்று ஆசிரியர் தினம் ஓ.பி.எஸ். வாழ்த்து

சென்னை, செப். 05-

ஆசிரியர் தினம் இன்று கொண்டாடப்படுவதையொட்டி ஓ. பன்னீர் செல்வம் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள வாழ்த்து செய்தியில் கூறப்பட்டிருப்பதாவது,


தமிழகத்தில் பிறந்து, சென்னையில் உள்ள மாநிலக் கல்லூரியில் விரிவுரையாளராகப் பணியைத் தொடங்கி, இந்தியாவில் உள்ள பல்வேறு பல்கலைக்கழகங்களில் பேராசிரியராகவும், துணை வேந்தராகவும் பணியாற்றி, மிக உயர்ந்த பதவியான இந்திய ஜனாதிபதி பதவியை வகித்து ஆசிரியர் பணிக்கு பெருமை தேடித் தந்த டாக்டர் சர்வபள்ளி இராதாகிருஷ்ணனின் பிறந்த நாளான செப்டம்பர் 5-ம் தேதியை ஒவ்வொரு ஆண்டும் ஆசிரியர் தினமாக அனைவரும் கொண்டாடி மகிழ்கிறோம்.

கல்வியின்மை நீங்க வேண்டுமென்ற இலட்சியம், சமூகம் மீதான அக்கறை, கிராமப்புறங்களில் பொருளாதார மற்றும் சுகாதார நிலைகள் உயர வேண்டும் என்ற குறிக்கோள், தன்னலமற்ற சேவை உள்ளிட்டவற்றில் பெரும் பங்கு வகிக்கும் ஆசிரியர்களை பெருமைப்படுத்தும் வகையில் ஆண்டுதோறும் ஆசிரியர் தினம் கொண்டாடப்படுகிறது.

அழியாச் செல்வமாம் கல்வியை போதிக்கும் பெருமைக்குரியவர்கள் ஆசிரியர் பெருமக்கள் என்று சொன்னால் அது மிகையாகாது. இப்படிப்பட்ட உன்னதமான பணியை மேற்கொள்வதற்கு தன்னலமற்ற, தியாக மனப்பான்மை இருந்தால் மட்டும் போதாது, ஆசிரியர் தொழிலை நேசிப்பவராகவும் இருத்தல் வேண்டும் என்பதை மனதில் நிலைநிறுத்தி, தன்னலமின்றி, அர்ப்பணிப்பு உணர்வுடன் தங்கள் பணியை மேற்கொண்டு வருபவர்கள் ஆசிரியர்கள். ஆசிரியர் தினத்தை முன்னிட்டு, மனிதர்கள் தமக்கென வாழாமல் பொது நலத்திற்கென வாழ்ந்தால்தான் நாடும் வீடும் சிறப்படையும் என்பதற்கேற்ப, ஏழையெளிய மக்களின் அறியாமையை நீக்கும் பணியினை அர்ப்பணிப்பு உணர்வுடன் மேற்கொள்ளும் வகையில், மாணவ சமுதாயத்தின் சிறப்பான வாழ்விற்கு அல்லும் பகலும் ஓயாமல் உழைத்திடும் ஆசிரியப் பெருமக்களுக்கு எனது ஆசிரியர் தின நல்வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வாறு அந்த வாழ்த்து செய்தியில் ஓ. பன்னீர் செல்வம் தெரிவித்துள்ளார்.

# அமெரிக்க ஓபன் டென்னிஸ்: 4-வது சுற்றுக்கு முன்னேறினார் ரபெல் நடால்

நியூயார்க்,செப்.05



கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் ஒன்றான அமெரிக்க ஓபன் டென்னிஸ் போட்டி நியூயார்க் நகரில் நடைபெற்று வருகிறது.

22 கிராண்ட்ஸ்லாம் பட்டம் வென்ற சாதனையாளரும் , உலகின் 3-ம் நிலை வீரருமான ரபெல் நடால் ( ஸ்பெயின் ) 3-வது சுற்று ஆட்டத்தில் பிரான்சை சேர்ந்த ரிச்சர்ட் கேஸ்குயிட்டை எதிர்கொண்டார். இதில் நடால் 6-0 , 6-1, 7-5 என்ற நேர் செட் கணக்கில் எளிதில் வென்று 4-வது சுற்றுக்கு முன்னேறினார். கேஸ்குயிட்டுக்கு எதிரான 18 ஆட்டத்திலும் அவர் வெற்றி பெற்றுள்ளார். நடால் 4-வது சுற்றில் அமெரிக்காவை சேர்ந்த 22-ம் நிலை வீரரான பிரான்செஸ் டியாபோவை சந்திக்கிறார். 3-ம் நிலை வீரரான கார்லோஸ் அல்காரஸ் (ஸ்பெயின்) 6-3 , 6-3, 6-3 என்ற செட் கணக்கில் அமெரிக்க வீரர் ஜென்சனை வீழ்த்தினார். பெண்கள் ஒற்றையர் பிரிவில் இகா ஸ்வியாடெக் (போலந்து) 3-வது சுற்றில் அமெரிக்காவை சேர்ந்த லாரன் டோவிசை எதிர்கொண்டார். இதில் இகா 6-3, 6-4 என்ற நேர் செட் கணக்கில் எளிதில் வென்று 3-வது சுற்றுக்கு முன்னேறினார்.

# ஆசிய கோப்பை: ஷார்ஜாவில் விளையாட இந்திய அணிக்கு பயமா?

## முன்னாள் பாகிஸ்தான் வீரர் கேள்வி

சென்னை,செப்.05



15-வது ஆசிய கோப்பை கிரிக்கெட் (20 ஓவர்) போட்டி தொடர் ஐக்கிய அரபு அமீரகத்தில் நடந்து வருகிறது. ரோகித் சர்மா தலைமையிலான இந்திய அணி தனது முதலாவது லீக் ஆட்டத்தில் 5 விக்கெட் வித்தியாசத்தில் பாகிஸ்தானையும், 2-வது லீக் ஆட்டத்தில் 40 ரன்கள் வித்தியாசத்தில் ஹாங்காங்கையும் தோற்கடித்து 'ஏ' பிரிவில் முதலிடத்தை பிடித்து சூப்பர்4 சுற்றுக்கு முன்னேறியது. இந்தியா இதுவரை விளையாடியுள்ள 2 போட்டிகளும் துபாயில் உள்ள மைதானத்தில் நடைபெற்று உள்ளது. இனி இந்திய அணிக்கு வரவிருக்கும் போட்டிகளும் துபாயில் உள்ள மைதானத்தில் நடைபெற இருக்கிறது. இந்த நிலையில் மற்ற அணிகள் சார்ஜா மற்றும் துபாய் என 2 மைதானத்தில் விளையாடும் போது இந்தியா மட்டும் துபாயில் விளையாடுவது குறித்து பாகிஸ்தான் அணியின் முன்னாள் வீரர் சிகந்தர் பாக்ட் கேள்வி எழுப்பியுள்ளார். இதுகுறித்து பேசிய அவர், இந்திய அணி ஏன் துபாயில் மட்டும் விளையாடுகிறது? சார்ஜா அல்லது அபுதாபி மைதானங்களில் விளையாட இந்திய அணி பயப்படுகிறதா ?. இந்தியா - பாகிஸ்தான் போட்டி முதலில் சார்ஜாவில் தான் நடைபெறவிருந்தது. ஆனால் பின்னர் மாற்றப்பட்டது என சிகந்தர் தெரிவித்துள்ளார்.

# ஆசிய கோப்பை: காயம் காரணமாக பாகிஸ்தான் வேகப்பந்து வீச்சாளர் விலகல்

துபாய்,செப்.05

இந்திய அணியின் நட்சத்திர வீரர் ஜடேஜா காயம் காரணமாக ஆசிய கோப்பை மற்றும் டி20 உலகக்கோப்பை கிரிக்கெட் போட்டியில் இருந்தும் விலகி உள்ளார். இந்நிலையில் பாகிஸ்தான் அணியின் நட்சத்திர வேகப்பந்துவீச்சாளர் ஷாநவாஸ் தஹானி காயம் காரணமாக இந்திய அணிக்கு எதிரான போட்டியில் இருந்து விலகி உள்ளார். கடந்த ஞாயிற்றுகிழமை இந்தியாவுக்கு எதிரான போட்டியின் போது தஹானி 2 சிக்சர்கள் விளாசினார் என்பது குறிப்பிடத்தக்கது. பந்துவீச்சிலும் கட்டுக்கோப்பாக பந்துவீசி ரன்களை விட்டு கொடுக்காமல் நெருக்கடி தருவதில் தஹானி வல்லவர். தஹானிக்கு பதிலாக ஹசன் அலி அணியில் சேர்க்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. ஹசன் அலி, இந்தியாவுக்கு எதிராக கடந்த காலங்களில் சிறப்பாக பந்துவீசியவர் என்பது குறிப்பிடத்தக்கது.



சென்னை உயர்நீதிமன்ற வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், சென்னை உயர்நீதிமன்றத்தின் பயன்பாட்டிற்காக பழைய சட்டக்கல்லூரி பாரம்பரிய கட்டிடத்தை புதுப்பிக்கும் பணியினை, முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில், உச்சநீதிமன்ற நீதிபதி சஞ்சய் கிஷன் கவுல் நேற்று தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் உச்சமன்ற நீதிபதிகள் இந்திராபானர்ஜி, வி.இராமசுப்பிரமணியன், எம்.எம்.சுந்தரேஷ், சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி முனிஷ்வர்நாத் பண்டாரி, சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி டி.ராஜா, அமைச்சர்கள் எ.வ.வேலு, எஸ்.இரகுபதி, தலைமைச்செயலாளர் வெ.இறையன்பு, தலைமை வழக்கறிஞர் ஆர்.சுண்முகசுந்தரம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# பாரம்பரிய கட்டிடங்கள் அதிகம் உள்ள நகராக சென்னை உள்ளது

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பேச்சு

சென்னை,செப்.05-

பாரம்பரியமான கட்டிடங்கள் அதிகம் உள்ள நகரமாக சென்னை அமைந்துள்ளது என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் பேசினார்.

சென்னை ஐகோர்ட் வளாகத்தில் நடைபெற்ற ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டிட அடிக்கல் நாட்டு விழாவில் முதல்வர் மு.க. ஸ்டாலின் கலந்து கொண்டு பேசியதாவது,

சென்னை ஐகோர்ட்டின் பயன்பாட்டுக்காகச் சென்னை பழைய சட்டக்கல்லூரிக் கட்டிடத்தைப் புதுப்பித்தல் மற்றும் புதிய கட்டிடத்துக்கான அடிக்கல் நாட்டு விழாவில் கலந்து கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறேன். 1862-ம் ஆண்டு ஆகஸ்ட் 15-ம் நாள் நிறுவப்பட்ட ஐகோர்ட். அந்த வகையில் பார்த்தால், இது 160-வது ஆண்டு. 160 ஆண்டுகள் பழமை என்பது இந்தியாவில் சென்னை, கல்கத்தா, மும்பாய் ஆகிய மூன்று நகரங்களுக்கு மட்டுமே வாய்த்த பெருமை.

நீதி கம்பீரமாக நிலைநாட்டப்படுவதைப் போலவே, இந்த கட்டிடமும் கம்பீரமாக நின்று கொண்டு இருக்கிறது. இந்தோ - சார்சனிக் முறைப்படி கட்டப்பட்ட இந்தக் கட்டிடம், முதல் உலகப் போரின் போது எம்டன் போர்க்கப்பலால் தாக்குதலுக்கு உள்ளானது. இன்றைக்கும் கூட அதன் நினைவாக பாரிமுனையில் கல்வெட்டு வைக்கப்பட்டுள்ளது.

செஞ்சிவப்பு வண்ணமும், கட்டிடத்தின் கூரைகளில் வண்ணக் கண்ணாடிகளும் கொண்டதாக இந்தக் கட்டிடம் அமைக்கப்பட்டது.

கடல் மட்டத்தில் இருந்து 175 அடி உயரத்தில் கலங்கரை விளக்கு முன்பு செயல்பட்டு வந்துள்ளது. தமிழகத்திற்கு மட்டுமல்ல, இந்தியாவுக்கு மட்டுமல்ல, உலக நீதித் துறைக்கே அடையாளமாகச் சுட்டிக்காட்டிச் சொல்லக் கூடிய அளவுக்கு, அழகிய தோற்றத்தோடு, நமது ஐகோர்ட் கட்டிடம் இருந்து வருகிறது.

கம்பீரமான சென்னை ஐகோர்ட் கட்டிடத்துடன், இதற்கு முன்பு சட்டக்கல்லூரி இருந்த வளாகமும் இணைக்கப்படுகிறது. ஐகோர்ட் கட்டிடத்தை போலவே சட்டக் கல்லூரிக் கட்டிடமும் கம்பீரமானதுதான். 1891-ம் ஆண்டு சென்னையில் சட்டக்கல்லூரி தொடங்கப்பட்டது. மெட்ராஸ் சட்டக்கல்லூரி என்று அதற்கு அப்போது பெயர். இந்தியாவுக்கான சட்டத்தை உருவாக்கிக் கொடுத்த மாமேதை அம்பேத்கரின் நினைவாக டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக்கல்லூரி என்று அதற்குப் பெயர் சூட்டியவர் கருணாநிதி. அந்த வளாகத்தையும், அதன் பழமை மாறாமல் மேம்படுத்த வேண்டும் என்று தமிழக பொதுப் பணித்துறை அமைச்சரை கேட்டுக் கொள்கிறேன்.

பாரம்பரியமான கட்டிடங்களைப் பாதுகாப்பது என்பது நமது வரலாற்றைப் பாதுகாப்பது. அதில் நமது அரசு மிக கவனமாக உள்ளது. பாரம்பரியமான கட்டிடங்கள் அதிகம் உள்ள நகரமாக சென்னை அமைந்துள்ளது. பல நூறு ஆண்டு பழமை கொண்ட கோயில்கள், சென்னை கோட்டையும், அதனைச் சுற்றியுள்ள பகுதிகளும், சென்ட்ரல் ரயில் நிலையம், எழும்பூர் ரயில் நிலையம், தேவாலயங்கள், தர்காக்கள், அரசு அருங்காட்சியகம், அமீர் மகால், காவல்துறை தலைமை இயக்குநர் அலுவலக கட்டிடம், காவல்துறை அருங்காட்சியகம், அரசு கவின்கலைக் கல்லூரி, ஆவணக் காப்பகம், ரிப்பன் கட்டிடம், தெற்கு ரயில்வே தலைமையகம், இப்படி எத்தனையோ கட்டிடங்கள் சென்னையின் பாரம்பரியக் கட்டிடமாக அமைந்திருக்கிறது.

இவை பழமையான நமது பண்பாட்டுச் சின்னங்கள். இவற்றின் பழமை மாறாமல் பாதுகாக்கப்பட வேண்டும். அந்த வகையில் பழைய சென்னை சட்டக்கல்லூரி வளாகமும் பழமை மாறாமல் மேம்படுத்தப்படும்.

இவ்வாறு அவர் பேசினார்.



அ.தி.மு.க. பொதுக்குழு தொடர்பான வழக்கில் ஐகோர்ட் சாதகமான தீர்ப்பு அளித்ததை தொடர்ந்து, முன்னாள் முதல்வர் எடப்பாடி கே.பழனிசாமியை, சென்னை பசுமைவழிச்சாலையில் உள்ள அவரது இல்லத்தில் நேற்று, முன்னாள் அமைச்சர் செல்லூர் கே.ராஜூ சந்தித்து, பூங்கொத்து கொடுத்து வாழ்த்து தெரிவித்தார்.

# பள்ளிகளில் தொழிற்கல்வி பாடப்பிரிவு மூடப்படுவதை ரத்து செய்ய வேண்டும்

## தமிழக அரசுக்கு ஓ.பி.எஸ். வலியுறுத்தல்

சென்னை,செப்.05-

அரசுப் பள்ளிகளில் தொழிற்கல்வி பாடப்பிரிவு மூடப்படுவதை தமிழக அரசு ரத்து செய்ய வேண்டும் என்று ஓ.பன்னீர்செல்வம் வலியுறுத்தி உள்ளார்.

இது குறித்து ஓ.பன்னீர்செல்வம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது:-

பொருளாதாரத்தில் ஒரு நாடு சிறக்க வேண்டும் என்றால், தொழிற்கல்வி வளர்ச்சி பெற வேண்டும். இத்தகைய தொழிற்கல்விக்கு அரசு மூடுவிழா நடத்துவது வேதனை அளிப்பதாக உள்ளது.

தமிழகத்தில் முதற்கட்டமாக தற்காலிக ஆசிரியர்கள் உள்ள பள்ளிகள், ஓய்வு பெறும் நிலையில் உள்ள ஆசிரியர்கள் பணியாற்றும் பள்ளிகளில் 11-ம் வகுப்பு தொழிற்கல்வி பாடப்பிரிவுகளை மூடுவதாகவும், அதில் உள்ள மாணவர்கள் வேறு பாடப்பிரிவுக்கு மாற்றப்படுவதாகவும் பள்ளிக்கல்வித்துறை உத்தரவிட்டுள்ளதாக செய்திகள் வெளிவருகின்றன. இது நாட்டின் வளர்ச்சிக்கு ஆபத்தானது என்பதோடு, பொருளாதாரமும் பாதிப்படையும். எனவே, தொழிற்கல்வி பாடப்பிரிவு மூடப்படுவதை அரசு ரத்து செய்ய வேண்டும் என வலியுறுத்துகிறேன்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# சிறையின் மீதுள்ள பார்வை சமூகத்தில் மாற வேண்டும்

## மத்திய அமைச்சர் அமித்ஷா பேச்சு

அகமதாபாத்,செப்.05-

சமூகத்தில் சிறையின் மீது உள்ள பார்வையானது மாற வேண்டும் என மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா தெரிவித்தார்.

குஜராத்தின் ஆமதாபாத் நகரில் கன்காரியா என்ற இடத்தில் 6-வது அகில இந்திய சிறைச்சாலை சந்திப்பு நிகழ்ச்சி நேற்று தொடங்கி 3 நாட்களுக்கு நடைபெறுகிறது. இந்த தொடக்க நிகழ்ச்சியில் மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா கலந்து கொண்டு பேசினார். அப்போது அவர் பேசியதாவது,

குஜராத்தில் முதல் சிறைச்சாலை சந்திப்பு நடந்த போது, நரேந்திர மோடி முதல்வராகவும், நான் குஜராத்தின் உள்துறை அமைச்சராகவும் இருந்தோம். தற்போது 2-வது முறையாக நடைபெறும் நிகழ்ச்சியின் போது, இந்தியாவின் பிரதமராக மோடி உள்ளார். நாட்டின் உள்துறை அமைச்சகத்தின் பொறுப்பை எனக்கு அவர் வழங்கி உள்ளார். உங்கள் அனைவரையும் வரவேற்பதில் நான் அதிகம் மகிழ்கிறேன்.

சமூகத்தில் சிறையின் மீது உள்ள பார்வையானது மாற வேண்டும். சிறைச்சாலையில் உள்ள ஒவ்வொரு நபரும் இயற்கையிலேயே குற்றவாளி கிடையாது. சில சமயங்களில், அதன் சூழ்நிலைகள் அவர்களை குற்றவாளியாக்குகிறது. ஆனால், சமூகம் தொடர்ந்து சீராக செயல்பட வேண்டும் என்பது தேவையான நடைமுறை. இயற்கையிலேயே, பிறவியிலேயே, குற்றங்களில் அடிக்கடி ஈடுபடுபவர்கள் அல்லாத நபர்களை சமூகத்தில் மீண்டும் கொண்டு சென்று சேர செய்யும் பொறுப்பு சிறை நிர்வாகத்திற்கு உள்ளது. வலிமையான இந்தியாவுக்கான மந்திரம், பிரதமர் மோடியால் நாட்டுக்கு தரப்பட்டு உள்ளது. இந்த செய்தியை அனைத்து சிறைச்சாலைக்கும் கொண்டு சேர்க்க வேண்டியதும் சிறை நிர்வாகத்தின் பொறுப்பு ஆகும். இவ்வாறு அமித்ஷா பேசினார்.



சென்னை உயர்நீதிமன்ற வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், சென்னை புரசைவாக்கம் வட்டம், வ.உ.சி. நகரில் ரூ.315 கோடி மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள பன்னடுக்கு ஒருங்கிணைந்த நீதிமன்ற கட்டிடத்திற்கு நேற்று, முதல்வர் மு.க.ஸ்டாலின் அடிக்கல் நாட்டினார். இந்நிகழ்ச்சியில் உச்சமன்ற நீதிபதிகள் சஞ்சய்கிஷன் கவுல், இந்திராபானர்ஜி, வி.இராமசுப்பிரமணியன், எம்.எம்.சுந்தரேஷ், சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி முனிஷ்வர்நாத் பண்டாரி, சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி டி.ராஜா, அமைச்சர்கள் எ.வ.வேலு, எஸ்.இரகுபதி ஆகியோர் கலந்து கொண்டனர்.

# கல்வி செல்வத்தை மாணவர்களுக்கு அள்ளித்தருபவர்கள் ஆசிரியர்கள்!

## முதல்வர் ஸ்டாலின் வாழ்த்து

சென்னை,செப்.05-

காலத்தால் அழிக்க முடியாத கல்விச்செல்வத்தை மாணவர்களுக்கு அள்ளித்தருபவர்கள் ஆசிரியப்பெருமக்களே என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆசிரியர் தின வாழ்த்து கூறியுள்ளார்.

இது குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள வாழ்த்து செய்தியில் கூறப்பட்டிருப்பதாவது,

அறிவு ஒளியூட்டி அறியாமை இருள் அகற்றும் ஆசிரியப் பேரினமே. உங்கள் யாவருக்கும், என் இதயம் நிறைந்த இனிய ஆசிரியர் தின வாழ்த்துகள். மனிதர்களை மதிவாணர்களாக்குவதும், மாமேதைகளாக்குவதும் ஏன் மனிதர்களை மனிதர்களாக்குவதும் கல்விதான். காலத்தால் அழிக்க முடியாத அத்தகைய கல்விச் செல்வத்தை மாணவச் செல்வங்களுக்கு அள்ளித் தருபவர்கள் ஆசிரியப் பெருமக்களே. நாட்டின் எதிர்காலச் சொத்துக்களாம் இளைய தலைமுறையை, நன்முத்துக்களாக உருவாக்கும் பெரும் பொறுப்புக்குச் சொந்தக்காரர்களாகிய ஆசிரியப் பேரினத்தை அரசும், நாட்டோரும், நல்லோரும் மதித்துப் போற்றுவதன் அடையாளமே இந்த ஆசிரியர் தின விழாக் கொண்டாட்டம்.

வகுப்பறை அனுபவங்களின் மூலம் இடையறாது பணி செய்து மென்மேலும் திறம் பெற்று சிறந்த ஆசிரியர்களாய் என்றும் சீர்பெற்று விளங்க நெஞ்சார்ந்த வாழ்த்துகள்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# கொரோனா தொற்று, உக்ரைன் போரின் போது இந்திய அரசு செய்த உதவிகள்!

## வங்கதேச பிரதமர் ஷேக் ஹசீனா புகழாரம்

டாக்கா, செப். 05-

கொரோனா பெருந்தொற்று, உக்ரைன் போரின் போது பிரதமர் மோடி தலைமையிலான இந்திய அரசு பெரும் உதவிகளை செய்தது என வங்கதேச பிரதமர் புகழாரம் சூட்டியுள்ளார்.

வங்கதேச பிரதமர் ஷேக் ஹசீனா இந்தியாவுக்கு இன்று சுற்றுப் பயணம் மேற்கொள்ள உள்ளார். இந்நிலையில், அவர் ஊடகத்திற்கு அளித்துள்ள பேட்டி ஒன்றில்,

கொரோனா பெருந்தொற்று விரைவாக பரவிய காலத்தில் நட்பு ரீதியிலான அடிப்படையில் அண்டை நாடுகளுக்கு கொரோனா தடுப்பூசிகளை பிரதமர் மோடி தலைமையிலான இந்திய அரசு வழங்கி பெரும் உதவிகளை செய்து இன்முகம் காட்டியது. வேற்றுமைகள் இருப்பினும், அவற்றை பேச்சுவார்த்தை வழியே தீர்த்து கொள்ள வேண்டும். இந்தியா மற்றும் வங்கதேசம் ஆகிய இரு நாடுகளும் அதனையே செய்தன. இரு நாடுகளுக்கும் இடையே நெருங்கிய ஒத்துழைப்பு காணப்படுகிறது.

ரஷ்யா மற்றும் உக்ரைன் இடையேயான போரின்போது, வங்கதேச மாணவர்கள் பலர் சிக்கி தவித்தனர்.

பின்பு போலந்துக்கு வந்தனர். அவர்களை இந்திய மாணவர்களை மீட்டது போல், மீண்டும் சொந்த நாட்டுக்கு கொண்டு வந்து சேர்த்தது இந்திய அரசு. இந்த தொடக்க முயற்சிக்காக பிரதமர் மோடிக்கு நான் நன்றி தெரிவித்து கொள்கிறேன்.

வங்கதேசம் மட்டுமின்றி, சில தெற்காசிய நாடுகளுக்கும் கொரோனா தடுப்பூசிகளை வழங்கி, உண்மையில் மிக மிக உதவியாக பிரதமர் மோடி இருந்ததற்கு அவருக்கு நன்றி தெரிவித்து கொள்கிறேன்.

அதுதவிர்த்து, நாங்கள் சொந்த பணம் கொடுத்தும் தடுப்பூசிகளை வாங்கினோம். பிற நாடுகளும் வங்கதேசத்திற்கு தேவையான தடுப்பூசிகளை வழங்கி பங்காற்றின என்று ஷேக் ஹசீனா தெரிவித்தார்.



சென்னை கலைவாணர் அரங்கில், தமிழ்நாடு அரசின் சார்பில், 2000 முதல் 2014-ம் ஆண்டு வரையிலான திரைப்படம், சின்னத்திரை, தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவன மாணவர்களுக்கான விருதுகள் வழங்கும் விழாவில், அமைச்சர்கள் மு.பெ.சாமிநாதன், மா.சுப்பிரமணியன், பி.கே.சேகர்பாபு ஆகியோர் வழங்கினர். அருகில் மாநகராட்சி மேயர் ஆர்.பிரியா, செய்தித்துறை செயலாளர் மகேசன் காசிராஜன் உடனிருந்தனர்.

## சென்னையில் திரைப்பட விருதுகள் வழங்கும் விழா:

# கலைஞர்களுக்கு விருதுகளை அமைச்சர்கள் வழங்கினர்

சென்னை,செப்.05-

சென்னை கலைவாணர் அரங்கில் நேற்று திரைப்பட விருதுகள் வழங்கும் விழா நடந்தது. இந்த விழாவில் கலைஞர்களுக்கு விருதுகளை அமைச்சர்கள் மா.சுப்ரமணியன், சேகர் பாபு, வெள்ளக்கோவில் சுவாமிநாதன், மேயர் பிரியா ஆகியோர் விருதுகளை வழங்கினர்.

தமிழக அரசு சார்பில் ஒவ்வொரு ஆண்டும் திரைப்பட விருதுகள் அறிவிக்கப்படுகின்றன. கடந்த சில ஆண்டுகளாக இது தடைப்பட்டு இருந்த நிலையில் மீண்டும் திரைப்பட விருதுகள் அறிவிக்கப்பட்டன. இந்நிலையில் நேற்று சென்னை கலைவாணர் அரங்கில் இதற்கான விழா நடந்தது. விருதுக்கு தேர்வான கலைஞர்களுக்கு தமிழக அரசின் திரைப்பட விருதுகள் வழங்கப்பட்டன.

இவ்விழாவில் 2009 முதல் 2014-ம் ஆண்டு வரை தேர்வு செய்யப்பட்ட சிறந்த திரைப்படங்களின் தயாரிப்பாளர்கள், சிறந்த நடிகர், நடிகையர் மற்றும் தொழில்நுட்பக் கலைஞர்கள் என 160 பேருக்கு விருது வழங்கப்பட்டது. இதே போல் சின்னத்திரை விருதுகள் 2009 முதல் 2013-ம் ஆண்டு வரை சிறந்த நெடுந்தொடர்களின் தயாரிப்பாளர்கள், சிறந்த வாழ்நாள் சாதனையாளர்கள், சிறந்த கதாநாயகன் மற்றும் தொழில்நுட்பக் கலைஞர்கள் என 81 பேருக்கு விருது வழங்கப்பட்டது.

எம்.ஜி.ஆர் திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவன மாணவர்களுக்கான விருதுகள் 2008-09-ம் கல்வியாண்டு முதல் 2013-14-ம் கல்வியாண்டு வரை பயின்றவர்கள் தயாரித்த சிறந்த குறும்படங்களின் மூலம் சிறந்த இயக்குநர்கள், ஒளிப்பதிவாளர்கள், ஒலிப்பதிவாளர்கள், படத்தொகுப்பாளர்கள், படம் பதனிடுபவர்கள் என 30 பேருக்கு விருது வழங்கப்பட்டது. மொத்தம் 314 பேருக்கு ரூ.52.75 லட்சம் மதிப்புள்ள காசோலை, தங்கப்பதக்கம், நினைவுப்பரிசு மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

அமைச்சர்கள் மா.சுப்ரமணியன், சேகர் பாபு, வெள்ளக்கோவில் சுவாமிநாதன், மேயர் பிரியா ஆகியோர் விருதுகளை வழங்கினர். விக்ரம், கரண், சரத்பாபு, பாண்டிராஜ், மஹதி, விக்ரம் பிரபு, வசந்தபாலன், பிரபு சாலமன், இமான், ஸ்வேதா மோகன், தம்பி ராமையா, சமுத்திரகனி, மாஸ்டர் கிஷோர், ஸ்ரீராம், ஆடுகளம் நரேன், ஒய்.ஜி.மகேந்திரன், சங்கீதா, கள வாணி எஸ்.திருமுருகன், பொன்வண்ணன், சற்குணம், பாடகர் கார்த்திக் உள்ளிட்ட ஏராளமான திரைக்கலைஞர்கள் நேரில் வந்து விருதுகளை பெற்றுக் கொண்டனர்.